# தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021–2022

## மானியக் கோரிக்கை எண். 32


## திரு. சி.வி. கணேசன்
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2021

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| **1. தொழிலாளர் துறை** | | | |
| 1.1. | செயல்பாடுகள் | | 6 |
| | 1.1.1. | முறைப்படுத்தும் பணிகள் | 6 |
| | 1.1.2. | நலத்திட்ட பணிகள் | 7 |
| 1.2. | நிர்வாக அமைப்பு | | 8 |
| 1.3. | தொழிலாளர் துறையில் அமலாக்கப்படும் சட்டங்கள் | | 9 |
| | 1.3.1. | தொழில் உறவுகள் தொடர்புடைய சட்டங்கள் | 9 |
| | 1.3.2. | ஊதியம் வழங்குவது சம்பந்தமான சட்டங்கள் | 16 |
| | 1.3.3. | சமூக பாதுகாப்பு சட்டங்கள் | 21 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | *1.3.4.* | வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல் தொடர்பான சட்டங்கள் | *28* |
| | *1.3.5.* | நுகர்வோர் பாதுகாப்பு சார்ந்த சட்டங்கள் | *47* |
| *1.4.* | நல வாரியங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள் | | *51* |
| | *1.4.1.* | தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் | *51* |
| | *1.4.2.* | அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் | *56* |
| *1.5.* | தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் | | *67* |
| *1.6.* | தமிழ்நாடு கட்டுமானக் கழகம் | | *73* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| 1.7. | கோவிட்-19 பெருந்தொற்று தொடர்பான நிவாரண நடவடிக்கைகள் | | 75 |
| | 1.7.1. | கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் பிற அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் | 75 |
| 1.8. | நீடித்த வளர்ச்சி இலக்குகள் | | 80 |
| 1.9. | தொழில் நடத்துவதில் எளிய நடைமுறை | | 87 |
| 1.10. | இணைய வழி வழக்கு மேலாண்மை | | 90 |
| 1.11. | தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் அறிமுகம் | | 90 |
| 1.12. | சிறப்பு சாதனைகள் | | 92 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| **2. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்** | | | |
| *2.1.* | நிர்வாக அமைப்பு | | *102* |
| | *2.1.1.* | தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு | *102* |
| | *2.1.2.* | கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்க பிரிவு | *103* |
| *2.2.* | தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களை தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்தல் | | *104* |
| *2.3.* | தொழிற்சாலைகளில் எளிதாக தொழில் தொடங்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல் | | *105* |
| | *2.3.1.* | ஆய்வு முறை | *107* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| 2.4. | சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம் | | 112 |
| 2.5. | நீடித்த வளர்ச்சிக்கான நிலையான இலக்கிற்கான குறியீடுகளை மேம்படுத்த இவ்வியக்ககம் சார்ந்த முயற்சிகள் | | 114 |
| 2.6. | பட்டாசு தொழிற்சாலை ஆய்வுகள் | | 117 |
| | 2.6.1. | பட்டாசு தொழிற்சாலைகளுக்கான சிறப்பு நடமாடும் கண்காணிப்பு குழு | 119 |
| | 2.6.2. | பட்டாசு தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம் | 121 |
| 2.7. | தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதல் | | 123 |
| 2.8. | இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகள் | | 124 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | 2.8.1. | பெரும்விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் | 125 |
| 2.9. | மனை மதிப்பீட்டு குழு | | 126 |
| 2.10. | தொழிற்சாலைகளில் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு குறித்த செயல்பாடுகள் | | 127 |
| | 2.10.1. | உடல்நல மேம்பாட்டு செயல்பாடுகள் | 127 |
| | 2.10.2. | இரைச்சலின் அளவினை கண்காணித்தல் | 129 |
| | 2.10.3. | பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு | 130 |
| | 2.10.4. | பாதுகாப்பு பயிற்சி | 131 |
| | 2.10.5. | அழுத்தக்கலன் பாதுகாப்பினை உறுதி செய்தல் | 132 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| *2.11.* | தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் | | *133* |
| *2.12.* | பாதுகாப்பு விருதுகள் வழங்கும் திட்டம் | | *135* |
| | *2.12.1.* | மாநில பாதுகாப்பு விருதுகள் | *135* |
| | *2.12.2.* | உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் | *136* |
| *2.13.* | கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம், *1996* மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாளர் நல சட்டங்களை கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் அமலாக்கம் செய்தல் | | *137* |
| | *2.13.1.* | கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் எளிமையாக்கப்பட்ட தொழில் தொடங்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல் | *139* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | *2.13.2.* | ஆய்வு முறை | *141* |
| *2.14.* | சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம் | | *143* |
| *2.15.* | கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு | | *145* |
| *2.16.* | சிறப்பு முயற்சிகள் | | *146* |
| | *2.16.1.* | நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களுக்கான இணைய கண்காணிப்பு மையம் *(Online Monitoring Centre)* | *146* |
| | *2.16.2.* | இவ்வியக்கக கட்டடம் மற்றும் இதர கட்டுமான பிரிவு அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் | *147* |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | *2.16.3.* | கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு குறும்படங்கள், நிலையான பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் பாதுகாப்பு தகவல் பலகைகள் | *148* |
| | *2.16.4.* | பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளை தடுக்க பாதுகாப்பு குறும்படங்கள் | *148* |
| | *2.16.5.* | அலுவலர்கள் உடன் எடுத்து செல்லக்கூடிய பல்வகை வாயு பகுப்பாய்விகள் | *149* |
| | *2.16.6.* | கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் | *149* |
| **3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை வேலைவாய்ப்பு பிரிவு** | | | |
| *3.1.* | வேலைவாய்ப்பு பிரிவின் நிர்வாக கட்டமைப்பு | | *153* |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 3.2. | வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகள் | 156 |
| 3.3. | வேலைவாய்ப்பு இணையதளம் (www.tnvelaivaaippu.gov.in) | 157 |
| 3.4. | சிறப்பு புதுப்பித்தல் சலுகை | 159 |
| 3.5. | "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் பெறப்பட்ட மனுக்கள் மீதான நடவடிக்கை | 160 |
| 3.6. | மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களின் தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்கும் செயல்பாடுகள் | 161 |
| 3.7. | மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் | 162 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 3.8. | கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இலவச பயிற்சி வகுப்புகள் | 164 |
| 3.9. | மெய்நிகர்கற்றல் இணையதளம் (www.tamilnaducareerservices.tn.gov.in) | 165 |
| 3.10. | தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரம் | 167 |
| 3.11. | திறன் தமிழகம் இதழ் | 168 |
| 3.12. | மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள் | 169 |
| 3.13. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வேலைநாடுநர்களுக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள் | 170 |
| 3.14. | பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் | 171 |
| 3.15. | மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம் | 172 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 3.16. | வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டம் | 172 |
| 3.17. | மாற்றுத் திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டம் | 174 |
| 3.18. | மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் | 176 |
| 3.19. | தனியார் துறை பணியமர்த்தல் | 177 |
| 3.20. | தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம் *(www.tnprivatejobs.tn.gov.in)* | 180 |
| 3.21. | ஒரு நாள் – ஒரு செயல்பாடு | 182 |
| 3.22. | நீடித்த வளர்ச்சி இலக்கு | 183 |
| **பயிற்சி பிரிவு** | | |
| 3.23. | நிர்வாக அமைப்பு | 188 |
| 3.24. | முக்கிய திறன் மேம்பாட்டு திட்டங்கள் | 189 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| *3.25.* | கைவினைஞர் பயிற்சித் திட்டம் *(CTS)* | | *190* |
| | *3.25.1.* | அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் | *191* |
| | *3.25.2.* | பாதிக்கப்படும் பிரிவினரை ஊக்குவித்தல் | *192* |
| | *3.25.3.* | மகளிருக்கான அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் | *195* |
| | *3.25.4.* | சிறைவாசிகளுக்கான அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் | *197* |
| | *3.25.5.* | மாற்றுத் திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு | *197* |
| *3.26.* | மாணவர்களுக்கான நல திட்டங்கள் | | *198* |
| *3.27.* | அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் | | *199* |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| *3.28.* | பயிற்சிக்கட்டணத்தை திரும்ப வழங்குதல் | *200* |
| *3.29.* | தொழிற் தேர்வு மற்றும் சான்றிதழ் வழங்குதல் | *202* |
| *3.30.* | பொது மற்றும் தனியார் கூட்டமைப்பின் *(Public Private Partnership)* வழியாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை தரம் உயர்த்துதல் | *204* |
| *3.31.* | தொழில் மதிப்பு விரிவாக்கத்திற்கான திறன்களை வலுப்படுத்துதல் *(STRIVE)* | *206* |
| *3.32.* | தொழிற்பயிற்சி நிலையத்தினை மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக மேம்படுத்துதல் | *212* |
| *3.33.* | தொழிற்பழகுநர் பயிற்சி திட்டம் *(ATS)* | *213* |
| *3.34.* | தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்புத் திட்டம் *(National Apprenticeship Promotion Scheme (NAPS)* | *214* |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| *3.35.* | பயிற்சி பெறாதவர்களை *(Freshers)* நிறுவனங்களில் தொழிற் பழகுநர்களாக சேர்த்தல் | *215* |
| *3.36.* | மாநில தொழிற்பழகுநர் கண்காணிப்பு குழுமம் *(State Apprenticeship Monitoring Cell)* | *216* |
| *3.37.* | தொழிற்பள்ளிகள் | *218* |
| *3.38.* | விரிவு படுத்தப்பட்ட கற்றல் முறைகள் | *219* |
| *3.39.* | கௌசலாச்சார்யா விருது | *224* |
| *3.40.* | டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது | *225* |
| *3.41.* | தொழிற்சாலைகளின் பங்களிப்புகள் | *226* |
| **4. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்** | | |
| *4.1.* | தேசிய திறன் கட்டமைப்பு தரநிலை *(NSQF)* | *229* |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 4.2. | பயிற்சிகளுக்கான சுதந்திரமான மதிப்பீடு மற்றும் சான்றளித்தல் | 230 |
| 4.3. | பயிற்சி நிறுவனங்களுக்கான அங்கீகாரம் வழங்குதல் | 230 |
| 4.4. | 2020-2021 ஆம் ஆண்டு பயிற்சியளிக்கப்பட்டோர் விவரங்கள் | 232 |
| 4.5. | தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக இணையதளத்தின் சிறப்பம்சங்கள் | 236 |
| 4.6. | உலகத்திறன் போட்டிகள் | 238 |
| 4.7. | மேம்பட்ட திறன் பயிற்சி | 239 |
| 4.8. | அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் – திறன் மதிப்பீடு மற்றும் சான்றளித்தல் *(Recognition of Prior Learning – RPL)* | 241 |
| 4.9. | பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா 2.0 & 3.0 | 243 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| *4.10.* | சங்கல்ப் *(SANKALP)* - உலக வங்கி நிதி உதவி திட்டம் | | *244* |
| *4.11.* | உயர் திறன் மேம்பாட்டு மையங்கள் | | *248* |
| *4.12.* | பல்நோக்கு திறன் மேம்பாட்டு மையம் | | *250* |
| *4.13.* | புதிய முயற்சிகள் | | *251* |
| *4.14.* | நீடித்த வளர்ச்சி இலக்குகள் | | *255* |
| **5. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்** | | | |
| *5.1.* | செயல்பாடுகள் | | *258* |
| *5.2.* | பதிவு | | *259* |
| *5.3.* | பணியமர்த்தல் | | *260* |
| | *5.3.1.* | வெளிநாடு | *260* |
| | *5.3.2.* | உள்நாடு | *260* |
| *5.4.* | புதிய முயற்சிகள் | | *261* |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| | **6. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்)** | |
| 6.1. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள் | 263 |
| 6.2. | திட்டத்தின் நிதி ஆதாரம் | 264 |
| 6.3. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் | 264 |
| 6.4. | தமிழ்நாடு தொ.அ.ஈ. திட்ட நிர்வாக அமைப்பு | 266 |
| 6.5. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் இயங்கும் ஆயுஷ் *(AYUSH)* பிரிவுகள் | 267 |
| 6.6. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் பயன்கள் | 270 |
| 6.7. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் இதர உதவிகள் | 279 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| 6.8. | மருத்துவமனை மேம்பாட்டுக் குழு | | 281 |
| 6.9. | காப்பீட்டு பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் செய்து கொண்ட மருத்துவ செலவினை திரும்ப வழுங்குதல். | | 281 |
| | 6.9.1. | செறிவுத்திட்டம் (ஒப்பந்தம் செய்து கொண்ட மருத்துவமனைகள்) | 281 |
| 6.10. | கோவிட்-19 நிவாரணத் திட்டம் | | 283 |
| 6.11. | கோவிட்-19 தொற்று காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | | 283 |

# தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

## *1.* தொழிலாளர் துறை

தொழில் முதலீட்டிற்கான முதன்மையான மையமாகத் திகழும் தமிழ்நாடு, அனைவரது நலனையும் உள்ளடக்கிய முழுமையான வளர்ச்சியை எட்ட எப்பொழுதும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் துறை, தொழிலாளர்களின் சட்டப்பூர்வமான உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கு பணிப் பாதுகாப்பு, ஊதிய பாதுகாப்பு, சமூக பாதுகாப்பினை உறுதி செய்வதோடு, தொழிற் தகராறுகளை சமரசம் செய்து தீர்த்து வைப்பதன் மூலம் மாநிலத்தில், தொழில் நல்லிணக்கத்தினையும், அமைதியினையும் உறுதி செய்கிறது. தொழிலாளர் நலனும், பொருளாதார வளர்ச்சியும் ஒன்றுடன் ஒன்று சார்ந்த உறவு முறை கொண்டுள்ளதால், தொழிலாளர் நலனை உயர்த்துவதில் முக்கிய பங்காற்றுவதன்

மூலம் தொழிலாளர் துறை மாநிலத்தின் சீரிய தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

தொழில் முனைவோர் தங்கள் தொழிலினை சுமூகமாகவும் சிக்கலில்லாமலும் நடத்துவதற்கும், மாநிலத்தில், முதலீட்டாளர்களுக்கு இணக்கமான நிலையினை உருவாக்கிடவும், இத்துறை தொழில்நுட்பம் சார்ந்து இயங்கக்கூடிய மாற்றத்திற்குரிய முயற்சிகளை மேற்கொண்டு தொழில் நடத்துவதில் எளிய நடைமுறையினை செயல்படுத்திடவும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இத்திட்டம், தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்துவதில் வெளிப்படைத் தன்மையையும், பொறுப்பினை சரிவர நிறைவேற்றுவதையும் அதிகரிக்க வழிவகை செய்கிறது.

குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கும், கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை ஒழிப்பதற்கும், இம்மாநில அரசு அதிக

முக்கியத்துவம் அளிப்பதோடு, மாநிலத்தில் இத்தகு சமூக தீமைகளை அகற்றுவதற்கும் தொழிலாளர் துறை, மற்ற தொடர்புடைய துறைகளுடன் சேர்ந்து செயல்படுகிறது.

பல்வேறு நலத்திட்டங்களின் மூலம் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பினை உறுதி செய்திடவும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்களுடன் நடமாடும் சுகாதார மையங்கள் மூலமாக அவர்களின் பணியிடத்தில் மருத்துவ வசதி வழங்கிடவும் தொழிலாளர் துறையின் கீழ் *18* அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், தொழிலாளர் நலன் தொடர்புடைய பெரும்பாலான இனங்கள் பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ளதால், ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசிற்கு அவற்றின்

மீது அதிகாரம் உள்ளது. பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள, தொடர்புடைய விவரங்கள் பின்வருமாறு:-

22. தொழிற்சங்கங்கள்; தொழில் மற்றும் தொழிற்தகராறுகள்

23. சமூக பாதுகாப்பு மற்றும் சமூக காப்பீடு; வேலை வாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை.

24. பணி நிலைமைகள், வருங்கால வைப்புநிதி, நிர்வாகத்தின் பொறுப்புகள், பணியாளர் இழப்பீடு, செயல்பாடற்ற மற்றும் முதியோர் ஓய்வூதியம் மற்றும் மகப்பேறு நலன் உள்ளிட்ட தொழிலாளர்களின் நலன்.

33-A. தர நிர்ணயம் நீங்கலான பிற எடைகள் மற்றும் அளவைகள்

தொழிலாளர்களால் சமர்பிக்கப்படும் கேட்பு மனுக்களை முடிப்பதற்கான காலத்தினை குறைத்து விரைவில் அவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிடவும், பதிவுபெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனுக்காக புதிய திட்டங்களை செயல்படுத்திடவும், அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு புதிய தொழில் நுட்பம் மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப பயிற்சிகள் வழங்கப்படுவதன் மூலம் அவர்களின் சேவைகளுக்கு உயர் ஊதியத்தினை உறுதி செய்திடவும், அவர்களுக்கான ஊதியம் மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்திடும் வகையில் அத்தொழிலாளர்களின் சேவைகளை ஒரு பொது செயலியில் ஒன்றுசேர்த்திட அரசு சீரிய நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

## 1.1. செயல்பாடுகள்

தொழிலாளர் துறை முறைப்படுத்துதல் மற்றும் நலத்திட்டப் பணிகளை கொண்டுள்ளது.

### 1.1.1. முறைப்படுத்தும் பணிகள் பின்வருமாறு

1. ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் இயற்றப்பட்ட பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களை அமலாக்கம் செய்தல்.
2. தொழிலாளர் உரிமைகள் காத்திட நீதிசார் பணிகளை மேற்கொள்ளுதல்.
3. தொழிற்தகராறுகளில் சமரசப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைத்தல்.
4. நுகர்வோர் நலன் காத்திட சட்டமுறை எடையளவுச் சட்டம், 2009 மற்றும் சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011 அமலாக்கம் செய்தல்.
5. குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் மற்றும் அமலாக்கம் செய்தல்.
6. கொத்தடிமைத் தொழிலாளர் முறையை அகற்றி மறு வாழ்வு அளித்தல்.

7. குழந்தைத் தொழிலாளர் முறையினை அனைத்து பணிகளிலும் நீக்குதல், அபாயகரமான பணிகளில் வளரிளம் பருவத்தினரை பணியமர்த்துவதை தடுப்பதற்கான செயல்பாடுகள்.

8. ஒப்பந்தத் தொழிலாளர்கள் / மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயரும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்.

### *1.1.2.* நலத்திட்ட பணிகள்

1. நலவாரியங்கள் மூலம் அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு பயன்கள் வழங்குதல்.

2. பணியின் போது ஏற்படும் விபத்தின் காரணமாக மரணமடைந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு / ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்க ஆணையிடுதல்.

3. நடமாடும் மருத்துவமனைகள், அங்கன்வாடி நிலையங்கள் மற்றும் தங்கும் இடங்கள் போன்ற சிறப்பு சேவைகள் வழங்குதல்.

4. பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

5. தொழிலாளர் மேலாண்மை தொடர்பான கல்வி கற்பித்தல் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்குதல்.

## 1.2. நிர்வாக அமைப்பு

தமிழ்நாட்டில், தொழிலாளர் துறையானது, 1920-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதன் தலைமை அலுவலகம் சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள டி.எம்.எஸ் வளாகத்தில் அமைந்துள்ளது. இத்துறையில் தொழிலாளர் ஆணையர் தலைமையில், 12 தொழிலாளர் கூடுதல் ஆணையர்கள், 16 தொழிலாளர் இணை ஆணையர்கள்,

24 தொழிலாளர் துணை ஆணையர்கள், 103 தொழிலாளர் உதவி ஆணையர்கள், 2 உதவி மருத்துவர்கள் (தோட்டங்கள்), 1 கணக்கு அலுவலர் மற்றும் 1 மக்கள் தொடர்பு அலுவலர், 70 தொழிலாளர் துணை ஆய்வர்கள், 220 தொழிலாளர் உதவி ஆய்வர்கள், 101 முத்திரை ஆய்வர்கள் மற்றும் 1,345 பணியாளர்கள் ஆகியோர் உட்பட அனுமதிக்கப்பட்ட 1,897 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளனர்.

## 1.3. தொழிலாளர் துறையில் அமலாக்கப்படும் சட்டங்கள்

தொழிலாளர் துறையில் அமலாக்கம் செய்யப்படும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் விவரம் பின்வருமாறு :-

### 1.3.1. தொழில் உறவுகள் தொடர்புடைய சட்டங்கள்

வேலையளிப்போர், தொழிலாளர்கள், தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகள் ஆகியோரிடையே நல்லுறவினை ஏற்படுத்துதல், கூட்டு பேரம்,

தொழிற்தாவாக்களை தீர்த்து வைத்தல், தொழிலாளர்களின் பணி நிலைமைகள் குறித்த விவரங்கள் தொழில் உறவுகள் ஆகியவை தொடர்புடைய சட்டங்கள் ஆகும்.

### *1.3.1.1.* தொழிற் தகராறுகள் சட்டம் , *1947*

இச்சட்டத்தில் தொழிற்தகராறுகள் தீர்த்து வைக்கும் முறைகளும், சமரச ஒப்பந்தங்கள் மற்றும் தீர்வங்களை மீறுவதற்கு தண்டனை அளிப்பது குறித்தும் விளக்கப்பட்டுள்ளதோடு தொழிலாளர் விரோத நடவடிக்கைகள், சட்ட விரோத வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பை தடுப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் சமரச பணிகள் மேற்கொள்ள தொழிலாளர் துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

*01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில் சமரச அலுவலர்களின் தலையீட்டின்

மூலம் *1,168* தொழிற்தாவாக்களில் சுமூக முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. பல்வேறு தொழில் நிறுவனங்களில் *8* வேலை நிறுத்தங்கள் சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

**(அ) 2020-2021-ஆம் ஆண்டில் தீர்வு காணப்பட்ட முக்கிய தொழிற்தகராறுகள்**

*1)* தொழிற்தகராறு சட்டப்பிரிவு *12(3)*ன்கீழ் நிர்வாகம், *M/s. Shardlow India Limited,* ஒசூர் மற்றும் தொழிற்சங்கம் சிம்சன் மற்றும் குரூப் கம்பெனிஷ் ஒர்க்கர்ஸ் யூனியன் மற்றும் சிம்சன் மற்றும் குரூப் கம்பெனிஷ் ஸ்டாப் யூனியன் ஆகியோரிடையே தொழிலாளர் ஊதிய உயர்வு ஒப்பந்தம் *04.02.2021* அன்று தொழிலாளர் தனி இணை ஆணையர் சென்னை முன்னர் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஊதிய ஒப்பந்தமானது *01.12.2020* முதல் *31.03.2022* வரை அமலில் இருக்கும். இவ்வொப்பந்தத்தில் பயனடைந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை மொத்தம் *34*.

*2)* பாட்டா இந்தியா லிட், ஓசூர் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் முந்தைய ஊதிய உயர்வு ஒப்பந்தம் *31.03.2019* அன்று முடிவடைந்ததால் ஓசூர் பாட்டா தொழிலாளர் சங்க பிரதிநிதிகளிடமிருந்து புதிய ஊதிய ஒப்பந்தம் குறித்து, தொழிற்தகராறுகள் சட்டத்தின் கீழ் ஒப்பந்தம் ஏற்படுத்தி தரக்கோரி மனு பெறப்பட்டு, கூடுதல் தொழிலாளர் ஆணையர் (சமரசம்) முன்னிலையில் நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு *13.07.2021* அன்று புதிய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வொப்பந்தம் *01.04.2019* முதல் *30.11.2023* வரை *4* வருடங்கள் *8* மாதங்கள் அமலில் இருக்கும். மேலும் இவ்வொப்பந்தத்தால் *102* பாட்டா இந்தியா லிமிடெட் தொழிலாளர்கள் அடிப்படை சம்பளம் மற்றும் இதர பணப்பலன்கள் பெற்று பயனடைவார்கள்.

## (ஆ) தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாயங்கள்

தொழில் அமைதியை நிலைநாட்டுவதற்கும், தொழில் நல்லுறவினை மேம்படுத்துவதற்கும், தொழிற்தாவாவின் தொடர்புடைய பிரச்சினைகளின் தன்மையின் அடிப்படையில் முடிவு காணப்படாத அனைத்து தாவாக்களும் தொழிற் தகராறுகள் சட்டம் பிரிவு *10*-ன்கீழ் தொழிலாளர் நீதிமன்றங்கள் அல்லது தொழில் தீர்ப்பாயத்திற்கு தீர்வம் வழங்குவதற்காக அனுப்பப்படுகின்றன.

*1947*-ஆம் வருடத்திய தொழிற்தகராறுகள் சட்டத்தின் அட்டவணை இரண்டில் குறிப்பிட்டுள்ள இனங்கள் மீது தொழிலாளர் நீதிமன்றங்கள் தீர்வங்கள் வழங்கி உத்தரவுகள் பிறப்பிக்கும் மன்றமாக செயல்படுகின்றன. சமரச பேச்சுவார்த்தைகளில் சுமூக தீர்வு காண இயலாத தொழிற்தகராறுகளில் தீர்வம் வழங்க தமிழ்நாட்டில் *18* தொழிலாளர் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

சென்னையில் 4 தொழிலாளர் நீதிமன்றங்களும், வேலூர், கோவை மற்றும் மதுரையில் தலா 2 தொழிலாளர் நீதிமன்றங்களும், சேலம், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, காஞ்சிபுரம், கும்பகோணம், ஓசூர் மற்றும் உதகமண்டலத்தில் தலா ஒரு தொழிலாளர் நீதிமன்றமும் செயல்படுகின்றன. 2020-ஆம் ஆண்டில் தொழிலாளர் நீதிமன்றங்கள் 570 வழக்குகளை முடித்துள்ளது.

1947-ஆம் வருடத்திய தொழிற்தகராறுகள் சட்டம், அட்டவணை 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள் மீது தீர்வு காணும் மன்றமாக தொழிற் தீர்ப்பாயம் செயல்பட்டு வருகிறது. சென்னையில் இயங்கி வரும், இத்தீர்ப்பாயம் 2020-ஆம் ஆண்டில் 2 வழக்குகளில் தீர்வு கண்டுள்ளது.

### *1.3.1.2.* தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்*)* சட்டம்*, 1946*

தொழிலாளர்களின் பணி நிலைமைகளை வரையறுக்க சான்றளிக்கப்பட்ட நிலையாணைகளை வேலையளிப்போர் பெறுவதை இச்சட்டம் அவசியமாக்குகிறது*. 01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில் *256* தொழில் நிறுவனங்களுக்கு நிலையாணைகள் சான்று அளிக்கப்பட்டுள்ளது*.*

### *1.3.1.3.* தொழிற்சங்கங்கள் சட்டம்*, 1926*

தொழிற்சங்கங்களைப் பதிவு செய்திடவும் மற்றும் தொழிற்சங்க பதிவு குறித்த நடைமுறையினை வகுத்திடவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது*. 01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில் *179* தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன*.*

### *1.3.2.* ஊதியம் வழங்குவது சம்பந்தமான சட்டங்கள்

இச்சட்டங்கள் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் மற்றும் மறுநிர்ணயம் செய்தல், உரிய காலத்தில் சம்பளம் மற்றும் மிகை ஊதியம் வழங்குதல், பெண் தொழிலாளர்களுக்கு ஆண்களுக்கு இணையான சம ஊதியம் வழங்குவதனை உறுதி செய்கிறது.

#### *1.3.2.1.* சம்பளப் பட்டுவாடாச் சட்டம், *1936*

இச்சட்டம், பணியாளர்களுக்கு உரிய காலத்தில் சம்பளம் வழங்கப்படுவதையும், ஊதியத்தில் சட்ட விரோத பிடித்தத்தை தடுக்கவும், கேட்பு மனுக்களை விரைந்து முடிக்கவும் வழிவகை செய்கிறது.

சம்பள பட்டுவாடாச் சட்டத்தின் கீழ் *01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில் *11,274* ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மேலும், இக்காலகட்டத்தில் நீதிமன்றங்கள் மூலம் *9* வழக்குகள் முடிக்கப்பட்டு பல்வேறு முரண்பாடுகளுக்காக

வேலையளிப்பவர்களுக்கு ரூ.24,800/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும், 126 கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு, ரூ.45,33,449/- தொழிலாளர்களுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

### *1.3.2.2.* குறைந்தபட்ச ஊதியச் சட்டம், *1948*

1948-ஆம் வருட குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் நோக்கமானது இச்சட்டத்தின் அட்டவணையில் உள்ள தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்வதாகும். இச்சட்டம் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதோடு தொழிலாளர்களின் திறனையும் பாதுகாக்கிறது.

***I. 01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில் கீழ்க்கண்ட தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் முதன் முறையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.**

*i)* துணி மடிக்கும் தொழில்

*ii)* மண்பாண்டங்கள் தொழில்

**II. *01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில் கீழ்க்கண்ட தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.**

*i)* தச்சு மற்றும் கருமார் தொழில்

*ii)* கோணித் தொழில்

*iii)* காகிதம் தயாரிக்கும் தொழில் மற்றும் கைகளினால் செய்யப்படும் காகிதம்

*iv)* காலணிகள் தயாரிக்கும் தொழில்

*v)* விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த உபத்தொழில்கள்

*vi)* கயறு தயாரிக்கும் தொழில்

**III. *01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில் கீழ்க்கண்ட தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்து முதனிலை அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளன.**

*i)* வடிசாலைத் தொழில்

*ii)* இரசாயன உரத் தொழில்

*iii)* காட்டன் ஜின்னிங், ப்ரெஸ்ஸிங் மற்றும் காட்டன் வேஸ்ட் தொழில்

*iv)* அச்சகங்கள் தொழில்

*v)* பந்தல் அமைக்கும் தொழில்

*vi)* காளான் வளர்ப்புத் தொழில்

*vii)* அப்பளம் தயாரிக்கும் தொழில்

*viii)* புகையிலை தயாரிப்பு (பீடி சுற்றுதல் நீங்கலான பீடி தயாரிப்பு உட்பட) தொழில்

*ix)* பேக்கரீஸ் மற்றும் பிஸ்கட் தயாரிக்கும் தொழில்

*x)* பாத்திரங்கள் தயாரிக்கும் தொழில்

*xi)* செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிக்கும் தொழில்

*xii)* முந்திரி ஆலைத் தொழில்

*xiii)* காபி பதப்படுத்தும் தொழில்

*xiv)* எலக்ட்ரானிக்ஸ் தொழில்

*xv)* பாலிதீன் தயாரித்தல், ப்ராசசிங் போம் அயிட்டம்ஸ் மற்றும் பிளாஸ்டிக் தயாரிக்கும் தொழில்

*xvi)* தோட்ட நிறுவனங்கள் தொழில் அதாவது, சின்கோனா, இரப்பர், தேயிலை, காபி

அல்லது ஏலக்காய் உள்ளிட்ட பயிர்களை வளர்த்து பராமரிக்கும் தோட்டங்கள்

*xvii)* தேங்காய் உரிக்கும் தொழில்

*01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் அமலாக்க அலுவலர்களால் *22,888* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பல்வேறு முரண்பாடுகள் நிமித்தம் வேலையளிப்பவருக்கு எதிராக *28* வழக்குகளில் ரூ.*68,500/-* அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. *687* கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, தொழிலாளர்களுக்கு ரூ.*7,65,03,900/-* வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

### *1.3.2.3.* போனஸ் வழங்கல் சட்டம், *1965*

இச்சட்டம் *10* அல்லது அதற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இலாபம் அல்லது உற்பத்தி

அல்லது உற்பத்தித்திறன் அடிப்படையில் போனஸ் வழங்கிட வழி வகுக்கிறது.

### *1.3.2.4.* சம ஊதியச் சட்டம், *1976*

ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்குவது இச்சட்டத்தில் உறுதி செய்யப்பட்டு, பாலின அடிப்படையிலான வேற்றுமை தடை செய்யப்பட்டுள்ளது.

*01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில் மேற்கண்ட சட்டத்தின் கீழ், அமலாக்க அலுவலர்கள் பல்வேறு நிறுவனங்களில் *4,269* ஆய்வுகள் மேற்கொண்டுள்ளனர்.

### *1.3.3.* சமூக பாதுகாப்பு சட்டங்கள்

அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்குதல் மற்றும் நலத் திட்டங்களை உருவாக்குதல் ஆகியவை இச்சட்டங்கள் மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

இச்சட்டங்கள் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணிக்கொடை வழங்குவதற்கும், பிழைப்பூதியம் வழங்குவதற்கும், நிரந்தரத் தகுதி வழங்குவதற்கும், பெண் தொழிலாளர்களுக்கு பேறுகால சலுகைகள் வழங்குதல் மற்றும் விபத்தின் காரணமாக பணியாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் வழிவகை செய்கின்றன.

### *1.3.3.1.* பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், *1923*

பணியின்போது ஏற்படும் விபத்தின் காரணமாக நிகழும் மரணம் மற்றும் ஊனத்தினால் ஏற்படும் ஊதியம் ஈட்டும் திறன் இழப்புக்கு ஏற்ப இழப்பீடு வழங்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டப்படி மண்டல தொழிலாளர் இணை ஆணையர்கள் பணியாளர் இழப்பீட்டு ஆணையர்களாக அறிவிக்கை செய்யப்பட்டு வழக்கினை விசாரித்து உத்தரவு பிறப்பிக்கின்றார்கள்.

இச்சட்டத்தின்படி உத்தரவிடப்படும் இழப்பீட்டுத் தொகை, வேலையளிப்பவர்களால் அல்லது காப்பீட்டு நிறுவனங்களால் ஆணையாளரிடம் வைப்பீடு செய்யப்படுகிறது. *01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில் *1,467* வழக்குகள் முடிக்கப்பட்டு, மொத்தம் ரூ.*58,69,23,510/-* இழப்பீட்டுத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

### *1.3.3.2.* பணிக்கொடை வழங்கல் சட்டம், *1972*

தொழிலாளருக்கு வயது முதிர்வினால் / பணி ஓய்வு / பணியிலிருந்து விலகுதல் / மரணம் அல்லது விபத்து மற்றும் நோயின் காரணமாக இயலாமை ஏற்படுதல் ஆகிய காரணங்களுக்காக பணிக்கொடை வழங்கப்படுகிறது. *5* வருடத்திற்கு குறைவில்லாத தொடர்பணி முடித்த தொழிலாளர்கள் பணிக்கொடை பெறுவதற்கு தகுதியுடையவராவர்.

வட்டார தொழிலாளர் இணை ஆணையர் அலுவலக தொழிலாளர் துணை ஆணையர்கள்

இச்சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும், மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

01.04.2020 முதல் 31.07.2021 வரையிலான காலத்தில், 1,370 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, ரூ.9,18,96,048/- பணிக்கொடைத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், 324 மேல்முறையீட்டு மனுக்கள் விசாரித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

### 1.3.3.3. தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981

தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு விசாரணை நிலுவையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு பிழைப்பூதியம் வழங்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. வட்டார தொழிலாளர் இணை ஆணையர் அலுவலக தொழிலாளர் துணை ஆணையர்கள்

இச்சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும், வட்டார இணை ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

01.04.2020 முதல் 31.07.2021 வரையிலான காலத்தில், இச்சட்டத்தின் கீழ் 57 கேட்பு மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, மொத்தம் ரூ.49,67,319/- பிழைப்பூதியமாக மனுதாரர்களுக்கு வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், 13 மேல்முறையீட்டு மனுக்கள் விசாரித்து முடிக்கப்பட்டன.

### *1.3.3.4.* மகப்பேறு நலச் சட்டம், *1961*

பெண் தொழிலாளர்களின் மகப்பேறுக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலத்தில் பணி, ஊதியம் உள்ளிட்ட மகப்பேறு உதவிகள் வழங்கப்படுவதை இச்சட்டம் முறைப்படுத்துகிறது. இச்சட்டம், மகப்பேறு காலங்களில் குழந்தைப்பிறப்பு எதிர்பார்க்கப்படும் பிரசவ தினத்திற்கு முன் 8 வாரங்களுக்கு மிகாமல்

மொத்தம் *26* வாரங்கள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கிட வழிவகுக்கிறது.

*01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில், இச்சட்டத்தின் கீழ், *5,349* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், *2* வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு வேலையளிப்பவருக்கு பல்வேறு முரண்பாடுகளுக்காக ரூ.*3,000/-* அபராதம் விதிக்கப்பட்டது.

**1.3.3.5. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்கல்) சட்டம், 1981**

இச்சட்டம், ஒரு தொழில் நிறுவனத்தில் *24* மாத காலத்தில், *480* நாட்கள் தொடர்பணிபுரிந்த தொழிலாளிக்கு நிரந்தரத் தகுதி வழங்க வகை செய்கிறது. *01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில் இச்சட்டத்தின் கீழ் *160* மனுக்கள் முடிக்கப்பட்டு

*216* தொழிலாளர்களின் பணியினை நிரந்தரப்படுத்த வேலையளிப்போருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது .

### *1.3.3.6.* தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், *1972*

இச்சட்டத்தின் கீழ் அமைப்பு சார்ந்த தொழிலாளர்களின் நலனை மேம்படுத்தவும், தொடர்புடைய நலத்திட்டங்களுக்காகவும், நிதி உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### *1.3.3.7.* தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்*)* சட்டம், *1982*

இச்சட்டம், சில வகையான தொழில்களில் ஈடுபடும் உடலுழைப்புத் தொழிலாளர்களின் பணிநிலைமைகளை முறைப்படுத்தவும், பணிப்பாதுகாப்பினை உறுதி செய்யவும் வழிவகை செய்கிறது.

### *1.3.4.* வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல் தொடர்பான சட்டங்கள்

கடைகள், வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள், பத்திரிக்கை நிறுவனங்கள், ஒப்பந்த நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகள், தொழிலாளர்கள் பணிபுரிவதற்கேற்ற சுமூகமான சூழலை ஏற்படுத்தவும் இச்சட்டங்கள் வழி வகை செய்கிறது.

### *1.3.4.1.* தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், *1947*

கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. *01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில் *23,738* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு,

2,389 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இசைவு தீர்வு முறையில் இணக்க கட்டணமாக ரூ.6,21,300/- வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் 5 வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு ரூ.17,200/- வேலையளிப்பவருக்கு பல்வேறு முரண்பாடுகளுக்காக அபராதம் விதிக்கப்பட்டது.

### 1.3.4.2. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

உணவு நிறுவனங்கள் மற்றும் உணவு விடுதிகள் உட்பட பல்வேறு உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணிச் சூழல், பணி நிலைகளை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. 01.04.2020 முதல் 31.07.2021 வரையிலான காலத்தில், உணவு நிறுவன வேலையளிப்பவர்களிடமிருந்து, பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்தக் கட்டணமாக ரூ.1,01,29,793/- வசூலிக்கப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் 3,651 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 2,799 முரண்பாடுகள்

கண்டறியப்பட்டு, இசைவு தீர்வு முறையில் இணைக்கக் கட்டணமாக ரூ.4,62,090/- வசூலிக்கப்பட்டுள்ளது.

### *1.3.4.3.* மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், *1961*

மோட்டார் போக்குவரத்து நிறுவன தொழிலாளர்களின் நலன்கள் மற்றும் பணி நிலைகளை பாதுகாக்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. 01.04.2020 முதல் 31.07.2021 வரையிலான காலத்தில் 310 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது, 686 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 326 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இசைவு தீர்வு முறையில் இணைக்கக் கட்டணமாக ரூ.1,13,000/- வசூலிக்கப்பட்டுள்ளது.

### *1.3.4.4.* தோட்டத் தொழிலாளர் சட்டம், *1951*

தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951 மற்றும் விதிகள் தோட்டத் தொழிலாளர்களின் சுகாதாரம்,

பாதுகாப்பு மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்த வழிவகை செய்கின்றன. 5 ஹெக்டேர் மற்றும் அதற்கு மேற்பட்ட பரப்பளவு மற்றும் 15 தொழிலாளர்கள் மற்றும் அதற்கு மேல் பணிபுரியும் தேயிலை, காபி, இரப்பர், ஏலக்காய் மற்றும் சின்கோனா பயிரிடப்படும் தோட்ட நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும்.

இச்சட்டத்தில், தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, மருத்துவ வசதி, குழந்தைகள் காப்பகம், கல்வி வசதி, குளிர்கால பாதுகாப்பு உடை, குடிநீர் ஆகியன வேலையளிப்பவரால் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தோட்ட தொழிலாளர் சட்டம் அதன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் விதிகள், சென்னையில் உள்ள தலைமை தோட்ட நிறுவன ஆய்வாளர் மற்றும் உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர், பந்தலூர், வால்பாறை, ஏற்காடு,

வத்தலக்குண்டு, தேனி மற்றும் நாகர்கோவில் ஆகிய 10 இடங்களில் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் (தோட்ட நிறுவனங்கள்), ஆகியோரால் தமிழ்நாடு முழுவதிலும் அமல்படுத்தப்படுகிறது. மேலும், தோட்டத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகள் அளிக்கப்படுவதை உறுதி செய்ய இரு உதவி மருத்துவர்கள் (தோட்ட நிறுவனங்கள்) ஊட்டி மற்றும் நாகர்கோவிலில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த 2,225 தோட்ட நிறுவனங்களின் மொத்த பரப்பளவு 62,250 ஹெக்டேர் ஆகும். இதில் 683 பதிவு பெற்ற தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 54,599 ஹெக்டேர் மற்றும் 1,542 பதிவு பெறாத தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 7,651 ஹெக்டேர் ஆகும். தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் 56,961 மொத்தத் தொழிலாளர்களில் 22,367 ஆண்களும் 34,594 பெண்களும் உள்ளனர்.

*01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில், சட்ட அமலாக்க அலுவலர்களால் தோட்ட தொழிலாளர்கள் சட்டம், *1951* மற்றும் விதிகளின் கீழ் மட்டும் *2,487* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதில், காணப்பட்ட பல்வேறு முரண்பாடுகளுக்கு *48* வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.*2,97,500/-* வேலையளிப்பவருக்கு அபராதத் தொகை விதிக்கப்பட்டது.

### *1.3.4.5.* பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், *1966*

பீடி மற்றும் சுருட்டுத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் நலன்களைப் பேணவும், பணி நிலைகளை ஒழுங்குபடுத்தவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. *01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில், *615* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீதிமன்றங்கள் மூலம் *9* வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.*3,250/-* வேலையளிப்பவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

### ***1.3.4.6.*** **பணியாற்றும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர பத்திரிக்கைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், *1955***

பணியாற்றும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் பத்திரிக்கை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. மேலும், இச்சட்டம் உழைக்கும் பத்திரிக்கையாளர்கள், நாளிதழ்கள் மற்றும் செய்தி நிறுவனங்களில் பணிபுரியும் பத்திரிக்கையாளர் அல்லாத பிற பணியாளர்களுக்கு ஊதிய நிர்ணயம் மற்றும் மறு நிர்ணயம் செய்ய ஊதிய குழுக்களை அமைக்கவும் வழிவகை செய்கிறது. 'மஜிதியா ஊதியக் குழுவின்' பரிந்துரைகள் *11.11.2011* முதல் நடைமுறையில் உள்ளது. மாநிலத்தில் உள்ள *76* பத்திரிக்கை நிறுவனங்களில், *75* நிறுவனங்கள் 'மஜிதியா ஊதியக் குழுவின்' பரிந்துரைகளை முழுமையாக அமல்படுத்தியுள்ளன. சென்னை, அம்பத்தூரில் உள்ள

நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற நிறுவனத்தில் பணியாளர்களுடன் தொழிற்தகராறுகள் சட்டம், 1947 பிரிவு 18(1)-ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பரிந்துரைகள் அமல்படுத்தப்பட்டுள்ளது.

### 1.3.4.7. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்) சட்டம், 1958

தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேசிய பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்களில் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளித்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. 01.04.2020 முதல் 31.07.2021 வரையிலான காலத்தில் 22,994 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் 3,591 நிறுவனங்களில் முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இசைவுத் தீர்வாக ரூ.24,27,100/- வசூலிக்கப்பட்டுள்ளது. 8 வழக்குகள் நீதிமன்றத்தால்

முடிக்கப்பட்டு ரூ.7,600/-வேலையளிப்பவருக்கு பல்வேறு முரண்பாடுகளுக்காக அபராதம் விதிக்கப்பட்டது.

### *1.3.4.8.* ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், *1970*

இச்சட்டத்தில் ஒப்பந்த தொழிலாளர்களின் பணி நிலையினை குறிப்பிட்ட சில நிறுவனங்களில் ஒழுங்குபடுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் *01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில், *246* பதிவுச் சான்றிதழ்கள் முதன்மை வேலை அளிப்போருக்கும், *283* உரிமங்கள் ஒப்பந்ததாரர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

### *1.3.4.9.* மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயரும் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம், *1979*

சொந்த மாநிலங்களிலிருந்து பிற மாநிலங்களுக்கு சென்று பணிபுரியும்

தொழிலாளர்களின் நலன்களை பாதுகாத்து, அவர்களின் பணி நிலைகளை முறைப்படுத்திட இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. 01.04.2020 முதல் 31.07.2021 வரையிலான காலத்தில் 12 பதிவுச் சான்றிதழ்கள் முதன்மை வேலையளிப்பவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

### *1.3.4.10.* குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்தல்) சட்டம், *1986*

ஒரு நாட்டின் மிகவும் விலை உயர்ந்த மற்றும் அதே சமயம் மிகவும் பாதிக்கப்படக்கூடிய செல்வங்களாக குழந்தைகள் உள்ளனர். ஒரு சிறந்த சமுதாயம் உருவாகிட குழந்தைகளுக்கு முறையான கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் மிகுந்த முன்னுரிமை வழங்க வேண்டும். கடுமையான சட்டங்களை இயற்றுதல் மற்றும் திட்ட அடிப்படையிலான அணுகுமுறை போன்ற பன்முகப்படுத்தப்பட்ட உத்திகளுடன்

பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை குழந்தை தொழிலாளர் என்ற அச்சுறுத்தலுக்கு எதிராக அரசு மேற்கொண்டுள்ளது.

குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான மாநில செயல் திட்டம், அரசால் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இச்செயல் திட்டமானது அமலாக்க அதிகாரிகளுக்கும் மற்றும் தொடர்புடைய பிற துறைகளில் அவர்களின் செயல்பாடு மற்றும் பங்கு குறித்து உரிய வழிகாட்டுதல்களை அளிக்கிறது. குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடைசெய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986-ஐ தீவிரமாக அமல்படுத்தும் பொருட்டு நிலையான இயக்க நடைமுறைகள் ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**(அ) சட்ட அமலாக்கம்**

சட்ட அமலாக்கத்தை வலுப்படுத்தும் பொருட்டு, மாவட்ட அளவிலான தடுப்புப் படைகள் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. குழந்தைகளை பணியமர்த்துவதைத் தடை செய்திட குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர்கள் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 மற்றும் தொடர்புடைய சட்டங்களை மாநில அளவில் தொழிலாளர் துறை ஆணையரக மற்றும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

மாநில அரசால் ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒருங்கிணைப்பு அலுவலர்களாக தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமலாக்கம்) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை வேலைகளில் ஈடுபடுத்துவதை

முற்றிலுமாக தடை செய்யும் பொருட்டு, இந்திய அரசால் சிறந்த அமலாக்க யுக்தியாக 'பென்சில்' *(PENCIL – PLATFORM FOR EFFECTIVE ENFORCEMENT OF NO CHILD LABOUR)* என்னும் ஒரு இணைய தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

01.04.2020 முதல் 31.07.2021 வரையிலான காலத்தில், மாவட்ட தடுப்புப் படை மூலம் அமைக்கப்பட்ட குழுக்களின் ஆய்வுகள் உட்பட 32,355 நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 163 முரண்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, 217 குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. 23 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டு, ரூ.4,85,000/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

### *(ஆ)* விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வண்ணம், ஒவ்வொரு வருடமும் ஜூன் *12*-ஆம் தேதி குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி தொழிலாளர் ஆணையரகத்தில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் குழந்தை தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய இராட்சத பலூன் பறக்கவிடப்பட்டது. மேலும், குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான உறுதி மொழி மற்றும் குழந்தைத் தொழிலாளர்களை பணியமர்த்துவதற்கு எதிரான கையெழுத்து இயக்கம் ஆகியவை நடைபெற்றது.

**(இ) தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்**

தமிழ்நாட்டில், ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் இயங்கி வருகிறது. தற்போது தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் செயல்படும் 15 மாவட்டங்களில் இயங்கி வரும் 231 சிறப்பு பயிற்சி மையங்களில் 4,225 மீட்கப்பட்ட குழந்தை தொழிலாளர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 01.04.2020 முதல் 31.07.2021 வரையிலான காலத்தில் 2,298 குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட உதவியுடன் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.400/- உதவி தொகை, கல்வி

உபகரணங்கள், இலவச சீருடை மற்றும் இலவச மருத்துவ பரிசோதனையும் மேற்கொள்ளப்படுகிறது. மாநில அரசு, குழந்தை தொழிலாளர் திட்ட பள்ளிகளில் பயின்று, தற்போது முறையான பள்ளிகளில் பயின்று வரும் மாணவ மாணவியர்கள் உயர்கல்வியினை தொடரும் வகையில் மாதந்தோறும் ரூ.500/- உதவித் தொகையாக வழங்கி வருகிறது. நடப்பு கல்வியாண்டில் இத்திட்டத்தின் மூலம் ரூ.28.44 இலட்சம் வழங்க அரசின் அனுமதி பெறப்பட்டு, 474 மாணவ / மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

### 1.3.4.11. கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம், 1976

ஒன்றிய அரசின் கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு திட்டம், 2016, மீட்கப்படும் கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு பொருளாதார மற்றும் சமூக நிவாரணங்களை வழங்கி அவர்களின் திறன்களை

மேம்படுத்த ஏற்படுத்தப்பட்டதாகும். பல்வேறு துறைகளின் பங்குதாரர்களுக்கு மேற்படி சட்டத்தை வலுவாக அமல்படுத்தும் நோக்கில், கொத்தடிமைத் தொழிலாளர்களை மீட்டெடுத்தல், விடுவித்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகியவை பற்றிய மாநில செயல் திட்டம் மற்றும் நிலையான இயக்க நடைமுறைகள் ஆகிய வழிகாட்டுதல்கள் அரசால் உருவாக்கப்பட்டது. 2019-2020ஆம் ஆண்டில் உயர்மட்டக் கண்காணிப்புக் குழு மறுசீரமைப்பு செய்யப்பட்டது.

அனைத்து தொழிலாளர் உதவி ஆணையர்களும் (அமலாக்கம்) அவர்களது நிர்வாக எல்லையில் 1976ம் வருட கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம், மற்றும் 2016ம் ஆண்டு ஒன்றிய அரசின் கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு திட்டத்தினை அமல்படுத்த ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கொத்தடிமைத் தொழிலாளர் முறையிலிருந்து விடுவிக்கப்படும் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு உடனடி நிவாரண தொகையாக ரூ.20,000/- வழங்கப்பட்டு வருவதோடு, குடும்ப அட்டை, சாதிச் சான்றிதழ், வேலைவாய்ப்பு, கல்வி, தொழிற்திறன் பயிற்சி, சுய உதவி குழுக்களில் உறுப்பினராக சேர்த்தல் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் அவர்கள் பணிபுரியும் தொழில்களுக்கு ஏற்ப, உரிய அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்டு திட்டப் பயன்கள் வழங்கப்படுகின்றன.

கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்விற்கென நிரந்தர நிதி மூலதனம் *(Permanent Corpus Fund)* ஏற்படுத்தும் பொருட்டு அரசு மொத்தம் ரூ.121 இலட்சம் (ரூபாய் நூற்று இருபத்தொன்று இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்துள்ளது. மீட்கப்படும் கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்விற்காக

மாநில அரசானது 2020-2021ம் நிதியாண்டிற்கு ரூ.125 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

01.04.2020 முதல் 31.07.2021 வரையிலான காலத்தில் 288 கொத்தடிமைத் தொழிலாளர்கள் கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்பட்டு, அவர்களுக்கு ரூ.57,60,000/- உடனடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் அகற்றிடவும் மற்றும் தமிழ்நாட்டை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்கிடவும், ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 9 ஆம் தேதி கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

கொத்தடிமைத் தொழிலாளர் குறித்த புகார்களைப் பெறுவதற்கு கட்டணமில்லா தொலைபேசி எண்.1800 4252 650 (Toll Free Helpline) உருவாக்கப்பட்டுள்ளது.

**கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்**

கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்து தொடர்புடைய துறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு மதுரையில் மண்டல அளவிலான பயிற்சி 28.12.2020 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் வருவாய்துறை, காவல் துறை, சமூக பாதுகாப்புத் துறை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், ஊரக வளர்ச்சித்துறை, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, மாவட்ட குழந்தைகள் நலக்குழு ஆகிய துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 1.3.5. நுகர்வோர் பாதுகாப்பு சார்ந்த சட்டங்கள்

கூடுதல் தொழிலாளர் ஆணையர் (ஆய்வுகள்), சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரியாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளார். மாவட்ட அளவில் 40 தொழிலாளர் உதவி ஆணையர்கள் (துணை

சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரிகள்), 67 தொழிலாளர் துணை ஆய்வர்கள் (உதவி சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரிகள்), 101 முத்திரை ஆய்வர்கள் மற்றும் 218 தொழிலாளர் உதவி ஆய்வர்கள் (சட்டமுறை எடையளவு அலுவலர்கள்) சட்டமுறை எடையளவுச் சட்டத்தின்படி, சட்டமுறை எடையளவு அலுவலர்களாக, சட்டமுறை எடையளவு சட்டம் மற்றும் விதிகளை அமலாக்கம் செய்ய அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

### 1.3.5.1. சட்டமுறை எடையளவுச் சட்டம், 2009

இச்சட்டத்தின் வழியாக நிர்ணயம் செய்யப்பட்ட எடையளவுகளின் தரத்தை உறுதி செய்யவும், நுகர்வோர் நலன் கருதி எடை, அளவு அல்லது எண்ணிக்கை முறையில் மேற்கொள்ளப்படும் வணிகம் மற்றும் வியாபார பரிவர்த்தனைகளை முறைப்படுத்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

01.04.2020 முதல் 31.07.2021 வரையிலான காலத்தில் சட்டமுறை எடையளவுச் சட்டத்தின் கீழ் 43,027 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 2,927 முரண்பாடுகள் காணப்பட்டு இசைவு தீர்வு முறையில் இணக்கக் கட்டணம் மற்றும் நீதிமன்ற வழக்குகளில் அபராதமாக ரூ.37.95 இலட்சம், முத்திரைக் கட்டணமாக ரூ.71.22 கோடி மற்றும் உரிமக்கட்டணமாக ரூ.72.02 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.3.5.2. சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011

இவ்விதிகளின்படி பொட்டலப் பொருட்கள் தயாரிப்பாளர், பொட்டலமிடுவோர் மற்றும் இறக்குமதி செய்வோர் அனைவரும் பொட்டலமிடும் பொருட்களின் நிகர அளவு, அதிகபட்ச சில்லறை விற்பனை விலை, தயாரிக்கும் இடத்தின் முகவரி உள்ளிட்ட விவரங்களை பொட்டலத்தின் மீது அல்லது பொட்டலமிடப்பட்ட பொருட்களின் முகப்புச்

சீட்டுக்களின் மீது அறிவிக்கவேண்டும் என்பது கட்டாயமாக்கப் பட்டுள்ளது. இதன் பொருட்டு, அவர்கள் இவ்விதிகளின் கீழ் பதிவுச்சான்று பெற வேண்டும். அதிகபட்ச சில்லறை விற்பனை விலைக்கு அதிகமாக விற்கப்படுவதிலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதும், நுகர்வோர் நலன்கள் குறித்த இதர தகவல்களைத் தருவதும் இதன் நோக்கமாகும்.

01.04.2020 முதல் 31.07.2021 வரையிலான காலத்தில் சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் கீழ் 10,870 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 936 முரண்பாடுகள் காணப்பட்டு இசைவு தீர்வு முறையில் இணக்கக் கட்டணம் மற்றும் நீதிமன்ற வழக்குகளில் அபராதமாக ரூ52.50 இலட்சம் மற்றும் பதிவுக் கட்டணமாக ரூ.6.35 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

## *1.4.* நல வாரியங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள்

### *1.4.1.* தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், அமைப்புசார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்துவதற்காக 1972-ம் ஆண்டு இயற்றப்பட்டது. இந்நோக்கத்துடன் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 1975ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், மலைத் தோட்ட நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், கடைகள் மற்றும் நிறுவனங்களில் வேலையளிப்போர் மற்றும் பணிபுரியும் தொழிலாளர்களிடமிருந்து பெறப்படும் தொழிலாளர் நல நிதி பங்குத் தொகையின் மூலம் பல்வேறு நலத் திட்ட பயன்கள் அளிக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு தொழிலாளியும் ஆண்டு ஒன்றுக்கு ரூ.10/-ம், வேலையளிப்பவர் ஒரு

தொழிலாளிக்கு ரூ.20/-ம், அரசு, ஒரு தொழிலாளிக்கு ரூ.10/- என்ற வீதத்திலும் தொழிலாளர் நல நிதி செலுத்தி வருகின்றனர். தொழிலாளர் நலச் சட்டம் மற்றும் விதிகளை மீறியமைக்காக வேலையளிப்பவர் மீது நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் அபராதம் மற்றும் அமலாக்க அலுவலர்களால் விதிக்கப்படும் இணைக்கக் கட்டணம் ஆகியவை தொழிலாளர் நல நிதியில் சேர்க்கப்படுகிறது.

தொழிலாளர் நல நிதி கீழ்க்கண்ட நலத் திட்டங்களுக்காக செலவிடப்படுகிறது.

*i)* தொழிலாளர்களின் சார்ந்தோர்களுக்கான தையற் பயிற்சி வகுப்புகள்.

*ii)* தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகம்.

*iii)* தையல் இயந்திரம் வாங்குவதற்கு உதவித் தொகை

*iv)* கல்வி உதவித் தொகை, கல்வி ஊக்கத் தொகை மற்றும் பாடநூல் உதவித்தொகை வழங்குதல்.

*v)* அடிப்படை கணினி பயிற்சி உதவித் தொகை.

*vi)* திருமண உதவித் தொகை

*vii)* மூக்குக் கண்ணாடி உதவித் தொகை.

*viii)* இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான உதவித்தொகை.

*ix)* விபத்துமரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான உதவித்தொகை.

*x)* அரசு பொதுத் தேர்வு எழுதும் *10*ம் வகுப்பு மற்றும் *12*ம் வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லா மாதிரி வினாத்தாள் கையேடு வழங்குதல்

*xi)* நுழைவுத் தேர்வு உதவித் தொகை

*xii)* மாவட்ட அளவிலான விளையாட்டு உதவித் தொகை

*xiii)* மாநில அளவிலான விளையாட்டு உதவித் தொகை

### *xiv)* ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கை திறன் மேம்பாட்டுப் பயிற்சி

தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் குறைந்த வாடகையில் தங்கி ஓய்வெடுக்க மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்கு வசதியாக "ஜீவா இல்லம்" தொழிலாளர் ஆணையர் அலுவலகத்திற்கு அருகாமையில் கட்டப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் படித்து பயன்பெறும் வகையில் முக்கிய நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் தொழிலாளர் நலன் சம்மந்தமான கட்டுரைகள் அடங்கிய "உழைப்பவர் உலகம்" எனும் தமிழ் மாத இதழ் வெளியிடப்பட்டு வருகிறது.

### *01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில் பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் தொகை விவரம்

| வ. எண். | திட்டங்கள் | பயனாளிகள் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| *1.* | கல்வி உதவித்தொகை | *420* | *16.47* |
| *2.* | பாடநூல் உதவித் தொகை | *76* | *1.00* |
| *3.* | திருமண உதவித் தொகை | *514* | *51.05* |
| *4.* | மூக்குக் கண்ணாடி உதவித் தொகை | *120* | *1.18* |
| *5.* | இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை | *169* | *50.55* |
| *6.* | விபத்து மரண உதவித்தொகை மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை | *68* | *71.37* |
| *7.* | உழைப்பவர் உலகம் மாத இதழ் | *4,301* (மாதந்தோறும்) | *7.66* |
| *8.* | ஓய்வில்லங்களின் செலவினம் | *1,623* | *56.24* |
| **மொத்தம்** | | ***7,291*** | ***255.52*** |

### 1.4.2. அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள்

தமிழ்நாடு, அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, இயற்கை மரணம், விபத்து மரணம், ஈமச்சடங்கு, விபத்து ஊனம், மாதாந்திர ஓய்வூதியம் போன்ற சமூக பாதுகாப்பு அளிக்க சட்டமியற்றுவதில் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்ட தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1982 மற்றும் நலத் திட்டங்களின், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 69 (உடலுழைப்பு) மற்றும் 54 (கட்டுமானம்) தொழில் இனங்களில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு மற்றும் நல உதவி வழங்குவதற்கு வழிவகை செய்கிறது.

## தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் கீழ் *18* அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களை அரசு அமைத்துள்ளது :

| வ. எண் | வாரியங்களின் பெயர் |
|---|---|
| *1.* | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| *2.* | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் |
| *3.* | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் |
| *4.* | தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம் |
| *5.* | தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம் |
| *6.* | தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| *7.* | தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| *8.* | தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| *9.* | தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| *10.* | தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| *11.* | தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம் |
| *12.* | தமிழ்நாடு பொற்கொல்லர்கள் நல வாரியம் |
| *13.* | தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நல வாரியம் |

| வ. எண் | வாரியங்களின் பெயர் |
|---|---|
| 14. | தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியம் |
| 15. | தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நல வாரியம். |
| 16. | தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம். |
| 17. | தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 18. | தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியம் |

### 1.4.2.1. அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகள்

பதிவு, புதுப்பித்தல், நலத் திட்ட உதவிகளை ஒப்பளித்தல் மற்றும் வழங்குதல் போன்ற பணிகள், சென்னையில் உள்ள தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் மாவட்ட அளவில் தொழிலாளர் உதவி ஆணையர்களால் (சமூக பாதுகாப்பு திட்டம்) மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அமைப்புசாரா தொழிலாளர் நல வாரிய தலைமை அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் கேட்பு மனுக்கள் மீது விரைவாக நடவடிக்கை எடுக்கும் வகையில் கணிணி மயமாக்கப்பட்டுள்ளது.

*19.06.2020* முதல் பதிவு செய்யப்படும் முறை தொடங்கப்பட்டு, *20.07.2020* முதல் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகள் இணையதளம் மூலம் வழங்கப்படுகின்றன. இணையதளம் மூலம் புதுப்பித்தல் மற்றும் கேட்பு மனு விண்ணப்பங்கள் பெறப்பட்டு தொடர்புடைய மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர்களால் (ச.பா.தி) சரிபார்க்கப்படுகின்றன.

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறும் மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் உறுப்பினர்களுக்கு உரிய நேரத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்குவதை கண்காணிக்கிறது. உதவித் தொகை பெறுவதில் உள்ள சிரமங்களை குறைக்கும்

நோக்கில் நலத்திட்ட உதவிகள் வழங்குவதில் வெளிப்படைத் தன்மை கடைப்பிடிக்கப்பட்டு அனைத்து நலத்திட்ட உதவித் தொகைகளும் அமைப்புசாரா தொழிலாளர்கள் / பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு இந்திய ரிசர்வ் வங்கி மின்னணு பரிமாற்றம் *(Reserve Bank Electronic Clearing System (RECS))* மூலம் நேரடியாக செலுத்தப்படுகிறது.

### *1.4.2.2.* நலத்திட்ட உதவிகள் விவரம்

பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது

| வ. எண். | உதவித் தொகைகள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | விபத்து நிவாரணத் திட்டம் | |
| | அ) விபத்து மரணம் | 1,00,000/ - |
| | ஆ) பணியின் நிமித்தமாக, பணியிடத்தில் விபத்து மரணம் / மருத்துவமனையில் மரணம் (பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கும்) | 5,00,000/ - |
| 2. | அ) விபத்து ஊனம்(ஊனத்தின் தன்மைக்கேற்ப) | 1,00,000/ - வரை |
| | ஆ)செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி | மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் நிர்ணயிக்கும் தொகை |

| வ. எண். | உதவித் தொகைகள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 3. | இயற்கை மரண உதவித் தொகை | 20,000/- |
| | ஈமச்சடங்கு உதவித் தொகை | 5,000/- |
| 4. | கல்வி உதவித் தொகை | |
| | அ) 10-ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1000/- |
| | ஆ) 10-ம் வகுப்பு தேர்ச்சி (அனைத்து மாணவர்களுக்கும்) | 1,000/- |
| | இ) 11-ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/- |
| | ஈ) 12-ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,500/- |
| | உ) 12-ம் வகுப்பு தேர்ச்சி (அனைத்து மாணவர்களுக்கும்) | 1,500/- |
| | ஊ) முறையான பட்டப்படிப்பு | |
| | வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர் | 1,500/- |
| | விடுதியில் தங்கிப் படிப்பவர் | 1,750/- |

| வ. எண். | உதவித் தொகைகள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| | எ) முறையான பட்டமேற்படிப்பு | |
| | வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர் | 4,000/ - |
| | விடுதியில் தங்கிப் படிப்பவர் | 5,000/ - |
| | ஏ) முறையான தொழில் நுட்ப பட்டப்படிப்பு | |
| | வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர் | 4,000/ - |
| | விடுதியில் தங்கிப் படிப்பவர் | 6,000/ - |
| | ஐ) முறையான தொழில் நுட்ப பட்ட மேற்படிப்பு | |
| | வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர் | 6,000/ - |
| | விடுதியில் தங்கிப் படிப்பவர் | 8,000/ - |
| | ஒ) ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,000/ - |
| | விடுதியில் தங்கிப் படிப்பவர் | 1,200/ - |
| 5. | திருமண உதவித் தொகை | |
| | அ) ஆண் | 3,000/ - |
| | ஆ) பெண் | 5,000/ - |

| வ. எண். | உதவித் தொகைகள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 6. | மகப்பேறு உதவித் தொகை | 6,000/- |
| | மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு / கருச்சிதைவு | 3,000/- |
| 7. | கண் கண்ணாடி வாங்கிட உதவித் தொகை | 500/- வரை |
| 8. | ஓய்வூதியம் | 1000/- பிரதி மாதம் |
| 9. | குடும்ப ஓய்வூதியம் (கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மட்டும்) | 500/- பிரதி மாதம் |

**நிதி ஆதாரங்கள்**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியின் மொத்த கட்டுமான மதிப்பீட்டில் ஒரு சதவிகிதம் பங்களிப்பு மேல் வரியாக பெறப்படுகிறது. 01.04.2020 முதல் 31.07.2021 வரையிலான காலத்தில் ரூ.885.46 கோடி பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் மூலம் சாலைகளில் பயணிகள் அல்லது பொருட்களை ஏற்றி செல்லும் வர்த்தக வாகனங்களின் உரிமையாளர்களிடமிருந்து, தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்பு சட்டம், 1974-ன்படி ஒரு சதவிகித மோட்டார் வாகன கூடுதல் வரி வசூலிக்கப்பட்டு அமைப்புசாரா ஓட்டுநர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 01.04.2020 முதல் 31.07.2021 வரையிலான காலத்தில் ரூ.15.24 கோடி கூடுதல் வரியாக பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்களுக்கு நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு மானியம் வழங்குகிறது. தமிழ்நாடு அரசு 01.04.2020 முதல் 31.07.2021 வரை ரூ.237.09 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

## *18* அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களின் சாதனைகள்

## வாரியம் துவங்கப்பட்ட நாள் முதல் *31.07.2021* வரை பதிவு மற்றும் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவித் தொகை விவரம் :

| வ. எண் | வாரியங்களின் பெயர் | பதிவு செய்யப்பட்ட அமைப்பு-சாரா தொழிலாளர்கள் (இலட்சத்தில்) | பயனாளிகள் (இலட்சத்தில்) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| *1.* | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் | *14.88* | *18.91* | *894.08* |
| *2.* | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம். | *1.05* | *1.38* | *51.90* |
| *3.* | தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர *15* நல வாரியங்கள் | *15.18* | *33.60* | *1,109.23* |
| | **மொத்தம்** | ***31.11*** | ***53.89*** | ***2,055.21*** |

## *01.04.2020* முதல் *31.07.2021* வரையிலான காலத்தில் பதிவு மற்றும் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவித்தொகை விவரம்

| வ. எண். | வாரியங்களின் பெயர் | பதிவு செய்யப்பட்ட அமைப்புசாரா தொழிலாளர்கள் | பயனாளிகள் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் | 2,95,693 | 42,204 | 150.08 |
| 2. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம். | 21,287 | 7,819 | 8.70 |
| 3. | தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள் | 1,20,211 | 1,73,563 | 188.96 |
| | **மொத்தம்** | ***4,37,191*** | ***2,23,586*** | ***347.74*** |

## *1.5.* தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், கல்வி மற்றும் பயிற்சி நிலையமாக 1973-ம் ஆண்டில் துவக்கப்பட்டது. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்

சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, *1988* முதல் சங்கமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் இக்கல்வி நிலைய ஆட்சி மன்றக் குழுவின் தலைவராவார். இக்கல்வி நிலைய நிர்வாக செலவுகளுக்காக *2021-22*ம் நிதியாண்டிற்கு ரூ.*3,33,18,000/-* தமிழ்நாடு அரசு மானியமாக வழங்கியுள்ளது.

இக்கல்வி நிலையம் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி வகுப்புகள் போன்றவற்றை, தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள், நிர்வாகிகள் மற்றும் தொழிற்சங்கத்தினர், தொழிலாளர் துறை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரக ஆய்வாளர்கள் ஆகியோர்களின் தேவை கருதி, காலமுறையில் நடத்தி வருகிறது.

மேலும், இக்கல்வி நிலையம் புது டெல்லி, சர்வதேச தொழிலாளர் அமைப்பு *(ILO)* மற்றும் நொய்டாவிலுள்ள வி.வி. கிரி தேசிய தொழிலாளர் கல்வி நிலையத்துடன் இணைந்து கருத்தரங்குகள் / பயிற்சிகளை நடத்தி வருகிறது.

*1.4.2020* முதல் *31.7.2021* வரை கீழ்க்கண்டவாறு கருத்தரங்குகள், பயிற்சிகளை இக்கல்வி நிலையம் நடத்தியுள்ளது.

**பயிற்சிகள்**

| **தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட கருத்தரங்குகளின் விவரம்** | **கருத்தரங்குகளின் எண்ணிக்கை** | **பயனடைந்தோர் எண்ணிக்கை** |
|---|---|---|
| முதனிலை பயிற்சி - புதிதாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர் உதவி ஆய்வாளர்களுக்கு | *1* | *35* |

இக்கல்வி நிலையம் தொழிலாளர் மேலாண்மையியலில் இளங்கலை பட்டப்படிப்பு (பி.ஏ. - (எல்.எம்), முதுகலை பட்டப்படிப்பு எம்.ஏ. - (எல்.எம்) ஆகியவற்றை சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தி வருகிறது. இக்கல்வி நிலையம் முழு நேர மற்றும் பகுதி நேர ஆராய்ச்சி (பிஎச்.டி.) படிப்பு நடத்துவதற்கு சென்னைப் பல்கலைக் கழகத்தால் ஓர் ஆராய்ச்சி நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கல்வி நிலையம் ஓராண்டு பகுதி நேர (மாலை) தொழிலாளர் நிர்வாகத்தில் முதுகலை பட்டயப்படிப்பு (பி.ஜி.டி.எல்.ஏ) மற்றும் "தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும்" என்ற ஓராண்டு பகுதி நேர (வார இறுதி நாட்கள்) பட்டயப் படிப்பு, பணிபுரிவோருக்காக நடத்தி வருகிறது.

## *2020-21* கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கை விவரம்

| வ. எண் | படிப்பு விவரம் | *1*-ம் ஆண்டு | *2*-ம் ஆண்டு | *3*-ம் ஆண்டு |
|---|---|---|---|---|
| *1.* | பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) | *60* | *53* | *48* |
| *2.* | எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) | *48* | *44* | - |
| *3.* | பி.ஜி.டி.எல்.ஏ. | *100* | | |
| *4.* | தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும் | *100* | | |

## பிஎச்.டி. படிப்பு விவரங்கள்

| வ. எண் | படிப்பு விவரம் | தற்போது பிஎச்.டி. பயிலும் மாணவர்களின் விவரம் | ஏற்கனவே பிஎச். டி. பட்டம் வழங்கிய விவரம் |
|---|---|---|---|
| *1.* | முழுநேரம் | - | *16* |
| *2.* | பகுதிநேரம் | *4* | *4* |

இக்கல்வி நிலையத்தின் மூலம் போதிய வேலைவாய்ப்புகளை தேடித்தரும் பொருட்டு “நியோ மானேஜர்ஸ் கைடன்ஸ் பீரோ“ என்ற பணியமர்வு வழிகாட்டுக்குழு அமைக்கப்பட்டு செயல்படுகிறது. தொழிலாளர் மேலாண்மையில் பி.ஏ. மற்றும் எம்.ஏ. படிப்பினை முடித்துச் செல்லும் மாணவர்களுக்கான வளாகத்தேர்வு மற்றும் பணியில் அமர்த்துதல் ஆகியவற்றுக்கு இக்குழு ஏற்பாடு செய்கிறது.

இக்கல்வி நிலையத்தில் பயின்ற மாணவர்கள் அரசு / பொதுத்துறை நிறுவனம் / தனியார் துறையில் பணியமர்வு பெற்றுள்ளனர். பொதுத்துறை நிறுவனங்களான ஓ.என்.ஜி.சி, ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட் மற்றும் விப்ரோ டெக்னாலஜிஸ், ட்டி.சி.எஸ்., எச்.சி.எல்., காக்னிசன்ட், ஜி.இ. பைனான்ஸ், அப்பல்லோ மருத்துவமனை, ஹுண்டாய், சிந்தூரி ஹோட்டல்ஸ், ஜி.ஆர்.ட்டி

கிரான்ட் டேய்ஸ், யூனியன் பாங்க் ஆப் இந்தியா, டேப்பே *(TAFE)* போன்ற பல நிறுவனங்களில் மாணவர்கள் பணியமர்வு பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் அம்பத்தூர் ஐ.டி.ஐ. வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள சொந்த நிர்வாகக் கட்டடம் மற்றும் விடுதிக் கட்டடம் ஆகியவற்றுடன் செயல்பட்டு வருகிறது.

## *1.6.* தமிழ்நாடு கட்டுமானக் கழகம்

கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் திறன், ஆற்றல் மற்றும் அறிவு ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு “தமிழ்நாடு கட்டுமானக் கழகம்” என்ற பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கட்டுமானக் கழக அலுவலகம் டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள தொழிலாளர் நல வாரியக் கட்டடத்தின் தரைத்தளத்தில் *04.01.2013*

முதல் இயங்கி வருகிறது. தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூலம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தால் *(DET)* அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் வாயிலாக கட்டுமான தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி இலவசமாக அளிப்பதோடு மட்டுமல்லாமல் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின்னர் தேசிய தொழில் நெறிக் கல்விப் பயிற்சி *(National Council of Vocational Training)* சான்றிதழ் வழங்கப்படும்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய நிதியிலிருந்து ரூ.*186.20* லட்சம் செலவில் *5,000* கட்டுமானத் தொழிலாளர்களுக்கு திறன் பரிசோதனை *(Recognition of Prior Learning) (RPL)* மூலம் சான்றிதழ் வழங்கும் பொருட்டு திறன் இடைவெளி இணைப்புப்பயிற்சி *(Bridge Course)* வழங்கப்பட்டு

வருகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், கட்டுமானத் தொழில் வளர்ச்சி குழுமம் ஆகியவற்றுடன் இணைந்து தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தால் இப்பயிற்சி திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. *01.04.2020* முதல் *31.07.2021* வரை *1,485* தொழிலாளர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### *1.7.* கோவிட்-*19* பெருந்தொற்று தொடர்பான நிவாரண நடவடிக்கைகள்

#### *1.7.1.* கோவிட்-*19* பெருந்தொற்று காலத்தில் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் பிற அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகள்

கொரோனா ஊரடங்கு ஆரம்ப காலத்தில் முதல் கட்டமாக (ஏப்ரல் *2020*) *19,57,717* பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்கள், பதிவு செய்யப்பட்ட அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு *15* கிலோ அரிசி, *1* கிலோ பருப்பு மற்றும் *1* கிலோ சமையல் எண்ணெய்

அடங்கிய உணவுத் தொகுப்பு வழங்கப்பட்டது. இதற்காக முதல் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒட்டு மொத்த செலவுத் தொகை ரூ.123.53 கோடி ஆகும்.

இரண்டாம் கட்டமாக (மே 2020) 19,99,442 பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்கள், பதிவு செய்யப்பட்ட அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உணவுத் தொகுப்பு வழங்கப்பட்டது. இதற்கென இரண்டாம் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒட்டு மொத்த செலவுத் தொகை ரூ.126.16 கோடி ஆகும்.

17 அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட 23,16,067 தொழிலாளர்களுக்கு, நிதி உதவித் தொகையாக ரூ.1000/- வீதம் ஏப்ரல் 2020-ல் வழங்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக (மே 2020) ரூ.1000/-வீதம் 23,13,957 பதிவு செய்யப்பட்ட அமைப்பு சாரா

தொழிலாளர்களுக்கு நிதி உதவித் தொகை வழங்கப்பட்டது. மூன்றாம் கட்டமாக (ஜுன் 2020) ரூ.1000/-வீதம் நிதி உதவித் தொகை சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட 1,30,021 அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. 17 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு ஒட்டுமொத்தமாக ரூ.476 கோடி நிதி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 தொற்றின் இரண்டாம் அலை பொது முடக்கத்தின் போது, வேலை இழந்த மற்றும் குடும்ப அட்டை இல்லாத 1,29,444 புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு 15 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு மற்றும் 1 கிலோ சமையல் எண்ணெய் அடங்கிய உணவுத் தொகுப்பு ஜுன் 2021-ல் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது, இதற்கான ஒட்டு மொத்த செலவினம் ரூ.6.66 கோடி ஆகும். தமிழ்நாடு கட்டுமானத்

தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து உறுப்பினர்களாக உள்ள *2,00,000* கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தடுப்பூசி போடும் சிறப்பு முகாம் துவங்கப்பட்டது. மேற்படி இரு திட்டங்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் *25.06.2021* அன்று துவங்கி வைக்கப்பட்டது. தடுப்பூசி முகாம்கள் தற்போது மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

மாநிலம் முழுவதும் கோவிட்-*19* தொற்றின் இரண்டாம் அலை காரணமாக, அரசால் *31.12.2021* வரை *18* அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு புதுப்பித்தல் விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் துறையால் சென்னை, கோவை, திருப்பூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் சேலம் இரயில் நிலையங்களில் “உதவி மையம்”

அமைக்கப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உணவு மற்றும் போக்குவரத்து வசதிகள் செய்து தரப்பட்டது.

புலம்பெயர் தொழிலாளர்களின் விவரங்கள் மாவட்ட ஆட்சியர்கள், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், தொழிலாளர் துறை அலுவலர்கள் மற்றும் வேலையளிப்போர்களால் *URL:http://labour.tn.gov.in/ism* என்ற இணையதளம் வழியாக பெறப்பட்டு வருகிறது. இதுவரை இணையதள வலைப்பக்கத்தில் 3,49,203 புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் விவரங்கள் பெறப்பட்டுள்ளது.

## *1.8.* நீடித்த வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள், சமூகம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய வளர்ச்சியின் மூன்று பரிமாணங்களை உள்ளடக்கிய இலட்சிய இலக்குகளாகும். *2030* கொள்கையில் *17* நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் *169* குறிக்கோள்கள் உள்ளன.

*17* இலக்குகளில் கீழ்க்கண்ட *5* இலக்குகள் மற்றும் சில குறிக்கோள்கள் தொழிலாளர் துறை தொடர்பானவை ஆகும்.

*i)* **இலக்கு எண். *4.1*** - அனைத்து சிறுவர்களும், சிறுமிகளும் சிறந்த பொருத்தமான கற்றல் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் இலவசமான, சமச்சீரான, தரமான ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியினைப் பெறுவதை உறுதிபடுத்துதல்.

தொழிலாளர் துறையால் மேற்கண்ட இலக்கினை எட்ட தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் சமூகப்பாதுகாப்பு நல வாரியம், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்களின் கீழ் பதிவுபெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பல்வேறு கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்தல்) சட்டம், 1986 கீழ் மீட்கப்பட்ட குழந்தைகள் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் உள்ள 231 சிறப்பு பயிற்சி மையங்களில் 4,225 மாணவர்கள் பயின்று வருகின்றனர். அக்குழந்தைகள் மேல்படிப்பு பயிலும் பட்சத்தில் மாதாந்திர உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2020-2021-ம் ஆண்டு மாதாந்திர உதவித் தொகையாக 474 மாணவர்களுக்கு ரூ.28.44 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

*ii)* **இலக்கு எண். *5.1* –** அனைத்து நிலைகளிலும் பெண்களுக்கு எதிரான பாலின பாகுபாடுகளை முடிவுக்கு கொண்டு வருதல்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையால், நிறுவனங்களில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்கு பாலின பாடுபாடின் அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்வதை தடுக்கும் பொருட்டு சரிசம ஊதியச் சட்டம், *1976* அமல்படுத்தப்பட்டு வருகிறது.

இச்சட்டத்தின் கீழ் *01.04.2020* முதல் *31.7.2021* வரையிலான காலத்தில் *4,269* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஒரு வழக்கு தொடர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

*iii)* **இலக்கு எண். *8.3* –** உற்பத்தி நடவடிக்கைகள், தகுந்த பணிகளை உருவாக்குதல், தொழில் முனைதல், கண்டுபிடிப்புகள், நிதியுதவி அளித்தல் ஆகியவற்றின் வாயிலாக சிறு, குறு

மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சியினை முறைப்படுத்தி ஊக்குவித்தலுக்கு ஆதரவான வளர்ச்சி சார்ந்த கொள்கைகளை ஊக்குவித்தல்.

தொழிலாளர் துறை, அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு (கட்டுமான தொழிலாளர்கள் உட்பட) கீழ்க்கண்ட நலத்திட்டங்களை அமல்படுத்தி வருகிறது.

- அமைப்புசாரா தொழிலாளர்களின் மகன் / மகள் ஆகியோருக்கு கல்வி உதவித் தொகை
- திருமணம் மற்றும் மகப்பேறு உதவித்தொகை
- குடும்ப ஓய்வூதிய திட்டம் (கட்டுமான தொழிலாளர்கள் மட்டும்)
- ஓய்வூதிய திட்டம்
- கண் கண்ணாடி உதவித்தொகை
- முடக்க ஓய்வூதியத் திட்டம்
- விபத்து மரண உதவித்தொகை

- பணியிடத்தில் பணியின் போது ஏற்படும் இறப்பு (பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத கட்டுமான தொழிலாளர்களுக்காக மட்டும்)
- இயற்கை மரண உதவித்தொகை / ஈமச்சடங்கு உதவித் தொகை

*iv)* **இலக்கு எண். *8.5* –** *2030*ஆம் ஆண்டிற்குள் முழுமையான, திறன்மிக்க வேலை வாய்ப்பை உருவாக்குவதன் வாயிலாக இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள், ஆண்கள், பெண்கள் ஆகிய அனைவருக்கும் தகுந்த வேலைவாய்ப்பை அளித்தல் மற்றும் சம வேலைக்கு சம ஊதியம் வழங்குதல்.

குறைந்தபட்ச ஊதியச் சட்டம், *1948*, அனைத்து பணியாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச ஊதிய அளவை நிர்ணயித்துள்ளது. திட்டமிடப்பட்ட வேலையமைப்புகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு

பணியின் தன்மைக்கேற்ப குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

*v)* **இலக்கு எண். *8.7*** - கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் ஒழிக்கும் வகையிலான, உடனடியான திறன்மிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், புதிய முறையிலான அடிமைத்தனத்தையும் கடத்தலையும் முடிவுக்கு கொண்டு வருதல், குழந்தைகளை சேவகர்களாக பணியமர்த்துவது மற்றும் பயன்படுத்துவது உள்ளிட்ட மிகவும் சீர்கெட்ட வகையிலான குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல் மற்றும் தடை செய்தல், 2025ஆம் ஆண்டிற்குள் அனைத்து நிலையிலான குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல்.

கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம், 1976 மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு திட்டம் ஆகியவை மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு பொருளாதார மற்றும் சமூக மறுவாழ்வு மற்றும் திறன் மேம்பாட்டு வளர்ச்சியும் அளிக்கிறது.

குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றும் பொருட்டு குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 தொழிலாளர் துறையால் சீரிய முறையில் அமல்படுத்தப்பட்டு வருகிறது. குழந்தை தொழிலாளர் முறை மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் முறை அகற்றுதலில் உள்ள கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்த தொழிலாளர் துறை தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

## 1.9. தொழில் நடத்துவதில் எளிய நடைமுறை

"தொழில் நடத்துவதில் எளிய நடைமுறை" என்பதை செயல்படுத்திட, பதிவு / உரிமம் / புதுப்பித்தல் / திருத்தம் / பெயர் மாற்றம் / மூடுதல் ஆகிய வசதிகளையும் பல்வேறு தொழிலாளர் நல சட்டங்கள் மற்றும் சட்டமுறை எடையளவுச் சட்டத்தின் கீழ் ஆய்வு மேற்கொள்ளுதல் ஆகியவற்றையும் தொழிலாளர் துறையின் வலைதளமான "https://labour.tn.gov.in"-ல் இத்துறை தொகுத்து வழங்குகிறது. மேலும், இவை மின்னணு மூலம் கட்டணம் செலுத்துதல் / சான்றிதழ்கள் / உரிமங்கள் பதிவிறக்கம் செய்தல் ஆகிய வசதிகளுடன் செயல்படுத்தப்படுகிறது.

*2011*ஆம் ஆண்டைய தகவல் தொழில்நுட்ப சட்டத்தின்படி, தமிழ்நாடு அரசு, தொழிலாளர் துறை சம்பந்தப்பட்ட *41* சேவைகளை, மின்னணு இணைப்பு வழியாக சேவை வழங்குவதாக *14.12.2016* நாளிட்ட

அரசிதழில் அறிவிப்பு செய்தது. அதன் அடிப்படையில் *32* சேவைகளை இணைய வழியாக வழங்கி வருகிறது. எஞ்சியுள்ள *9* சேவைகள் இணைய வழியாக விரைவில் வழங்கப்படும்.

**இணையம் வழியாக தாக்கல் செய்யப்படும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை**

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் பல ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்வதை தவிர்த்திட சுற்றுசூழலை பாதுகாக்கும் வகையில் காகிதமற்ற முறையில் வலைதளம் மூலம் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை தாக்கல் செய்யும் முறை கீழ்காணும் சட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் விதிகள், *1959*
- தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர்கள் விதிகள், *1955*
- தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகள், *1965*

- தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள், 1968

**ஒருங்கிணைந்த பதிவேடுகள்**

பல்வேறு பதிவேடுகள் மற்றும் படிவங்களை பராமரிக்கும் சிரமத்தினை குறைத்திடும் வகையில், எளிமையான ஒருங்கிணைந்த பதிவேடுகள் முறை கீழ்காணும் சட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் விதிகள், 1959
- தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகள், 1965

இதனைப் போல் ஒருங்கிணைந்த பதிவேடுகள் முறை கீழ்காணும் சட்டங்களில் அறிமுகப்படுத்தப் படவுள்ளது.

- தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகள், 1948

- தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர்கள் விதிகள், *1955*
- தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள், *1968*

### *1.10.* இணைய வழி வழக்கு மேலாண்மை

நீதிசார் பணிகள் தொடர்பாக பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ், தொடரப்படும் வழக்குகளின் நிலையினை கண்டறிய தனியாக ஒரு மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

### *1.11.* தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் அறிமுகம்

இரண்டாவது தேசிய தொழிலாளர் ஆணையக் குழுவின் பரிந்துரைப்படி ஒன்றிய அரசு தற்போது நடைமுறையிலுள்ள *29* மத்திய தொழிலாளர் நலச் சட்டங்களை உள்வாங்கி கீழ்கண்ட நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை தயாரித்து அவற்றை அமல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

*i)* ஊதிய சட்டத் தொகுப்பு, *2019*

*ii)* தொழில் உறவு சட்டத் தொகுப்பு, *2020*

*iii)* சமூக பாதுகாப்பு சட்டத் தொகுப்பு, *2020*

*iv)* பணியிட பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் சட்டத் தொகுப்பு, *2020*

மேற்கண்ட நான்கு தொழிலாளர் சட்ட தொகுப்புகளும் மாண்புமிகு இந்திய குடியரசு தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சட்டத் தொகுப்பிற்கும் மாநில விதிகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்விதிகள் தயாரிப்பு முழுமை பெற்றபின் பொதுமக்கள், வேலையளிப்போர் மற்றும் தொழிற்சங்கங்களின் ஆலோசனைகளையும், ஆட்சேபனைகளையும் பெற ஏதுவாக முதனிலை அறிவிக்கை வெளியிடப்படும். இவ்விதிகள் தயாரிக்கும் போது தொழிற்சங்கங்கள், வேலையளிப்போர் / தொழிலாளர் அமைப்புகள் மற்றும்

சட்ட வல்லுநர்களிடம் கலந்தாலோசித்து அனைத்து வகையான அமைப்பு சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன்கள் பாதிக்காத வகையில் இச்சட்டத் தொகுப்பு விதிகளுக்கு இறுதி வடிவம் அளிக்க முழு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**1.12. சிறப்பு சாதனைகள்**

❖ பணியில் ஈடுபட்டு இருக்கும்போது விபத்து ஏற்பட்டு பணியிடங்களில் அல்லது மருத்துவமனைகளில் இறக்கும் பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத கட்டுமான தொழிலாளர்களுக்கு விபத்து மரண நிதி உதவி ரூபாய் 1 லட்சத்திலிருந்து ரூபாய் 5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. 01.04.2020 முதல் 31.07.2021 வரையிலான காலத்தில் 40 பயனாளிகளுக்கு விபத்து மரண நலத்திட்ட

உதவித் தொகை ரூ.*2.00* கோடி வழங்கப்பட்டுள்ளது.

- கட்டுமான தொழிலாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் இடத்திலேயே நகரும் மருத்துவமனைகள் மூலம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையுடன் ஒருங்கிணைந்து மருத்துவ வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை *3,451* முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. *1,38,816* கட்டுமான தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- கட்டுமான பணியிடங்களில் தங்கி பணிபுரியும் கட்டுமான தொழிலாளர்களின் குழந்தைகள் முறையான / அனைவருக்கும் கல்வி திட்டப் பள்ளிகளில் பயில, போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தபட்டுள்ளது. இதுவரை *1,576* குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.
- தமிழ்நாடு அரசு ரூ.*1.05* கோடி செலவில் அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவு செய்யும்

முறையை எளிமைப் படுத்தவும், நலத் திட்ட உதவிகளை விரைவாக பெறுவதற்கும், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு பெறப்படும் பங்களிப்புத் தொகையினை நேரடியாக செலுத்துவதற்கும் இணையதள வசதி *(Online)* உருவாக்குவதற்கான பணிகள் முடிக்கப்பட்டு, *19.06.2020* முதல் இணையதளம் மூலம் தங்களது பதிவு / புதுப்பித்தல் செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், *26.08.2020* முதல் இணையதளம் மூலம் கேட்பு மனுக்கள் விண்ணப்பிக்க நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. பிற துறைகளை செயலி மூலம் ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. *31.07.2021* வரை *4,28,835* அமைப்புசாரா தொழிலாளர்கள் புதிதாக இணையதளம் மூலம் பதிவு செய்துள்ளனர்.

❖ சென்னை மாவட்டத்தில் கட்டுமானத் தொழிலில் ஈடுபடும் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள்

சென்னை மாவட்டத்தில் உள்ள அம்மா உணவகங்களில் இலவசமாக உண்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- அரசு பள்ளியில் பயிலும் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் அதிக மதிப்பெண்கள் பெறும் குழந்தைகளுக்கு சிறந்த தரத்திலான கல்வியினை நன்மதிப்புள்ள தனியார் பள்ளிகள் மூலம் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை வழங்க அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது. இதுவரை 166 குழந்தைகளுக்கு சிறந்த தனியார் பள்ளிகளில் சேர்க்கப்பட்டதற்கான கல்வி உதவித் தொகை. ரூ.51.94 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- காலணி, தலைக்கவசம், பிரதிபளிப்பு பாதுகாப்புறை, கையுறை மற்றும் பாதுகாப்பு மூக்கு கண்ணாடி போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் ரூ.5.44 கோடி

செலவில் 25,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- ❖ பொங்கல் திருநாளை முன்னிட்டு பதிவு செய்துள்ள கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு அரசால் வழங்கப்பட்டது. இப்பரிசுத் தொகுப்பில் பச்சரிசி, பாசிப்பருப்பு, சமையல் எண்ணெய், நெய், வெல்லம், ஏலக்காய், முந்திரி மற்றும் உலர் திராட்சை ஆகிய பொருட்கள் உள்ளன. இதற்கான செலவினம் ரூ.57.13 கோடி. 5,88,920 ஆண் தொழிலாளர்களுக்கு வேட்டி மற்றும் அங்கவஸ்திரமும் மற்றும் 6,80,630 பெண் தொழிலாளர்களுக்கு சேலையும் ரூ.37.28 கோடி செலவினத்தில் வழங்கப்பட்டது.

- ❖ அமைப்புசாரா ஓட்டுநர்களின் நலன் காத்திடும் பொருட்டு பாதுகாப்புப் பெட்டகம் வழங்க அரசு உத்தரவிட்டது. அதன்படி 20,000 பதிவு பெற்ற

அமைப்புசாரா ஓட்டுநர்களுக்கு சீருடை, காலணி, முதலுதவிப் பெட்டி மற்றும் தீயணைப்புக் கருவி ஆகிய சாதனங்கள் அடங்கிய பாதுகாப்புப் பெட்டகம் வழங்கப்பட்டது.

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் *30.07.2021* அன்று சென்னையில் *50,000* அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ரூ.*34.78* கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி துவக்கி வைக்கப்பட்டு, *50,000* அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## *2.* தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

தொழில்மயமாக்குதலில் நாட்டின் முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வரும் தமிழ்நாடு, பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களுக்கு அவற்றின் உற்பத்தி அலகுகளை அமைப்பதற்கு விருப்பமான இடமாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் நிலவும் சுமூகமான தொழில் புரிவதற்கான சூழல், வலுவான மற்றும் மிகச்சிறந்த உட்கட்டமைப்பு, திறன்மிகுந்த தொழிலாளர்கள், அமைதியான மற்றும் இணக்கமான தொழிற் சூழல் ஆகியவை இம்மாநிலத்தை தொழில் முதலீட்டாளர்களின் புகலிடமாகவும், நாட்டின் முன்னோடி உற்பத்தி மையமாகவும் திகழச் செய்துள்ளது. வாகனம் மற்றும் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், பொறியியல், மருந்து தயாரித்தல், நூற்பாலைகள், ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள், இரசாயனம், பிளாஸ்டிக், பட்டாசு மற்றும் தீப்பெட்டி போன்ற

பலதரப்பட்ட உற்பத்தி தொழில்கள் தமிழ்நாட்டில் அமையப்பெற்றுள்ளன.

தொடர் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலமாகவும், தொழிலாளர்களின் நலனை மேம்படுத்துவது மூலமாகவும் சிறந்த பொருளாதார வளர்ச்சியை அடைவதே அரசின் முதன்மை குறிக்கோளாக உள்ளது.

சுலபமாக தொழில் தொடங்கும் நடைமுறையை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களின் கீழ் சேவைகள் வழங்கப்படுவதற்கான கால வரம்பினை நிர்ணயித்தல், சட்டபூர்வமான பதிவேடுகள் பராமரித்தலை எளிமையாக்குதல் போன்ற பல்வேறு முயற்சிகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது மட்டுமல்லமால் இடர் அளவீட்டின் அடிப்படையில் கணினி மூலம்தெரிவு

செய்யப்படும் ஆய்வு முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கூறிய சீர்திருத்தங்களால் செயல்முறைகள் எளிதாக்கப்பட்டு அதன் காரணமாக நமது மாநிலத்தின் பொருளாதாரம் நிலையான துரித வளர்ச்சியை அடைந்துள்ளது.

இவ்வியக்ககத்தின் மூலம் வழங்கப்படும் பல்வேறு சேவைகளை பதிவு செய்தல் மற்றும் பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் உரிமம் வழங்குதல், நிர்வாகத்தினரால் இணைய வழியாக ஆண்டறிக்கைகள் சமர்ப்பித்தல் ஆகியவற்றிற்கென பிரத்தியேக வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வலைதளத்தின் வாயிலாக இணையவழி கட்டணம் செலுத்தும் வசதியும் மின் கையொப்பமிடப்பட்ட பதிவுச் சான்றிதழ் மற்றும் உரிமங்களை இணையவழியாக பெற வசதியும் செய்யப்பட்டுள்ளதால் இவ்வசதிகளை வழங்கும்

அலுவலர்களை நேரடியாக அணுகுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதிகளை உறுதிசெய்யும் நோக்கோடு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை திறம்பட அமலாக்கம் செய்து வருகிறது. நடைமுறையில் உள்ள அணுகுமுறையின் வாயிலாக தமிழ்நாட்டில் தொழில் அமைதி நிலவுவதற்கு இவ்வியக்ககம் முக்கிய பங்கு வகிக்கிறது.

தமிழகத்தில், *31.07.2021* அன்றுள்ளவாறு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் *47,270* தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டு *23,69,062* தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அதேபோல், கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம், *1996*-ன்கீழ் *14,811*

கட்டுமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு *7,14,449* தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

### *2.1.* நிர்வாக அமைப்பு

இயக்குநர் அவர்களின் தலைமையில் இயங்கி வரும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு மற்றும் கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்க பிரிவு ஆகிய இரண்டு பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

### *2.1.1.* தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு

இயக்குநரின் கீழ் ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநர், ஆறு கூடுதல் இயக்குநர்கள், *31* இணை இயக்குநர்கள், *55* துணை இயக்குநர்கள், *46* உதவி இயக்குநர்கள், ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் *8* உதவி அறுவை மருத்துவர்களுடன் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

### *2.1.2.* கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்க பிரிவு

இயக்குநரின் கீழ் ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநர், இரண்டு இணை இயக்குநர்கள், *8* துணை இயக்குநர்கள் மற்றும் *16* உதவி இயக்குநர்களுடன் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககமானது, தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் கட்டுமான பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்கள் காக்கப்படுவதை உறுதி செய்வதுடன் கீழ்கண்ட பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

*i.* தொழிற்சாலைகள் சட்டம், *1948* & தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள், *1950* மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களை தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்தல்.

*ii.* தொழிற்சாலைகளில் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு குறித்த செயல்பாடுகள்.

iii. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள், 2006 மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களை கட்டுமான பணியிடங்களில் அமலாக்கம் செய்தல்.

## 2.2. தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களை தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்தல்

இவ்வியக்ககம், தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகள் தொழிலாளர்களுக்கு சென்றடைவதை உறுதிபடுத்துவதற்கு காலமுறையில் தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்வதை முதன்மை பணியாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

## 2.3. தொழிற்சாலைகளில் எளிதாக தொழில் தொடங்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல்

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தால் மேற்கொள்ளப்படும் ஆய்வு நடைமுறைகளில் மாற்றம் செய்யப்பட்டு, தொழிற்சாலைகளின் அபாய வகைப்பாட்டின் அடிப்படையில் கணினி மூலமாக தெரிவு செய்து ஆய்வு மேற்கொள்ளும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொழில் முனைவோருக்கு சுலபமாக தொழில் தொடங்கும் வசதிகளை *(Ease of Doing Business)* வழங்கும் பொருட்டு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் உருவாக்கப்பட்டுள்ள பிரத்தியேக வலைதளத்தின் மூலம் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் வழங்கப்படும் சட்டபூர்வமான ஒப்புதல்களை இணையதளம் வழியாகவே கட்டணம் செலுத்தி இவ்வியக்கக அலுவலர்களின் மின் கையொப்பத்துடன் *(Digital*

*Signature)* பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வியக்ககத்தின் கீழ்கண்ட சேவைகளை [*https://dish.tn.gov.in*](https://dish.tn.gov.in) என்ற வலைதளத்தின் மூலம் பெற இயலும்.

- ❖ தொழிற்சாலைகள் சட்டம், *1948*-ன்கீழ் உரிமம் வழங்குதல்
- ❖ தொழிற்சாலைகள் சட்டம், *1948*-ன்கீழ் உரிமம் புதுப்பித்தல்
- ❖ தொழிற்சாலைகள் சட்டம், *1948*-ன்கீழ் வரைபடங்கள் ஒப்புதல் அளித்தல்.
- ❖ ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், *1970*-ன்கீழ் பதிவுச்சான்று வழங்குதல்.
- ❖ ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், *1970*-ன்கீழ் உரிமம் வழங்குதல்.
- ❖ மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், *1979*-ன்கீழ் பதிவுச்சான்று வழங்குதல்.

- ❖ மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979-ன்கீழ் உரிமம் வழங்குதல்.
- ❖ ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கைகள் தாக்கல் செய்தல்.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் 2021-ம் ஆண்டு முதல் புதுப்பிக்கப்படும் உரிமங்களை இவ்வியக்கக வலைதளத்தின் வாயிலாக கட்டணம் செலுத்திய பின்னர் நிர்வாகத்தினரால் தானாக புதுப்பிக்கப்பட்ட உரிமங்களை உரிமைதாரர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### *2.3.1.* ஆய்வு முறை

ஆய்வுகளில் வெளிப்படைத்தன்மையை மேலும் அதிகரிக்கும் விதமாக இடர் அளவீட்டின் படியான கணினி மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுகள், ஆய்வு அலுவலர்கள் ஒதுக்கீடு செய்தல் போன்ற சீர்திருத்தங்கள் தொழிலகப் பாதுகாப்பு மற்றும்

சுகாதார இயக்ககத்தின் ஆய்வு முறைகளில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்கும் வகையில் ஆய்வு முறைகளில் கீழ்காணும் கொள்கைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

*(i)* ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலை / கட்டடம் அல்லது இதர கட்டுமான நிறுவனத்தில் பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் ஒரே சமயத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

*(ii)* ஒரே அலுவலர் ஒரே தொழிற்சாலை / கட்டடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனத்தை இரண்டு முறை தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்ளக்கூடாது.

*(iii)* அனைத்து வகையான ஆய்வுகளுக்குமான ஆய்வறிக்கை, ஆய்வு முடிந்த

24 மணி நேரத்திற்குள் துறை மற்றும் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை / கட்டடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டும்.

தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி முறையின் அடிப்படையிலும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.3.1.1. அதிக அபாயகரமான தொழிற்சாலைகள்

100 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் அபாயகரமான செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் (தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 87 மற்றும் விதி 95ன்கீழ் வகைப்படுத்தப்பட்டவை) மற்றும் ஊறு விளைவிக்கும் செயல்முறை

கொண்ட தொழிற்சாலைகள் (தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு *2 (cb)*-ன் அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை) மற்றும் அனைத்து பெருவிபத்து இடர் தரும் தொழிற்சாலைகள் "அதிக அபாயகரமான தொழிற்சாலைகள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### *2.3.1.2.* நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்

*100* தொழிலாளர்கள் வரை பணிபுரியும் அபாயகரமான தொழில் முறை கொண்ட தொழிற்சாலைகள் (தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு *87* மற்றும் விதி *95*ன்கீழ் வகைப்படுத்தப்பட்டவை) மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் (தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு *2 (cb)*-ன் அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை) மற்றும் *250* தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் அபாயகரமான தொழில் முறை மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை கொண்ட

தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்படாத தொழிற்சாலைகள் "நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### 2.3.1.3. குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்

அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் மற்றும் நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்ட தொழிற்சாலைகள் தவிர மற்ற அனைத்து தொழிற்சாலைகளும் "குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் வருடத்திற்கு ஒரு முறையும், நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும், குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

*01.04.2020* முதல் *31.07.2021* உடன் முடிவடைந்த காலத்தில் தொழிற்சாலைகளில் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் *11,313* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகளை உறுதி செய்யப்பட்டுள்ளன.

**2.4. சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்**

**(i) சுயசான்றிதழ் திட்டம்**

*250* தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகளுக்கும், குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகளுக்கும் சுய சான்றிதழ் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகளுக்கு ஆய்விலிருந்து விலக்களிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நடுத்தர அபாயகரமான

தொழிற்சாலைகள் அங்கொன்று இங்கொன்றான முறையில் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படும்.

**(ii) எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள்**

தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு பயனளிக்கும் விதமாகவும், நடைமுறைகளை எளிமையாக்கவும், துரிதமாக்கவும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950ன் விதி 100ன் படி தொழிற்சாலைகள் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையினை படிவம் எண் 22ல் சமர்ப்பிக்க வேண்டும். பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் மீதான பல்வேறு விவரங்கள் இணைய வழியாக ஒரே படிவத்தில் சமர்ப்பிக்கப்படுவதால் பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் தனித்தனியாக ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

## 2.5. நீடித்த வளர்ச்சிக்கான நிலையான இலக்கிற்கான குறியீடுகளை மேம்படுத்த இவ்வியக்ககம் சார்ந்த முயற்சிகள்

ஐக்கிய நாடுகள் சபையால் 2015-ஆம் ஆண்டு உலகளாவிய இலக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள், சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை சமப்படுத்தும் வகையில் அமைய வேண்டும்.

### இலக்கு எண். 5.1

வழக்கமான சம்பளம் / ஊதியம் பெறும் தொழிலாளர்களில் பெண் மற்றும் ஆண் தொழிலாளர்களால் பெறப்படும் சராசரி ஊதியம் / சம்பள ஈட்டும் விகிதம்.

தற்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படும் பணியின் தன்மை வேறுபட்டு இருப்பதால் அவர்கள் ஈட்டும் சம்பளம் / ஊதியம் வேறுபட்டுள்ளது. பணிகளில்

பாலினப்பாகுபாட்டின் அடிப்படையில் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கான சம்பள / ஊதிய வேறுபாட்டினை தவிர்க்கும் வகையில் சம ஊதிய சட்டம், *1976*-ஐ அமலாக்கம் செய்வதன் மூலம் ஒரே மாதிரியான தன்மை கொண்ட பணிகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு, ஆண்களுக்கு இணையான ஊதியம் உறுதி செய்யப்பட்டு, பாலின அடிப்படையில் பெண்களுக்கு எதிராக வேறுபாடு காணுதல் தவிர்க்கப்பட்டுள்ளது.

**இலக்கு எண். *5.5***

பெண் மற்றும் ஆண் தொழிலாளர்களின் பங்களிப்பு விகிதம் *(LFPR)*

பெண் தொழிலாளர்களின் உடல் நலம், பாதுகாப்பு மற்றும் நலன் ஆகியவற்றை உறுதிசெய்வதன் மூலம் அவர்களை அதிகளவில் தொழில்துறையில் பணிசெய்ய ஊக்குவிக்கவும், பெண் தொழிலாளர்களின் பங்களிப்பு விகிதத்தை

மேம்படுத்தவும் பின்வரும் வசதிகள் செயல்படுத்தப்படுகிறது.

*i)* இரவு நேரங்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான முறையில் போக்குவரத்து வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

*ii)* பெண்தொழிலாளர்களுக்கு சுகாதார வசதிகள், உடல்நலம் மற்றும் நலவசதிகளை முறையாக அமலாக்கம் செய்தல்.

*iii)* தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள இடங்களில் பொதுவான குழந்தைகள் காப்பகம் அமைத்தல்.

*iv)* பணியிடங்களில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் (தடுத்தல், தடை மற்றும் நிவாரணம்) சட்டம், *2013*-ஐ முறையாக செயல்படுத்துதல், மற்றும்

அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் பாலியல் உள்புகார் குழு அமைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்தல்.

### 2.6. பட்டாசு தொழிற்சாலை ஆய்வுகள்

பட்டாசு உற்பத்தியில் கையாளப்படும் அனைத்து இரசாயனங்கள், இடைப்பட்ட உற்பத்தி பொருட்கள், இறுதியாக தயாரிக்கப்படும் பட்டாசுகள் ஆகியவை மிகவும் அபாயகரமான தன்மையுடையவை என்பதால் உரிய பாதுகாப்பு வழிமுறைகள் கடைபிடிக்கப்படாவிடில், அவை தொழிலாளர்களின் உயிருக்கும், பாதுகாப்பிற்கும் ஊறு விளைவிப்பதாக அமைந்து விடும். எனவே, பட்டாசு தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு காலமுறைதோறும் ஆய்வு செய்யப்பட்டு பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பான

செயல்முறைகள் மற்றும் கையாளும் வழிமுறைகள் குறித்து கற்றுத் தரப்படுகிறது. 01.04.2020 முதல் 31.07.2021 உடன் முடிவடைந்த காலத்தில் விதி மீறல்கள் காணப்பட்ட பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு எதிராக 455 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.19,35,500/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில், பண்டிகையை ஒட்டிய காலங்களில் மாநிலத்தின் மற்ற பகுதியிலிருக்கும் இணை இயக்குநர்களைக் கொண்ட சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அம்மாவட்டத்திலுள்ள பட்டாசு தொழிற்சாலைகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இக்குழு ஆய்வுகளின் போது பட்டாசு தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் அபாயகரமான பொருட்களை பாதுகாப்பாக சேமிப்பது மற்றும் கையாளுவது குறித்து கண்காணிக்கப்படுகிறது. விதி மீறல்கள் காணப்படும்

தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் கடும் விதி மீறல்கள் காணப்படின் உற்பத்தியை நிறுத்துவதற்கான தடையாணைகள் வழங்கப்படுகின்றன. *2020-21* ஆம் ஆண்டில், தீபாவளி பண்டிகையின் போது *296* குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### *2.6.1.* பட்டாசு தொழிற்சாலைகளுக்கான சிறப்பு நடமாடும் கண்காணிப்புக் குழு

பட்டாசு தொழிற்சாலைகள் அபாயகரமானவை மட்டுமின்றி அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்களைக் கொண்டவையாகும். விருதுநகர் மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் பட்டாசு தொழிற்சாலைகள் இயங்கி வருவதால், அத்தொழிற்சாலைகளில் பாதுகாப்பு வழிமுறைகளை கூடுதல் முனைப்புடன் நடைமுறைப்படுத்தி, பாதுகாப்பான பணி நிலைமைகளை உறுதி செய்யும் வகையில் அத்தொழிற்சாலைகளை ஆய்வு செய்ய

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக கூடுதல் இயக்குநர் தலைமையில், பிரத்தியேகமாக ஒரு நடமாடும் கண்காணிப்புக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு தொழிலாளர்களது பணிப் பாதுகாப்பை உறுதி செய்ய தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வுகளை மேற்கொள்வதோடு அங்குள்ள தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு பாதுகாப்புடன் பணிபுரியும் வழிமுறைகள் குறித்து எடுத்துரைக்கிறது.

நடமாடும் கண்காணிப்புக் குழு உருவாக்கப்பட்ட பின்னர், பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்கள், பாதுகாப்பு விதிமுறைகளை நன்கு அறிந்துள்ளனர்.

*01.04.2020* முதல் *31.07.2021* உடன் முடிவடைந்த காலத்தில், *179* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விதி மீறல்கள் காணப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது *52* வழக்குகள்

தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.96,000/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

பட்டாசு தொழிற்சாலைகளில் நிகழும் விபத்துக்களை குறைக்கும் பொருட்டு அத்தொழிற்சாலைகளில் கடைபிடிக்கப்படும் பாதுகாப்பு வழிமுறைகளை காலமுறைதோறும் திறனாய்வு செய்ய விருதுநகர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

### *2.6.2.* பட்டாசு தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம்

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் பெரும்பாலும் படிப்பறிவு இல்லாதவர்களாகவும், பாதுகாப்பான பணி வழி முறைகளை அறியாதவர்களாகவும், இரசாயனங்களின் கூறுகள் குறித்து அறியாதவர்களாகவும் உள்ளதால் கடுமையான விபத்துகள் மற்றும் மரண விபத்துகள் அதிக

எண்ணிக்கையில் நிகழ்கின்றன. பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஃபோர்மேன்கள் / மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் மத்தியில் பட்டாசு தயாரிப்பின் போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு செயல்முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிவகாசியில் ஒரு பயிற்சி மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் கீழ்கண்ட பாதுகாப்பு அம்சங்கள் குறித்த சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

- இரசாயனங்களின் கூறுகள்
- இரசாயனங்களை கையாளுதல்
- இரசாயனங்களின் கலவை
- இரசாயனங்களின் வேதி வினை
- பாதுகாப்பான செயல்முறைகள்

இப்பயிற்சி மையத்தில் இதுவரை 43 குழுக்களுக்கு ஒரு மாத பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு அதன் மூலம் 1,054 ஃபோர்மேன்கள் /

மேற்பார்வையாளர்கள் பயனடைந்துள்ளனர். *01.04.2020* முதல் *31.07.2021* உடன் முடிவடைந்த காலத்தில் *30* ஒரு நாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, *1,177* தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## *2.7.* தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதல்

தொழிற்சாலைகள் சட்டம், *1948*ன் பிரிவு *67* மற்றும் குழந்தை மற்றும் வளரிளம் தொழிலாளர் (தடை செய்தல் மற்றும் முறைபடுத்துதல்) சட்டம், *1986*ல் வரையறுக்கப்பட்டவாறு தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர் பணியமர்த்தப்படுவதை தடுக்கும் வகையில், இவ்வியக்கக அலுவலர்களால் காலமுறைப்படி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், ஒவ்வொரு மாதமும் தொழிலாளர் துறை மற்றும் தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட அலுவலர்களுடன் இணைந்து தொழிற்சாலைகள் மற்றும் சிறு நிறுவனங்களில் குழு

ஆய்வுகளும் நடத்தப்படுகின்றன. *01.04.2020* முதல் *31.07.2021* உடன் முடிவடைந்த காலத்தில் *1,962* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சட்ட விதிகளை மீறி செயல்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது நீதிமன்றங்களில் *2* வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

## *2.8.* இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகள்

ஊறுவிளைவிக்கும் மூலப்பொருட்கள் மற்றும் இரசாயனங்களை பயன்படுத்தும் தொழிற்சாலைகளில் அவற்றை சேமித்து வைக்கும் / கையாளும் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கும், உடல்நலத்திற்கும் ஊறு விளைவிக்கக் கூடியதாகவும் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தக் கூடியதாகவும் விளங்கும் தொழிற்சாலைகள் ஊறுவிளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் என தொழிற்சாலைகள் சட்டம், *1948* (திருத்தப்பட்ட சட்டம் *1987)*

பிரிவு *2(cb)*ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தொழிற்சாலைகள் சட்டம், *1948* (திருத்தப்பட்ட சட்டம் *1987)*-ன் பிரிவு *2(cb)*ன் கீழ் முதல் அட்டவணையில் *29* செயல்முறைகள், இடர்தரும் தொழில் செயல்முறைகளாக பட்டியலிடப்பட்டுள்ளன.

### *2.8.1.* பெரும்விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள்

ஊறுவிளைவிக்கும் இரசாயனங்களின் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள், *1989*-ன் அட்டவணை-*3*ல் குறிப்பிட்டுள்ள அதிகபட்ச அளவுக்கு மேல் இரசாயனங்களை சேமித்து மற்றும் கையாளும் தொழிற்சாலைகள் பெரும்விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. *31.07.2021* அன்றைய நிலையில் தமிழ்நாட்டில் *174* தொழிற்சாலைகள் பெரும் விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் என கண்டறியப்பட்டுள்ளன.

அவசர காலகட்டத்தில் ஏற்படக் கூடிய நடைமுறை பிரச்சினைகளை சரியாக அளவீடு செய்யும் பொருட்டு, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களின் மேற்பார்வையில் இத்தொழிற்சாலைகளில் மாதிரி ஒத்திகைகள் காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. *01.04.2020* முதல் *31.07.2021* உடன் முடிவடைந்த காலத்தில் *143* மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன.

## *2.9.* மனை மதிப்பீட்டு குழு

இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகள் துவக்குவதற்கு முன்னரோ அல்லது விரிவாக்கம் செய்வதற்கு முன்னரோ அனுமதி கோரி தொழிற்சாலை நிர்வாகத்தினரால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மீது அரசுக்கு ஆலோசனை வழங்க, தொழிற்சாலைகள் சட்டம், *1948*-ன் *(*திருத்தப்பட்ட சட்டம், *1987)* கீழ் வரையறுக்கப்பட்டவாறு 'மனை மதிப்பீட்டுக் குழு'

ஒன்று மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்வதோடு, பாதுகாப்பான சூழ்நிலை மற்றும் பாதுகாப்பான பணி செயல்முறைகளுடன் துவக்க நிலையிலிருந்தே இயங்குவதற்கு உரிய வழிமுறைகள் குறித்து இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு அறிவுரை வழங்குகிறது. *01.04.2020* முதல் *31.07.2021* உடன் முடிவடைந்த காலத்தில் *24* விண்ணப்பங்கள் மனை மதிப்பீட்டு குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## *2.10.* தொழிற்சாலைகளில் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு குறித்த செயல்பாடுகள்

### *2.10.1.* உடல்நல மேம்பாட்டு செயல்பாடுகள்

இவ்வியக்ககத்தில் ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் *8* உதவி அறுவை மருத்துவர்களுடன் மருத்துவ பிரிவு இயங்கி

வருகிறது, இப்பிரிவு, அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு காலமுறைப்படி மருத்துவ பரிசோதனை செய்து, மருத்துவ அறிவுரைகள் மற்றும் இதர தடுப்பு நடவடிக்கைகள் குறித்து நிர்வாகத்தினருக்கு ஆலோசனைகள் வழங்கும் பணியை மேற்கொண்டு வருகிறது. தொழிற்சாலைகளில் பணிபுரியும் வளரிளம் பருவ தொழிலாளர்களுக்கு மருத்துவ அலுவலர்களால் மருத்துவ தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. குழந்தைத் தொழிலாளர்களின் வயதினை உறுதி செய்திடும் பொருட்டு குழந்தைத் தொழிலாளர் ஆய்வுக் குழுவுடன் மருத்துவ அலுவலர்கள் செல்கின்றனர்.

*01.04.2020* முதல் *31.07.2021* உடன் முடிவடைந்த காலத்தில் மருத்துவ அலுவலர்கள் அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகள்

கொண்ட தொழிற்சாலைகளில் பணிபுரியும் *1,03,895* தொழிலாளர்களுக்கும், உணவகங்களில் பணிபுரியும் *12,549* தொழிலாளர்களுக்கும் மருத்துவச் சான்றிதழ்களை வழங்கி உள்ளனர். மேலும், *36,496* வளரிளம் பருவத்தினருக்கு உடல் தகுதிச் சான்றிதழ்களையும் வழங்கியுள்ளனர்.

### *2.10.2.* இரைச்சலின் அளவினை கண்காணித்தல்

தொழிற்சாலைகளில் நிலவும் அதிகப்படியான இரைச்சலால் தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய உடல்நலக் கேடுகளைத் தடுக்க இவ்வியக்ககம் சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. ஒலி அளப்பான் மூலம் இரைச்சலை அளவிட்டு, தொழிலாளர்களை அதிகப்படியான இரைச்சலின் பாதிப்பிலிருந்து பாதுகாத்திட இவ்வியக்ககம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆய்வுகளின் போது இது சம்பந்தமாக தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்படுவதுடன், தேவைப்படும்

நிகழ்வுகளில் சட்ட ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

### *2.10.3.* பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு

பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள், பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள், பாதுகாப்பு ஒத்திகைகள் போன்ற பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இவ்வியக்கக அலுவலர்கள் விபத்துக்களை குறைக்க தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களில் மூன்று பாதுகாப்பு பிரச்சாரக்குழுக்கள் இவ்வியக்ககத்தால் உருவாக்கப்பட்டு, இக்குழுக்கள் இரசாயனம், பட்டாசு, தோல்பதனிடும் தொழிற்சாலைகள், வெளுத்தல் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்கு காலமுறை அடிப்படையில் சென்று அத்தொழிற்சாலைகளின் பாதுகாப்பு வழிமுறைகளை

ஆய்வு செய்து, அத்தொழிற்சாலைகள் எதிர்நோக்கக்கூடிய திடீர் அபாயங்கள் குறித்தும் விபத்துகளை தவிர்க்க அத்தொழிற்சாலைகளில் கடைபிடிக்க வேண்டிய போதுமான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்களுக்கு எடுத்துரைக்கின்றன.

*01.04.2020* முதல் *31.07.2021* உடன் முடிவடைந்த காலத்தில் இக்குழுக்களால் *62* பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டு, *2,444* தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

### *2.10.4.*பாதுகாப்பு பயிற்சி

இவ்வியக்கக அலுவலர்களால் தொழிற்சாலை வளாகத்திலேயே, பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. *01.04.2020* முதல் *31.07.2021* உடன் முடிவடைந்த காலத்தில்

393 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 20,587 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

பாதுகாப்பு கருத்தரங்குகள் நடத்துதல் போன்ற பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபட்டு வரும் தேசிய பாதுகாப்பு குழுமம் மற்றும் தேசிய உற்பத்தி குழுமம் போன்ற பிற அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் தொழிற்சாலை நிர்வாகத்தினக்கும், நேரடி தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

### 2.10.5. அழுத்தக்கலன் பாதுகாப்பினை உறுதி செய்தல்

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்துவது மட்டுமல்லாமல் தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக்கலன்கள் பாதுகாப்பாக செயல்படுவதையும்

இவ்வியக்கக அலுவலர்கள் உறுதி செய்கின்றனர். இந்திய கொதிகலன்கள் சட்டத்தின் கீழ்வரும் நீராவி கொதிகலன்களைத் தவிர்த்து, வாயு மண்டல காற்று அழுத்தத்திற்கு மேல் *(above atmospheric pressure)* செயல்படும் அனைத்து அழுத்தக்கலன்களிலும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வெளிப்புற சோதனையும், ஆண்டுக்கு ஒரு முறை உட்புற சோதனையும் அல்லது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீரழுத்த சோதனையும் அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நுண்ணொலி சோதனையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. *01.04.2020* முதல் *31.07.2021* உடன் முடிவடைந்த காலத்தில் மொத்தம் *1,55,308* வெளிப்புற, *1,058* உட்புற, *19,209* நீர் அழுத்த மற்றும் *8,989* நுண்ணொலி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### *2.11.* தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்

மாண்புமிகு உச்சநீதிமன்ற ஆணையின்படி, தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில்

ஏற்படும் விபத்தில் மரணமடையும் தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு நிவாரணமாக ரூ.50,000/- வழங்க வகை செய்யும் புதிய தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டமானது தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக்காப்பீட்டுக்கான பிரிமியத் தொகை பல்வேறு காப்பீட்டு நிறுவனங்கள், பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் ஆகியோருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு தொழிலாளிக்கும் பிரிமியம் செலுத்த வேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பு என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. இந்த நிவாரணமானது தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் *(E.S.I Scheme)* மற்றும் பணியாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணங்கள் அல்லாது கூடுதலாக வழங்கப்படுவதாகும். நடப்பு ஆண்டில் யாதொரு நாளில் பணிபுரிந்துள்ள தொழிலாளர்களின் அதிகபட்ச எண்ணிக்கையோடு

கூடுதலாக *10%* எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் இக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட வேண்டும். தற்போது, தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, திருத்தங்கல் என்ற காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் புதுப்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## *2.12.* பாதுகாப்பு விருதுகள் வழங்கும் திட்டம்

### *2.12.1.* மாநில பாதுகாப்பு விருதுகள்

விபத்து தடுப்பில் சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு தொழிலாளர்களிடையே பாதுகாப்பு உணர்வை மேம்படுத்தி, சிறந்த பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றி, விபத்தில்லா நிலையை எட்டும் நோக்குடன் செயல்படும் தொழிற்சாலை நிர்வாகத்தினரை ஊக்குவித்து அவர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும்,

மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் விபத்துகளைக் குறைக்கும் விதமாக செயல்படும் பல்வேறு வகை தொழிற்சாலைகளுக்கு ஆண்டுதோறும் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளாக ஒவ்வொரு பிரிவிலும் தலா *90* விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### *2.12.2.* உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்

தொழிற்சாலைகளில் உற்பத்தி திறனை உயர்த்துதல், பணிச் சூழலை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றில் சிறந்த ஆலோசனைகளை வழங்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், ஆண்டுதோறும் “தமிழ்நாடு அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்” வழங்கப்பட்டு வருகின்றன.

**2.13. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம், 1996 மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாளர் நலச் சட்டங்களை கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் அமலாக்கம் செய்தல்**

கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள், 2006-ன்கீழ் கட்டுமான நிறுவனங்களில் உள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் அடிப்படை வசதிகள், பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் இதர வசதிகளை உறுதி செய்வதை முதன்மை நோக்கமாக கொண்டு கட்டுமானம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு கடந்த 2013-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகளை

அமலாக்கம் செய்வதோடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழில்களில் ஈடுபட்டுள்ள நிர்வாகத்தினர், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி அளித்து கட்டுமான இடங்களில் பாதுகாப்பினை மேம்படுத்தவும், விபத்துக்களை குறைக்கவும் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

01.04.2020 முதல் 31.07.2021 உடன் முடிவடைந்த காலத்தில், 2,254 கட்டுமான நிறுவனங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 1,324 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சட்டவிதிகளை மீறி செயல்பட்ட நிறுவனங்கள் மீது ஆய்வின் பொழுது காணப்பட்ட முரண்பாடுகளுக்காக 238 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றங்களால் ரூ.50,000/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

### *2.13.1.* கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் எளிமையாக்கப்பட்ட தொழில் தொடங்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல்

தொழில் முனைவோருக்கு சுலபமாக தொழில் தொடங்கும் வசதிகளை *(Ease of Doing Business)* வழங்கும் பொருட்டு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் உருவாக்கப்பட்டுள்ள பிரத்தியேக வலைதளத்தின் மூலம் பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் வழங்கப்படும் சட்டப்பூர்வமான ஒப்புதல்களை இணையதளம் வழியாகவே கட்டணம் செலுத்தி இவ்வியக்கக அலுவலர்களின் மின்கையொப்பத்துடன் *(Digital Signature)* இவ்வலைதளம் மூலம் பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வியக்ககத்தின் கீழ்கண்ட சேவைகளை *https://dish.tn.gov.in* என்ற வலைதளத்தின் மூலம் பெற இயலும்.

- ❖ கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்)

சட்டம், *1996*-ன்கீழ் கட்டுமான நிறுவனங்களை பதிவு செய்தல்

- ❖ ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், *1970*-ன்கீழ் பதிவுச் சான்று வழங்குதல்.

- ❖ ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், *1970*-ன்கீழ் உரிமம் வழங்குதல்.

- ❖ மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், *1979*-ன்கீழ் பதிவுச் சான்று வழங்குதல்.

- ❖ மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், *1979*-ன்கீழ் உரிமம் வழங்குதல்.

- ❖ ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்தல்.

### 2.13.2. ஆய்வு முறை

கட்டடம் மற்றும் இதர கட்டுமானங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளை முறைப்படுத்தும் விதமாக கட்டுமான பணித்தன்மையின் அடிப்படையிலும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் கட்டுமான பணியிடங்கள் அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

#### 2.13.2.1. அதிக அபாயகரமான கட்டுமானங்கள்

கட்டுமான பணியிடங்களில் 500 தொழிலாளர்களுக்கு மேல் பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள், 5 மற்றும் அதற்கு மேற்பட்ட தளங்கள் கொண்ட கட்டுமானங்கள், இரயில்வே கட்டுமானங்கள், மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கட்டுமான பணிகள், அணை கட்டுமானம் போன்ற

அபாயங்கள் நிறைந்த அனைத்து கட்டுமானங்களும் அதிக அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளது.

### *2.13.2.2.* நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள்

*50* முதல் *500* தொழிலாளர்கள் வரை பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள் மற்றும் *2*-லிருந்து *5* தளங்கள் வரை கொண்ட கட்டுமானங்கள் நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளது.

### *2.13.2.3.* குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள்

அதிக அபாயகரமான கட்டுமானங்கள் மற்றும் நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்ட கட்டுமானங்களைத் தவிர மற்ற அனைத்து கட்டுமானங்களும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அலுவலரின் ஆய்வு அட்டவணை இணையவழியாக அங்கொன்றும் இங்கொன்றுமென்ற முறையில் தேர்வு செய்யப்படும். அதிக அபாயகரமான கட்டுமானங்கள் வருடத்திற்கு ஒருமுறையும், நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும், குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

## *2.14.* சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்

**சுய சான்றிதழ் திட்டம்**

"சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்" கீழ்கண்ட கட்டுமான நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

*(அ)* நடுத்தர அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள்

### *(ஆ)* குறைந்த அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள்

சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குறைந்த அபாயகரமான கட்டுமான நிறுவனங்களுக்கு ஆய்விலிருந்து விலக்களிக்கப்படும். மேற்படி திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நடுத்தர அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படும். எனினும், இத்தகைய கட்டடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனங்களில் புகார், விபத்து அல்லது பிற அவசர நிகழ்வுகளில் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக இயக்குநர் அவர்களின் அனுமதியுடன் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

## 2.15. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு

கட்டுமான இடங்கள், அதிகப்படியான தொழிலாளர்கள் செறிந்துள்ளதாகவும், கல்வியறிவு இல்லாத வெளி மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை அதிகளவில் பணியமர்த்தும் இடங்களாக இருப்பதாலும், பாதுகாப்பான பணி முறைகள் குறித்து விழிப்புணர்வு இல்லாததாலும் அதிக விபத்துக்கள் நிகழ வாய்ப்புள்ள இடங்களாக உள்ளதால் அவர்களது தாய் மொழியிலேயே பாதுகாப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. கட்டுமான பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இவ்வியக்ககக கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு துணை இயக்குநர்களால் ஒவ்வொரு மாதமும் தலா இரண்டு பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

*01.04.2020* முதல் *31.07.2021* உடன் முடிவடைந்த காலத்தில், *945* தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் *24* பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்படுத்தப்பட்டு விபத்துகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.

### *2.16.* சிறப்பு முயற்சிகள்

#### *2.16.1.* நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களுக்கான இணைய கண்காணிப்பு மையம் *(Online Monitoring Centre)*

தொழிற்சாலைகளில் வெளியாகும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களை கண்காணிக்க தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகத்தில் ரூ.*29.75* இலட்சம் செலவில் ஒரு இணைய கண்காணிப்பு மையம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களின் அடர்த்தி,

நிகழ்நேர மதிப்பீட்டின்படி இணையதளம் மூலம் இக்கண்காணிப்பு மையத்தில் கண்காணிக்கப்படுகிறது. இக்கண்காணிப்பு மையத்துடன் ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகள் இணைக்கப்பட்டு அத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் நிகழ்நேர மதிப்பீட்டின்படி கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### *2.16.2.* இவ்வியக்ககக் கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்கப் பிரிவு அலுவலர்களுக்கு மடிக்கணினிகள்

கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் சட்டங்களை சிறப்பாக அமலாக்கம் செய்யவும், கட்டுமான பணியிடங்களில் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் எடுக்க ஏதுவாகவும் இவ்வியக்கக கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்கப்பிரிவு அலுவலர்களுக்கு *30* மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

### *2.16.3.* கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு குறும்படங்கள், நிலையான பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் பாதுகாப்பு தகவல் பலகைகள்

கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்த ஏதுவாக பாதுகாப்பு குறும்படங்கள், நிலையான பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் பாதுகாப்பு தகவல் பலகைகள் தயாரிக்கப்பட்டு, கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்களின் பணியிட பாதுகாப்பிற்கு உதவும் பொருட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### *2.16.4.* பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளை தடுக்க பாதுகாப்பு குறும்படங்கள்

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மூன்று பாதுகாப்பு குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு ஆய்வுகளின் போது திரையிடப்பட்டு வருகிறது. மேலும்

இக்குறும்படங்களை சிவகாசி பயிற்சி மையம் வாயிலாக பாதுகாப்பு பிரச்சார வாகனத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு திரையிட்டுக் காண்பிக்கப்படுகிறது.

### *2.16.5.* அலுவலர்கள் உடன் எடுத்து செல்லக்கூடிய பல்வகை வாயு பகுப்பாய்விகள்

தொழிற்சாலைகளில் வெளியாகும் விஷ வாயுக்களை அளவிடும் பொருட்டு ஆய்வுகளின் போது அலுவலர்கள் உடன் எடுத்துச் செல்லக்கூடிய பல்வகை வாயு பகுப்பாய்விகள் இவ்வியக்கக அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### *2.16.6.* கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள்

கட்டுமான தொழிலில் ஈடுபட்டுள்ள *25,000* தொழிலாளர்களுக்கு ரூ.*5.00* கோடி செலவில் பாதுகாப்பு உபகரணங்கள் கொண்ட பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கட்டுமான தொழிலாளர்களின் பாதுகாப்பினை காத்திடும் விதமாக ஒரு இலட்சம் கட்டுமான தொழிலாளர்களுக்கு ரூ.21.39 கோடி செலவில் பாதுகாப்பு உபகரணங்கள் அடங்கிய பாதுகாப்புப் பெட்டகம் பெற்று வழங்கப்படுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

## 3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

### வேலைவாய்ப்பு பிரிவு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் வேலைவாய்ப்பு பிரிவின் கீழ் இயங்கும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள், தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வாயிலாக மாநிலத்திலுள்ள வேலைநாடுநர்களின் வேலை பெறும் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் இயங்கி வருகின்றன. இம்மையங்கள், வேலைநாடுநர்களை பதிவு செய்து அரசுத்துறைகளால் அறிவிப்பு செய்யப்படும் காலிப்பணியிடங்களுக்கு பதிவு மூப்பு அடிப்படையில் பதிவுதாரர்களின் பட்டியலை அனுப்பி வேலைநாடுநர்களின் தேவைகளை பூர்த்தி செய்கிறது. மேலும், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள், மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து, வழக்கமான சிறிய மற்றும்

பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துவதன் வாயிலாக தனியார் துறையில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்றன. இவ்வேலைவாய்ப்பு முகாம்கள் பணி நியமனம் கிடைக்கப்பெறாத வேலைநாடுநர்களது திறனை மதிப்பீடு செய்து, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் வழங்கப்பட்டு வரும் பயிற்சிகளில் தேவையான திறன் பயிற்சிகளை தேர்வுசெய்ய வழிவகை செய்கின்றன. பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களிலிருந்து வேலைவாய்ப்பு தொடர்பான புள்ளி விவரங்களை உரிய கால இடைவெளியில் சேகரிப்பதை துறை மேற்கொள்கிறது. மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப்பணிகளுக்கான தேர்வுகளுக்கு இணைய வழி பயிற்சி வகுப்புகளை நடத்த தேவையான நடவடிக்கைகள் வேலைவாய்ப்பு பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும்

மையங்கள் இளைஞர்களுக்குத் தேவையான திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு வழிவகை செய்கின்றன. இத்துறையால் நிர்வகிக்கப்பட்டுவரும் தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம், முன்னணி வேலையளிக்கும் நிறுவனங்கள் மற்றும் மனித வளத் தேர்வு முகமைகளை உள்ளடக்கும் வகையில் மறு சீரமைக்கப்பட்டு இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை அளிக்கும் வகையில் செயல்படுத்தப்படும்.

### *3.1.* வேலைவாய்ப்பு பிரிவின் நிர்வாக கட்டமைப்பு


இயக்குநர் அவர்களின் தலைமையில் இயங்கும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் இயக்குநரகத்தில் அவருக்கு உதவ இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), இணை இயக்குநர் (தொழில்நெறி வழிகாட்டல்), நான்கு துணை இயக்குநர்கள், ஒரு முதன்மை கணக்கு அலுவலர், மூன்று உதவி இயக்குநர்கள் மற்றும் ஐந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

வேலைவாய்ப்பு பிரிவின் சார்நிலை அலுவலகங்கள் அனைத்தும் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி என ஆறு மண்டல வேலைவாய்ப்பு இணை இயக்குநர்களால் கண்காணிக்கப்படுகின்றன.

வேலைவாய்ப்பு பிரிவு, ***33*** மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள், சென்னை மற்றும் மதுரை ஆகிய *2* இடங்களில் தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகங்கள், சென்னையில் ஒரு மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய ஐந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள், உதகமண்டலத்தில் செயல்பட்டு வரும் பழங்குடியினருக்கான ஒரு சிறப்பு தொழில் நெறி

வழிகாட்டும் மையம் மற்றும் சென்னையில் நிறுவப்பட்டுள்ள மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம் என மொத்தம் ***43*** சார்நிலை அலுவலகங்களை உள்ளடக்கியதாகும்.

வேலைவாய்ப்பு பிரிவின் நிர்வாக அமைப்பு பின்வருமாறு:-



## 3.2. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகள்

- வேலைநாடுநர்களை பதிவு செய்தல், புதுப்பித்தல் மற்றும் பதிவை முழுமைப்படுத்துதல்.
- பொதுத்துறை மற்றும் தனியார்துறை வேலையளிப்போரால் அறிவிக்கப்படும் காலிப்பணியிடங்களுக்கு வேலை நாடுநர்களை பரிந்துரை செய்தல்.
- பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தொழில்நெறி விழிப்புணர்வு உரைகள்.
- உரிய கால இடைவெளிகளில் தொழில்நெறி வழிகாட்டுதல் கையேடுகளை வெளியிடுதல்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.
- தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாக போட்டித்தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.
- கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.


- அனைத்துப் போட்டித்தேர்வுகளுக்கான மெய் நிகர் கற்றல் இணையதளம்.
- தனியார் துறையில் வேலைவாய்ப்பு அளிக்க உரிய கால இடைவெளியில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல்.
- தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம் வாயிலாக தனியார் துறையில் பணியமர்த்தம் செய்தல்.
- வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்குதல்.
- திறன் பயிற்சிக்கு ஆள்சேர்ப்பு மற்றும் பதிவு மேற்கொள்ளுதல்.
- அயல்நாட்டு வேலைவாய்ப்பிற்கு பதிவு செய்தல் மற்றும் வழிகாட்டுதல்.
- வேலை நிலவர தகவல் தொடர்பிலான புள்ளி விவரங்களை சேகரித்து தொகுத்தல்.

## *3.3.* வேலைவாய்ப்பு இணையதளம் *(www.tnvelaivaaippu.gov.in)*


வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகளை, அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்லும் வகையில் *15.09.2010* அன்று இணைய

வழி சேவைகள் தொடங்கப்பட்டன. இதனை தொடர்ந்து, வேலைவாய்ப்பு வலைதளத்தை பயன்படுத்தி மேல்நிலை மற்றும் உயர்நிலைக்கல்வி முடித்த மாணவர்களின் சான்றிதழ்களை பதிவு செய்து கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த சேவை அறிமுகப்படுத்தப்பட்ட நாளிலிருந்து துறையின் இணையதளம் வாயிலாக ***1,04,25,611*** மாணவர்கள் பதிவு செய்து பயனடைந்துள்ளனர்.

**வேலைவாய்ப்பு அலுவலகங்களின் உயிர் பதிவேடு விவரங்கள்**
***(31.07.2021 நிலவரப்படி)***



**வயது வாரியான உயிர் பதிவேடு**




### *3.4.* சிறப்பு புதுப்பித்தல் சலுகை

*2017* முதல் *2019* வரை, வேலைவாய்ப்பு பதிவினை புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு *27.08.2021* வரை அரசால் சிறப்பு புதுப்பித்தல் சலுகை, அரசாணை (டி) எண். *204*, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள். *28.05.2021* வாயிலாக வழங்கப்பட்டது. இப்புதுப்பித்தல் சலுகை வாயிலாக இதுவரை ***4,52,226*** பதிவுதாரர்கள் பயனடைந்ததோடு

அவர்களின் வேலைவாய்ப்பு பதிவின் பழைய பதிவு மூப்பினை மீண்டும் பெற்றுள்ளனர்.

### 3.5. "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் பெறப்பட்ட மனுக்கள் மீதான நடவடிக்கை

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் 72,622 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. அலுவலர்களால் அனைத்து மனுதாரர்களும் தொடர்பு கொள்ளப்பட்டதில், போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகளுக்காக விருப்பம் தெரிவித்த 11,449 மனுதாரர்கள் இணையவழி பயிற்சி வகுப்புகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மெய்நிகர் கற்றல் இணையதளத்தில் சேர விரும்பிய 3,066 மனுதாரர்களின் தரவுகள் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தனியார் துறையில் வேலைவாய்ப்பு கோரிய 2,254 மனுதாரர்களில் 323 நபர்கள் தனியார் துறையில்

பணியமர்த்தப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் 322 மனுதாரர்களுக்கு வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. திறன் பயிற்சிக்கு 376 மனுதாரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அரசு வேலை பெற விருப்பம் தெரிவித்த எஞ்சிய மனுதாரர்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தால் உரிய தொழில்நெறி வழிகாட்டுதல் வழங்கப்பட்டு, இணைய வழி பயிற்சி வகுப்புகளிலோ அல்லது மெய்நிகர் கற்றல் இணையதளத்திலோ பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

### 3.6. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களின் தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்கும் செயல்பாடுகள்

தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்கும் செயல்பாடுகள் அலுவலகத்திற்கு வெளியே உள்ளவர்களுக்கும்


சென்றடையும் வகையில் கல்வி நிறுவனங்களிலும் நடத்தப்படுகின்றன. அலுவலக வளாகத்தில் பதிவுகள் மேற்கொள்ளும் போது குழு வழிகாட்டுதல், தனிநபர் வழிகாட்டுதலுடன் ஆலோசனைகள் மற்றும் தமிழ்நாடு திறன்மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து நலிவடைந்த பிரிவினருக்கு திறன் பயிற்சிக்கான சிறப்பு ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கு தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவதற்கு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## 3.7. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டங்கள்

பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் இளைஞர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு இலவச பயிற்சி

வகுப்புகளை நடத்துவதற்காக அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. போட்டித்தேர்வு ஆர்வலர்களுக்காக போட்டித்தேர்வுகளுக்கு தேவையான புத்தகங்கள், தினசரிகள், பாடக்குறிப்புகள் மற்றும் முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய நூலகங்கள் செயல்படுகின்றன. போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் இளைஞர்களுக்கு மாதிரி தேர்வுகள் மற்றும் நேர்காணல்கள் தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன. இத்தன்னார்வ பயிலும் வட்டங்களின் செலவினங்களுக்காக அரசால் ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**பயனாளிகள் *(2020-2021)***




## 3.8. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இலவச பயிற்சி வகுப்புகள்

பத்து பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் பொருளாதாரத்தில் நலிவுற்ற இறுதியாண்டு மாணவர்கள் பொதுத்துறையில் வேலை பெற உதவும் வகையில் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்காக அரசால் ஆண்டுதோறும் **ரூ.50.00 லட்சம்** ஒதுக்கீடு

செய்யப்படுகிறது. *2020-2021* ஆம் ஆண்டில் ***43*** பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதில் ***3,046*** மாணவர்கள் கலந்துகொண்டனர். அதில் ***31*** நபர்கள் பொதுத்துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

### *3.9.* மெய்நிகர்கற்றல் இணையதளம் *(www.tamilnaducareerservices.tn.gov.in)*

மெய்நிகர் கற்றல் இணையதளமானது, பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கான மின்-பாடக் குறிப்புகளை வழங்குகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், மத்திய பணியாளர் தேர்வாணையம் மற்றும் வங்கி பணியாளர் தேர்வு நிறுவனம் போன்ற தேர்வு முகமைகளின் முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான பாடக்குறிப்புகள் இவ்விணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு மெய்நிகர் கற்றலுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மின் பாடக்குறிப்புகளை

போட்டித்தேர்வு ஆர்வலர்கள் சிரமமின்றி பதிவிறக்கம் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. வங்கித் தேர்வுகளுக்கான ஒலி, ஒளி பாடக்குறிப்புகள் இவ்விணையதளத்தில் வழங்கப்பட்டுள்ளன. தேவைக்கு உகந்தவாறு, தமிழ் வழியிலான பாடக்குறிப்புகளும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. நடப்பு நிகழ்வுகள் உரியகால இடைவெளியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. எதிர்வரும் தேர்வுகள் பற்றிய கால அட்டவணை விவரங்கள், தேர்வுகளுக்கான பாடத்திட்டம், பொதுத்துறை நிறுவனங்களால் அறிவிப்பு செய்யப்படும் பல்வேறு காலிப்பணியிடங்கள் உள்ளிட்ட விவரங்கள் தேர்வர்கள் பயன்பெறும் வகையில் இவ்விணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இவ்விணையதளத்தில் ***1,28,451*** தேர்வர்கள் பதிவு செய்துள்ளனர்.

### *3.10.* தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரம்

ஒவ்வொரு ஆண்டும் ஜுலை *2*-வது வாரம் தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரமாக அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து கொண்டாடப்பட்டு வருகின்றது. பல்வேறு தொழில்நெறி மற்றும் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தொழில்நெறி ஆலோசனைகள், தொழில்நெறி கருத்தரங்குகள், போன்றவை இணைய வழியாக நடத்தப்படுகின்றன. மாணவர்களுக்கு விழிப்புணர்வையும் உற்சாகத்தையும் அளிக்கும் வகையில் பல்வேறு திறன் போட்டிகள் மற்றும் வினாடி வினா நிகழ்ச்சிகளும் இணைய வழியாக நடத்தப்படுகின்றன.

## *3.11.* திறன் தமிழகம் இதழ்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் செயல்பாடுகளை உள்ளடக்கிய 'திறன் தமிழகம்' எனும் காலாண்டு இதழினை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து இத்துறை வெளியிட்டு வருகிறது. இளைஞர்களின் எதிர்கால வாழ்க்கைத் தொழில் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தொழில்நெறி வழிகாட்டும் புத்தகங்கள், பின் வரும் தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ளன.

- *10*-ஆம் வகுப்புக்கு பிறகு?
- *12*-ஆம் வகுப்புக்கு பிறகு?
- ஐ.டி.ஐ - க்கு பிறகு?
- பட்டய படிப்பிற்கு பிறகு?
- முதல்தர உயர்கல்வி நிறுவனங்கள் வழங்கும் முதுநிலை பட்டப் படிப்புகள் மற்றும் முதுநிலை பட்டய படிப்புகள் - ஒரு பார்வை!

இக்கையேடுகள் துறையின் www.tnvelaivaaippu.gov.in இணையதளத்தில் மின்-புத்தகங்களாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 3.12. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள்

சென்னையில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்கி வருகிறது. **32** மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள், மாற்றுத் திறனாளிகளுக்கான தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இயங்கிவருகின்றன. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் வாயிலாக விழிப்புலன் மற்றும் செவிப்புலன் இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கு எழுதுபவர் மற்றும் சைகை மொழிபெயர்ப்பாளர்கள் கொண்டு சிறப்பு பயிற்சி வகுப்புகள், சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் தொழில்நெறி கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன.

### 3.13. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வேலைநாடுநர்களுக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வேலைநாடுநர்களுக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள், கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வேலைநாடுநர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்குத் தேவையான தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்குதல், தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள், சுய வேலைவாய்ப்புக்கு ஊக்குவித்தல், போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு வேலை பெறும் திறனை அதிகரிக்கும் வகையில் பயிற்சி அளித்தல் போன்ற சேவைகளை அளித்து வருகின்றன.

இம்மையங்களின் செயல்பாட்டிற்காக அரசால் ஆண்டொன்றுக்கு **ரூ.*20.46* இலட்சம்** ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### ***3.14.*** **பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்**

உதகமண்டலத்தில் செயல்பட்டு வரும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையமானது, தொலைதூர இடங்களில் வசிக்கும் பழங்குடியினரிடையே பல்வேறு தொழில் வாய்ப்புகள், உயர்கல்வி வாய்ப்புகள், போட்டித்தேர்வுகள் மற்றும் சுய வேலைவாய்ப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இயங்கி வருகிறது. மேலும், இம்மையமானது தொலைதூர மலைப்பகுதிகளில் வேலைவாய்ப்பு அலுவலக பதிவுகளை அந்தந்த பகுதிகளிலேயே மேற்கொள்கின்றது.

### *3.15.* மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம்

மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையமானது தொழில் நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் வழங்குவதற்காக சென்னையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இம்மையத்தின் முக்கிய நோக்கங்கள், உளவியல் சோதனைக்கருவிகளை உருவாக்குதல், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி-*1*, தொகுதி-*2* மற்றும் இதர முதல் நிலைப் பணிகளுக்கான தேர்வுகளுக்கு பயிற்சி வகுப்புகள் மற்றும் மாதிரி தேர்வுகள் நடத்துதல், உரிய கால இடைவெளியில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல், திறன் மதிப்பீடு மற்றும் பணிகளில் பொருத்துதல் போன்றவை ஆகும்.

### *3.16.* வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகைத் திட்டம்

வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் பதிவு செய்து, உயிர்ப்

பதிவேட்டில் 5 ஆண்டுகளாக காத்திருக்கும் வேலைநாடுநர்கள் வேலைவாய்ப்பு பெற உதவும் வகையில், வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை திட்டமானது 2006-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இவ்வுதவித்தொகையானது, வயது வரம்பு மற்றும் வருமானம் போன்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அரசால் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற ஆண்டு வருமானம் ரூ.72,000/-க்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். அதிகபட்ச வயது வரம்பு 40 ஆகவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பிரிவினராக இருப்பின் வயது வரம்பு 45 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு ரூ.200/-, 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.300/-, மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.400/-, பட்டப்படிப்பு மற்றும் அதற்கு மேல் கல்வித்தகுதி

உடையவர்களுக்கு ரூ.600/- என்ற வீதத்தில் மாதந்தோறும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

### ***3.17.*** மாற்றுத் திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டம்

வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகையானது மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்களுக்கும் வழங்கப்படுகிறது. இவ்வுதவித்தொகையானது வேலைவாய்ப்பக உயிர்ப்பதிவேட்டில் குறைந்தபட்சம் ஓராண்டிற்கு மேல் காத்திருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. இவ்வுதவித் தொகையானது வயது வரம்பு மற்றும் பெற்றோர் வருமானம் போன்ற நிபந்தனைகள் ஏதுமின்றி வழங்கப்படுகிறது. இவ்வுதவித் தொகையானது 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் முதல் 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் வரை ரூ.600/-, மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.750/-, பட்டப்படிப்பு தேர்ச்சி மற்றும் அதற்கு மேல் கல்வித்தகுதி உடையவர்களுக்கு ரூ.1000/- என்ற வீதத்தில் மாதந்தோறும் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கும் வழங்கப்படுகிறது.

**2020-2021- ஆம் நிதியாண்டில் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளிகள்**

| வ. எண் | பிரிவினர் | செலவிடப்பட்ட தொகை (ரூ.கோடி) | பயனாளிகள் |
|---|---|---|---|
| 1 | பொது - பதிவுதாரர்கள் | 24.74 | 42,584 |
| 2 | மாற்றுத்திறனாளி - பதிவுதாரர்கள் | 15.56 | 16,352 |
| **மொத்தம்** | | **40.30** | **58,936** |

### *3.18.* மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்

ஒன்றிய அரசு, மிஷன் மோடு திட்டத்தின் *(Mission Mode Project)* கீழ் 'மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்' அமைப்பதற்கு நிதி உதவி வழங்கியுள்ளது. வேலைநாடுநர்கள் மற்றும் மாணவர்களுக்கு உளவியல் பகுப்பாய்வு சோதனைகள் செய்து அதன்மூலம் தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் பல்வேறு தொழில் வாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு உண்டாக்குதல் ஆகியவை இம்மையங்களின் நோக்கமாகும். இம்மையங்கள் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன், தொழில்நெறி ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் பயிற்சிகளின் வாயிலாக, வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் செயல்படுகின்றன. முதல் மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையம் வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திலும் அதனைத் தொடர்ந்து கோயம்புத்தூரிலும் அமைக்கப்பட்டன.

*2020-2021* ஆம் ஆண்டில் சேலம், திருவள்ளூர், உதகமண்டலம், விழுப்புரம், இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் மதுரை ஆகிய ஏழு இடங்களில் கூடுதலாக மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் அமைக்க ஒன்றிய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு **ரூ.*3.44* கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ***3.19.*** **தனியார் துறை பணியமர்த்தல்**

தனியார் துறையில் அதிக அளவில் வேலைநாடுநர்களை பணியமர்த்தம் செய்யும் பொருட்டு, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களானது சிறிய மற்றும் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களை உரிய கால இடைவெளியில் ஏற்பாடு செய்து வேலையளிப்பவர்கள், திறன் பயிற்சி வழங்குபவர்கள் மற்றும் வேலைநாடுநர்கள் நேரடியாக சந்தித்து தங்கள் தேவைகளை நிறைவு செய்து

கொள்ள உதவுகிறது. சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகங்களில் ஒவ்வொரு வெள்ளி கிழமைகளிலும் நடத்தப்படுகிறது.

இத்துடன் ஒவ்வொரு காலாண்டு தோறும் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வேலையளிப்பவர் தகுதியான மனித வளத்தை தேர்வு செய்யவும், வேலைநாடுநர்கள் அதிக அளவிலான வாய்ப்புகளை பெறுவதற்கும் வழிவகை செய்யப்படுகின்றன. இம்முகாம்களை நடத்துவதற்கென, அரசு ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கும் ஒரு காலாண்டிற்கு **ரூ.*1.00* இலட்சம்** வீதம் ஆண்டொன்றுக்கு **ரூ.*1.32* கோடி** நிதி ஒதுக்கீடு செய்கிறது.

## *2020-2021* நிதியாண்டு பயனாளிகள்

| | |
|---|---|
| நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்கள் | 383 |
| கலந்து கொண்ட வேலையளிக்கும் நிறுவனங்கள் | 4,611 |
| கலந்து கொண்ட வேலைநாடுவோர் | 1,61,355 |
| பணி நியமனம் பெற்றவர்கள் | 39,593 |

வேலைக்குத் தேர்வு செய்யப்படாத வேலைநாடுநர்கள் தங்களது திறனை மதிப்பீடு செய்துகொள்ளவும், திறன் பயிற்சி மற்றும் இதர பயிற்சிகள் வாயிலாக தங்களது வேலை பெறும் திறனை வளர்த்துக்கொள்ளவும், இத்தகைய வேலைவாய்ப்பு முகாம்கள் அனைத்து வகைகளிலும் உதவி புரிகின்றன.

## *3.20.* தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம் *(www.tnprivatejobs.tn.gov.in)*

தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையமானது, வேலையளிப்பவர் மற்றும் வேலைநாடுநர்களை இணைய வழியாக இணைப்பதற்கான ஒரு தளத்தினை உருவாக்குகின்றது. சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரு நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் இதில் பதிவு செய்து தங்களது தேவைக்கு ஏற்ப மனிதவளத்தை தேர்வு செய்யவும், அதேபோன்று வேலைநாடுநர்கள் ஊதியம், வேலைசெய்யும் இடம், தகுதி ஆகிய எதிர்பார்ப்புகளுக்கு உட்பட்டு வேலையளிப்பவரை தேர்வு செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

புள்ளி விவரங்கள் (ஆகஸ்டு 2021 வரை)




மேலும் இவ்விணையம், திறன் இடைவெளி, திறன் தேவைகள், மனித வளத்தேவையை பூர்த்தி செய்தல் மற்றும் பற்றாக்குறை வேலைவாய்ப்புகள் ஆகியவை பற்றி ஆய்வுகள் செய்ய உதவுகின்றன. இவ்விணையம் துறை வாரியான காலிப்பணியிடங்கள், தொழில் வாரியான, ஊதியம் வாரியான பணியிடங்கள் ஆகிய தரவுகள் வாயிலாக தொழிலாளர் சந்தை நிலவரத்தை தெரிந்துகொள்ள உதவுகின்றன.

### *3.21.* 'ஒரு நாள் - ஒரு செயல்பாடு'

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயனடையும் வகையில் சிறப்பு முயற்சியாக வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் கீழ்காணும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| நாளுக்கான செயல்முறை கருத்து | செயல்பாடுகள் | பயனாளிகள் (ஏப்ரல் *2020* முதல் ஜூலை *2021* வரை) |
|---|---|---|
| திறன்மிகு திங்கள் | திறன் முகாம், திறன் மதிப்பீடு மற்றும் திறன் பயிற்சிக்கான பதிவு | திறன் பயிற்சிக்காக *40,362* நபர்கள் பதிவு செய்துள்ளனர் |
| சேவை செவ்வாய் | தொழில்நெறி வழிகாட்டுதல், தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள், தொழில்நெறி கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் | வேலைவாய்ப்பு அலுவலர்களால் *1,367* தொழில்நெறி உரைகள் நிகழ்த்தப்பட்டதில் *1,00,535* நபர்கள் பயனடைந்துள்ளனர் |
| போட்டித் தேர்வு புதன் | போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள், மாதிரி தேர்வுகள் மற்றும் நேர்காணல்கள் நடத்துதல் | *3,051* விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதில் *1,07,092* நபர்கள் பயனடைந்துள்ளனர். |

| நாளுக்கான செயல்முறை கருத்து | செயல்பாடுகள் | பயனாளிகள் (ஏப்ரல் 2020 முதல் ஜூலை 2021 வரை) |
|---|---|---|
| விழிப்புணர்வு வியாழன் | குழு கலந்துரையாடல், தனிநபர் வழிகாட்டல், தொழில்நெறி வழிகாட்டும் கையேடுகள், உளவியல் ஆய்வு | 24,889 வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பதிவின்போது வழிகாட்டல் வழங்கப்பட்டது |
| வேலைவாய்ப்பு வெள்ளி | பதிவுதாரர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல் மற்றும் வேலையளிப்பவரை தொடர்பு கொள்ளுதல் | தனியார் துறையில் 39,944 வேலைநாடுநர்கள் பணிநியமனம் பெற்றுள்ளனர். |

## 3.22. நீடித்த வளர்ச்சி இலக்கு

நீடித்த வளர்ச்சி இலக்கின்படி ஆக்கப்பூர்வமான வேலைவாய்ப்பு அனைவருக்கும் உறுதி செய்யப்பட வேண்டும். இத்துறையின் பல்வேறு செயல்பாடுகளான கல்வி நிறுவனங்களில் தொழில்நெறி வழிகாட்டல் நிகழ்ச்சிகள், தனியார் துறையில் பணியமர்த்தம் செய்தல், பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல், சுய வேலைவாய்ப்பிற்காக ஊக்குவித்தல்

ஆகிய சேவைகள் விளைவாக மாநிலத்தில் வேலையின்மை குறைக்கப்பட்டுள்ளது.

இத்துறையின் மேற்கூறிய திட்டங்களானது மாநிலத்தில் உள்ள இளைஞர்கள் வேலைபெறும் திறனை அடையவும், அனைத்து இயன்ற வழிகளிலும் சுய சார்பு உடையவர்களாக மாற்றவும் பங்காற்றியுள்ளது. இந்நிகழ்வுகளோடு தொழில்நெறி வழிகாட்டல் நிகழ்ச்சிகள், மெய்நிகர் கற்றல், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்துதல், தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் போன்ற பல்வேறு செயல்பாடுகளின் மூலமாக வேலையின்மையை குறைக்கவும், பொது மற்றும் தனியார் துறைகளில் மாநிலத்தில் உள்ள வேலைநாடுநர்கள் பெருமளவு வேலைவாய்ப்புகளை பெறுவதற்கும் ஒருங்கிணைந்த, முழுமையான நடவடிக்கைகளை துறை மேற்கொண்டு வருகிறது.

## பயிற்சி பிரிவு

உலகமயமாக்கலின் வேகமான வளர்ச்சியும், தொழில்நுட்ப மாற்றங்களும் பொருளாதார விரிவாக்கம் மற்றும் பணி உருவாக்கம் ஆகியவற்றிற்கான வாய்ப்புகளை வளர்ப்பதோடு சவால்களையும் ஏற்படுத்துகிறது. ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு, திறன் மற்றும் அறிவு ஆகியவை உந்து சக்திகளாக விளங்குகின்றன. திறன் மேம்பாடு மக்களை பலப்படுத்தும் ஒரு முக்கிய கருவியாக விளங்குவதுடன் வேலைவாய்ப்பின்மையையும், ஏழ்மையையும் குறைக்கிறது. திறன் பெற்ற மனிதவளம் அதிகமாக இருக்கும் போது பொருளாதாரம் அதிக உற்பத்திகரமாகவும், புத்தாக்கத்துடனும், போட்டியானதாகவும் விளங்கும்.

பொதுமக்களின் திறன் மற்றும் அறிவினை பெருக்குவதில் கவனம் செலுத்துவதன் மூலம்

பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டினை பன்மடங்கு முடுக்கிவிடலாம். தமிழ்நாடு, மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளுக்கும் ஏனைய உலக நாடுகளுக்கும் தேவையான திறன் பெற்ற மனிதவளத்தினை வழங்கக்கூடிய சிறந்த வாய்ப்பினைப்பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் பயிற்சிப்பிரிவு மாநிலத்தில் உள்ள இளைஞர்களுக்கு நீண்ட கால திறன் பயிற்சியினை வழங்குகிறது. மாநிலத்தில் திறன் மேம்பாட்டினை முடுக்கிவிட தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள இடங்களில் தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்கிடவும், ஏற்கனவே இயங்கி வரும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழிற்சாலைகளின் தேவைக்கு ஏற்ப புதிய தொழிற்படிப்புகளை துவக்கிடவும் வழிவகை செய்யப்படும். மேலும், தொழிற்சாலைகளின் தொழில்நுட்ப வளர்ச்சி வேகத்துக்கு ஏற்ற வகையிலும் தொழிற்பயிற்சி

நிலைய மாணவர்களை அதிக அளவில் வேலைவாய்ப்பு பெறத்தக்கவர்களாக உருவாக்கிடவும் அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் எதிர்கால வேலைவாய்ப்புக்கு ஏற்ற திறன் பயிற்சி *(Futuristic Employable Skill Training (FEST))* கூடுதலாக வழங்கப்பட உள்ளது.

கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் துறையின் மூலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் இணையதளம் வழியாக தொடர்ந்து வகுப்புகள் நடத்தப்பட்டு வந்தன. ஜூலை 2021-ம் மாதத்திலிருந்து நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்றி தொழிற்பயிற்சி நிலையங்களில் அனைத்து வகுப்புகளும் துவங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## 3.23. நிர்வாக அமைப்பு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் இயக்குநர், துறைத்தலைவர் ஆவார். மாநில தலைமையகத்தில் மூன்று கூடுதல் இயக்குநர்களும் ஒரு இணை இயக்குநரும் இயக்குநரின் பணிகளை செயல்படுத்துவதில் உதவி புரிகின்றனர்.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய ஏழு மண்டலங்களில் உள்ள மண்டல இணை இயக்குநர்கள் தங்களது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சி, தொழிற்பழகுநர் பயிற்சி, தொழிற்பள்ளிகள் மற்றும் பல்வேறு திறன் வளர்ச்சி திட்டங்களை கண்காணிக்கின்றனர். மாநிலத்தில் உள்ள 90 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள், உதவி இயக்குநர் / துணை இயக்குநர் நிலையிலான முதல்வர் தலைமையில் இயங்கி வருகின்றன.

மேலும், பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டங்கள் செயல்படுத்துதல் மற்றும் தொழிற்பழகுநர் பயிற்சி நடைமுறைப்படுத்துதல் ஆகியவை *30* மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### *3.24.* முக்கிய திறன் மேம்பாட்டு திட்டங்கள்

1. **கைவினைஞர் பயிற்சித் திட்டம்** *(Craftsman Training Scheme)*
2. **பொது மற்றும் தனியார் கூட்டமைப்புத் திட்டத்தின்** *(Public Private Partnership)* **கீழ் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல்**
3. **தொழில் மதிப்பு விரிவாக்கத்திற்கான திறன் வலுப்படுத்தும் திட்டம்** *(Skill Strengthening for Industrial Value Enhancement)*
4. **மாதிரி தொழிற்பயிற்சி நிலையம்** *(Model ITI)*
5. **தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம்** *(Apprenticeship Training Scheme)*

6. தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்பு திட்டம் *(National Apprenticeship Promotion Scheme)*

7. தொழிற்பள்ளிகள் *(Industrial Schools)*

### *3.25.* கைவினைஞர் பயிற்சித் திட்டம் *(CTS)*

தொழிற்பயிற்சி நிலையங்கள் பல்வேறு தொழிற்பிரிவுகளில் நீண்டகால திறன் பயிற்சியினை வழங்குவதன் மூலம் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், தொழில் நுட்பத்திற்கும் ஏற்றவாறு திறன் பெற்ற தொழிலாளர்களை உருவாக்குகிறது. தேசிய திறன் தகுதி கட்டமைப்பிற்குட்பட்ட தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் 70 சதவீதம் செயல்முறைபயிற்சிக்கும் மீதமுள்ள நேரத்தில் தொழிற்பிரிவு தொடர்பான கருத்தியல், பணிமனை கணக்கு மற்றும் அறிவியல், பொறியியல் வரைபடம், மற்றும் வேலைவாய்ப்புத் திறன்கள் ஆகியவை கற்பிக்கப்படுகிறது.

### 3.25.1. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள்

மாநிலத்தில் திறன்மிக்க தொழிலாளர்களின் தேவை மற்றும் வழங்கலுக்கு இடையேயான இடைவெளியை குறைக்கும் வண்ணம் 90 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் செயல்படுகின்றன. இந்த வருடம் 35,417 மாணவர்கள் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 61 பொறியியல் மற்றும் 28 பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி காலம் தொழிற்பிரிவுக்கேற்ப ஆறு மாதல் முதல் இரண்டு வருடம் வரையிலும் நடத்தப்படுகிறது. 14 முதல் 40 வயது வரையிலும் உள்ள மாணவர்கள் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் / மகளிர் பிரிவுகளில் சேர்த்துக்கொள்ளப்படும் பெண்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு இல்லை. ஒவ்வொரு வருடமும் ஜூலை / ஆகஸ்ட் மாதத்தில் மதிப்பெண்

அடிப்படையிலும் நடைமுறையில் உள்ள இடஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையிலும் சேர்க்கை நடைபெறுகிறது. மாநில அளவில் இணைய வழி கலந்தாய்வு நடத்தி சேர்க்கை நடைபெறுகிறது. விண்ணப்பதாரர்கள் தாங்கள் திறன்பயிற்சி பெற விரும்பும் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவினை தேர்வு செய்கிறார்கள்.

### *3.25.2.* பாதிக்கப்படும் பிரிவினரை ஊக்குவித்தல்

நீடித்த வளர்ச்சி இலக்கு *4.5* -ல் குறிப்பிட்டப்படி பாதிக்கப்படும் பிரிவினரான பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் வேலைவாய்ப்பை பெருக்கிடவும் அவர்களின் சமூக பொருளாதார நிலைகள் மேம்படவும் அவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்படுகிறது. இது கல்வியில் பாலின பாகுபாட்டை நீக்குவதோடு மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதிக்கப்படும் சூழ்நிலையில் உள்ள

குழந்தைகள் ஆகியோருக்கு கல்வி மற்றும் தொழிற்பயிற்சியின் அனைத்து நிலைகளிலும் சமவாய்ப்பு கிடைப்பதை உறுதி செய்கிறது.

**பட்டியல் இனத்தவர்களுக்கான அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள்**

மாநிலத்தில் பின்வரும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பட்டியல் இன மாணவர்களுக்கென பிரத்யேகமாக பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. *2020-21*-ம் ஆண்டில் *441* மாணவர்கள் இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| *1.* | கடலூர் | சிதம்பரம் | *256* |
| *2.* | திருவள்ளூர் | வடகரை | *185* |
| | | **மொத்தம்** | ***441*** |

**பழங்குடி இனத்தவர்களுக்கான அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள்**

மாநிலத்தில் பின்வரும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பழங்குடி இன மாணவர்களுக்கென பிரத்யேகமாக பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. 2020-21-ம் ஆண்டில் 1,260 மாணவர்கள் இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி | சங்கராபுரம் | 233 |
| 2. | கோயமுத்தூர் | ஆனைகட்டி | 187 |
| 3. | சேலம் | கருமந்துறை | 216 |
| 4. | திருவண்ணாமலை | ஜமுனாமரத்தூர் | 216 |
| 5. | நாமக்கல் | கொல்லிமலை | 207 |
| 6. | நீலகிரி | கூடலூர் | 201 |
| | | **மொத்தம்** | **1,260** |

### *3.25.3.* மகளிருக்கான அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள்

நீடித்த வளர்ச்சி இலக்கு 5ல் குறிப்பிட்டபடி அனைத்து பெண்கள் மற்றும் மாணவிகளை ஊக்கப்படுத்தும் நோக்கத்தில் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் வகையிலும், பாலின சமத்துவத்தை அடைந்திடும் வகையிலும் அவர்களுக்கு தொழிற்பயிற்சி அளிப்பதில் மாநில அரசு அதிக முன்னுரிமை வழங்குகிறது. கீழ்க்கண்ட தொழிற்பயிற்சிநிலையங்களில் மகளிருக்காக மட்டும் பிரத்யேகமாக தொழிற்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. *2020-21*-ம் ஆண்டில் *2,790* பெண்கள் இத்தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| *1.* | சென்னை | கிண்டி | *207* |
| *2.* | சென்னை | அம்பத்தூர் | *125* |
| *3.* | தேனி | ஆண்டிப்பட்டி | *202* |

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| *4.* | திண்டுக்கல் | திண்டுக்கல் | *288* |
| *5.* | மதுரை | மதுரை | *238* |
| *6.* | கோயமுத்தூர் | கோயமுத்தூர் | *397* |
| *7.* | சேலம் | சேலம் | *347* |
| *8.* | கன்னியாகுமரி | நாகர்கோவில் | *250* |
| *9.* | கடலூர் | கடலூர் | *399* |
| *10.* | திருச்சிராப்பள்ளி | புள்ளம்பாடி | *234* |
| **மகளிர் பிரிவுகள்** | | | |
| *11.* | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | *24* |
| *12.* | ராமநாதபுரம் | ராமநாதபுரம் | *60* |
| *13.* | கிருஷ்ணகிரி | ஓசூர் | *19* |
| | | **மொத்தம்** | ***2,790*** |

இவை மட்டுமின்றி மற்ற அனைத்து அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் *30* சதவீத இருக்கைகள் மகளிருக்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

### *3.25.4.* சிறைவாசிகளுக்கான அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்

திருச்சிராப்பள்ளி மத்திய சிறைச்சாலையில் சிறைவாசிகளுக்கு பிரத்யேகமாக ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. *2020-21*-ம் ஆண்டில் *85* பேர் திறன் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### *3.25.5.* மாற்றுத் திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு

அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் அனுமதிக்கப்பட்ட மொத்த இருக்கைகளில் *5* சதவீதம் இருக்கைகள் மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கிண்டி, உளுந்தூர்பேட்டை மற்றும் நாகர்கோவில் ஆகிய மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் காதுகேளாத மற்றும் வாய்பேச இயலாத இளைஞர்களுக்கு பிரத்யேகமாக பொருத்துநர் தொழிற்பிரிவில் திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 3.26. மாணவர்களுக்கான நலத் திட்டங்கள்

1. மாணவர்களுக்கு கட்டணமில்லா திறன் பயிற்சி
2. பேருந்து பயணச்சலுகை
3. வருடத்திற்கு இரண்டு இணை சீருடைகள் மற்றும் ஒரு இணை காலணி
4. மிதிவண்டி (பள்ளிகளில் பெறாதவர்களுக்கு மட்டும்)
5. அனைத்து மாணவர்களுக்கும் மாதாந்திர உதவித்தொகை ரூ.750/-
6. மடிக்கணினி (பள்ளிகளில் பெறாதவர்களுக்கு மட்டும்)
7. பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபடக்கருவிகள்
8. பயிற்சிக்கு தேவையான மூலப்பொருட்கள்.
9. பதினொன்று சுய வேலைவாய்ப்புள்ள தொழிற் பிரிவுகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கருவித் தொகுப்பு வழங்குதல்.

## *3.27.* அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள்

தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் அதிக எண்ணிக்கையிலான திறன்பெற்ற மனித வளத்தை உருவாக்குவதில் மாநில அரசின் முயற்சிகளுடன் தொழிற்சாலைகள் உள்ளிட்ட தனியார் பங்களிப்பினையும் மாநில அரசு ஊக்குவிக்கிறது. தற்போது, தமிழ்நாட்டில் *489* தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் *79,626* ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளுடன் செயல்படுகின்றன. இத்தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தேசிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி குழுமத்தால் *(NCVET)* அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பிரிவுகளில் மட்டுமே பயிற்சி வழங்குகின்றன. இத்தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்குவதை மாவட்ட அளவில் மாவட்ட திறன் பயிற்சி அலுவலர்களும், மண்டல அளவில் மண்டல இணை இயக்குநர்களும்

கண்காணிக்கிறார்கள். 2020-21-ம் ஆண்டில் 24,387 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### 3.28. பயிற்சிக்கட்டணத்தை திரும்ப வழங்குதல்

இத்திட்டத்தின் கீழ் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 50 சதவீத இருக்கைகளை ஒப்புவிப்பு செய்கின்றன. இந்த இடங்கள் அரசு ஒதுக்கீட்டின் மூலம் இணையவழி கலந்தாய்வில் நிரப்பப்படுகின்றன. இவ்வாறு அரசு இட ஒதுக்கீட்டின் மூலம் பயிற்சியில் சேருவோரின் பயிற்சிக் கட்டணத்தை அவர்களின் சார்பாக அரசே தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு திரும்ப வழங்குகிறது.

இத்திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் செயல்படும் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஒரு பயிற்சியாளருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.10,000/- எனவும், நகர்புறங்களில் செயல்படும் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஒரு பயிற்சியாளருக்கு ஆண்டு

ஒன்றுக்கு ரூ.12,000/- எனவும் பயிற்சிக்கட்டணம் திரும்ப வழங்கப்படுகிறது.

நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தின் அடிப்படையில், 75 சதவீதம் திரும்ப வழங்கப்படும் தொகை முதலில் நிலையங்களுக்கு விடுவிக்கப்படும். மீதமுள்ள 25 சதவீத தொகை, தேர்ச்சி பெறுபவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விடுவிக்கப்படும். அரசினால் விடுவிக்கப்படும் தொகை நேரடியாக தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகின்றது.

இக்கட்டணம் மாணவர் சேர்க்கை மற்றும் ஊக்குவித்தல், பயிற்றுநர்களுக்கான ஊதியம், பயிற்றுநர்களின் பயிற்சி, பயிற்சிக்காக பணிமனையை தயார் செய்தல், பயிற்சிக்கான இயந்திரங்கள், கருவிகள், நுகர்பொருட்கள், தேவைப்படின் மாணவர்களுக்கு உணவு மற்றும் உறைவிட வசதி,

தேர்வு மற்றும் சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட முழுமையான பயிற்சித் திட்டத்திற்காக வழங்கப்படுகிறது.

### *3.29.* தொழிற் தேர்வு மற்றும் சான்றிதழ் வழங்குதல்

தேசிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி குழுமத்தால் *(NCVET)* அங்கீகரிக்கப்பட்ட அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி நிறைவின் போது அகில இந்திய அளவில் நாடு முழுவதும் பொதுவான தேர்வு அட்டவணையில் பொதுவான வினாத்தாட்களுடன் தொழிற்தேர்வு நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு முதல் அகில இந்திய தொழிற்தேர்வு இணைய வழியில் நடத்தப்படுகிறது. *2020-21*-ம் ஆண்டில் தேசிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி குழுமத்தின் *(NCVET)* கீழ் தேர்வு எழுதிய *31,208* மாணவர்களில் *25,334* மாணவர்கள் அகில இந்திய தொழிற்தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர். மாநில தொழிற்பயிற்சி

குழுமத்தின் கீழ் ***(SCVT)*** *1,010* மாணவர்களுக்கு தொழிற்தேர்வு நடத்தப்பட்டு *990* மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மேலும், ஒவ்வொரு வருடமும் தொழிற்பழகுநர் திட்டத்தில் பயிற்சி பெறும் தொழிற்பழகுநர்களுக்கு தேர்வு நடத்தி தேர்ச்சி பெற்றோருக்கு தேசிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சி குழுமத்தின் *(NCVET)* தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் *(National Apprenticeship Certificate)*; தொழிற் பள்ளிகளுக்கு பொதுத்தேர்வு நடத்தி தேர்ச்சி பெற்றோருக்கு மாநில தொழிற்பயிற்சி குழுமத்தின் ***(SCVT)*** மூலம் சான்றிதழ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி வழங்குநர்களால் நடத்தப்படும் குறுகிய கால பயிற்சிகளுக்கும் தேர்வு நடத்தி மாநில தொழிற்பயிற்சி குழுமத்தின் ***(SCVT)*** மூலம் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

## 3.30. பொது மற்றும் தனியார் கூட்டமைப்பின் *(Public Private Partnership)* வழியாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை தரம் உயர்த்துதல்

தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் இடையே உள்ள தொடர்பினை அதிகப்படுத்திடவும், திறன் மேம்பாட்டு செயல்பாடுகளில் தனியார் பங்களிப்பினை ஊக்கப்படுத்திடவும், 2007-ம் ஆண்டு இத்திட்டம் ஒன்றிய அரசால் துவங்கப்பட்டது. தமிழ்நாட்டில் 32 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் இத்திட்டத்தின் கீழ் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்திலும் உருவாக்கப்பட்ட, நிலைய மேலாண்மை குழு சங்கங்களின் பதிவு சட்டம், 1860-ன்படி சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அச்சங்கத்தின் மூலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை தரம் உயர்த்த 100 சதவீத நிதியாக ரூ.2.50 கோடி வட்டியில்லாக் கடனை ஒன்றிய அரசு

வழங்கியுள்ளது. இந்த 32 தொழிற்பயிற்சி நிலையங்களின் ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலைய மேலாண்மைக் குழுவிற்கும் ரூ.2.50 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த செலவினம் ரூ.80.00 கோடி ஆகும். (2007-08-12 ஐ.டி.ஐக்கள், 2008-09-5 ஐ.டி.ஐக்கள், 2009-2010-11 ஐ.டி.ஐக்கள், 2010-11-2 ஐ.டி.ஐக்கள் மற்றும் 2011-12-2 ஐ.டி.ஐக்கள் என ஆண்டு வாரியாக தொழிற்பயிற்சி நிலையங்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன.)

தரம் உயர்த்தப்படுதலில் ஏற்கனவே உள்ள தொழிற்பிரிவுகளுக்கும் புதிதாக துவக்கப்படும் தொழிற்பிரிவுகளுக்கும் கட்டடப்பணிகள் மேற்கொள்வது, கருவி மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்வது ஆகியவையும் அடங்கும். ஒன்றிய அரசு, மாநில அரசு மற்றும் தொழில் நிறுவன பங்குதாரர்களிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, அதில் பங்கு கொள்வதற்கான

விதிமுறைகள், நிபந்தனைகள், பங்கு பெறும் அனைவரின் பொறுப்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

நிலைய மேலாண்மை குழுவால் தயாரிக்கப்பட்ட நிலைய மேம்பாட்டு திட்டத்தின்படி *2,590* மாணவர்கள் பயிற்சி பெறும் வண்ணம் *57* புதிய தொழிற்பிரிவுகள் இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் செயல்படுகின்றன.

### *3.31.* தொழில் மதிப்பு விரிவாக்கத்திற்கான திறன்களை வலுப்படுத்துதல் *(STRIVE)*

தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலம் வழங்கப்படும் பயிற்சி மற்றும் தமிழ்நாட்டில் அமைந்துள்ள தொழில்நிறுவனங்களில் தொழிற்பழகுநர் பயிற்சி ஆகியவற்றில் தொழிற்சாலைகளின் தொடர்பு மற்றும் செயல்திறனை அதிகப்படுத்திட, ஒன்றிய அரசு, உலக வங்கி உதவியுடன் தொழில் மதிப்பு விரிவாக்கத்திற்கான திறன்களை வலுப்படுத்தும் புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டம் தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் தொழிற்பயிற்சி மற்றும் தொழிற்பழகுநர் பயிற்சியின் தரத்தினை அதிகப்படுத்துவதையும் அப்பயிற்சி தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப அமைந்திடுவதையும், நோக்கமாக எடுத்துக்கொண்டு கீழ்க்கண்ட கோட்பாடுகளுடன் செயல்படுத்தப்படுகிறது.

கோட்பாடு *1* : தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்பாட்டினை அதிகரித்தல்.

கோட்பாடு *2* : தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பழகுநர் பயிற்சிக்கென மாநில அரசின் கட்டமைப்புகளை பலப்படுத்துதல்

கோட்பாடு *3* : கற்றல் மற்றும் கற்பித்தலை மேம்படுத்துதல் (ஒன்றிய அரசால் செயல்படுத்தப்படுகிறது)

கோட்பாடு *4* : மேம்படுத்தப்பட்ட மற்றும் விரிவாக்கப்பட்ட தொழிற்பழகுநர் பயிற்சி

**கோட்பாடு : 1 தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்பாட்டினை அதிகரித்தல்**

இக்கோட்பாட்டில் அம்பத்தூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கடலூர், மதுரை, திண்டுக்கல், தூத்துக்குடி, விருதுநகர், நாமக்கல், சேலம், கோயம்புத்தூர் மற்றும் சிவகங்கை ஆகிய 13 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும் மூன்று தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் தோராய திட்ட மதிப்பீடு ரூ.29.01 கோடி செலவில் தரம் உயர்த்தப்பட உள்ளது.

இந்த நிதியானது தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியின் தரத்தை விரிவுபடுத்துவதற்கும், மாநில அளவில் தொழிற்பழகுநர் பயிற்சியினை மேம்படுத்திடவும், கண்காணித்திடவும், தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுநர்களுக்கு தொழிற்சாலைகளில் பயிற்சி பெற புதிய வழியை உருவாக்குவதற்கும், மாநில அளவில் தொழிற்பழகுநர் பயிற்சிக்கான மாநில தொழிற்பழகுநர் பயிற்சி கண்காணிப்பு குழுமம்

ஏற்படுத்திடவும், இத்திட்டத்தினை செயல்படுத்தும் மாநில திட்ட செயலாக்கப் பிரிவிற்கும் பயன்படுத்தப்படுகிறது.

**கோட்பாடு : 2 தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பழகுநர் பயிற்சிக்கென மாநில அரசின் கட்டமைப்புகளை பலப்படுத்துதல்**

இக்கோட்பாட்டின்கீழ் செயல்பாட்டு அடிப்படையிலான நிதி ஒப்பந்தம் கையெழுத்திட்டதின் அடிப்படையில் ஒன்றிய அரசு 30 சதவீத முன்பணமாக ரூ.306.00 இலட்சம் நிதியினை வழங்கியுள்ளது.

இக்கோட்பாடு 2-ல் கீழ்க்கண்ட இன்றியமையாத சீர்திருத்த நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

1. தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுநர்களின் பணி முன்னேற்றத்திற்கான கொள்கை

2. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுநர்களின் காலிப்பணியிடங்களை குறைத்தல்

3. இம்மாநிலத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்றவர்களின் வேலைக்கான வாய்ப்புகள் குறித்து அளவீடு செய்வதற்காக ஆய்வு நடத்துதல் *(Tracer study)*

**கோட்பாடு : *4* மேம்படுத்தப்பட்ட மற்றும் விரிவாக்கப்பட்ட தொழிற்பழகுநர் பயிற்சி**

இக்கோட்பாடு *4* - ன் கீழ் திட்ட வழிகாட்டுதலின்படி நமது மாநிலத்தில் முதல் கட்டமாக அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் *(Ambattur Industrial Estate Manufacturers' Association – AIEMA)* மற்றும் கோவை மாவட்ட சிறுதொழில் சங்கம் *(Coimbatore District Small Industrial Association – CODISSIA)* ஆகிய தொழில் கூட்டமைப்புகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு முத்தரப்பு ஒப்பந்தத்தின்படி ஒன்றிய அரசு ஒவ்வொரு தொழிற்கூட்டமைப்பிற்கும் *(Industry Clusters)* ரூ.*40.00* இலட்சம் வழங்கியுள்ளது.

தற்போது இத்திட்டத்தில் ஒன்றிய அரசின் தொழிற்கூட்டமைப்பு தேர்வுக்குழுவால் *(National Cluster Evaluation Committee)* மதுரை ஆபரணங்கள் உற்பத்தியாளர் கூட்டமைப்பு பிரைவேட் லிமிடெட் *(Madurai Jewellery Manufacturer Consortium Pvt Ltd, Madurai)* என்ற நிறுவனம் மூன்றாவது தொழிற்கூட்டமைப்பாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## *3.32.* தொழிற்பயிற்சி நிலையத்தினை மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக மேம்படுத்துதல்

அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் கோயம்புத்தூர் ரூ.*10.00* கோடி திட்ட மதிப்பீட்டுடன் மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக மேம்படுத்திட தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி *70:30* என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே பங்கிடப்படுகிறது.

ஒன்றிய அரசு தனது பங்களிப்பான ரூ.*700.00* இலட்சத்தில் ரூ.*350.00* இலட்சத்தை மாநில அரசுக்கு வழங்கியுள்ளது. மாநில அரசு, புதிய கட்டடம் கட்டுதல் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் ஆகிய பணிகளுக்காக ரூ.*500.00* இலட்சம் விடுவித்துள்ளது.

### *3.33.* தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம் *(ATS)*

தொழிற்பழகுநர் சட்டம் *1961*-ன் படி செயல்படுத்தப்படும் தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம், தொழிற்சாலைகளில் தொழிற்பயிற்சி வழங்கப்படுவதன் மூலமாக பகுதி திறன் பெற்ற மாணவர்களை முழுத் திறன் பெற்றவர்களாக உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

*14* வயது பூர்த்தி அடைந்து, *8*வது / *10*வது தேர்ச்சியுடன் தேசிய தொழிற்சான்றிதழ் பெற்றுள்ளவர்கள் தொழிற்பழகுநர் பயிற்சி திட்டத்திற்கு தகுதியானவர்களாவர். தமிழ்நாட்டில் இத்திட்டத்தின்கீழ் *91* வரையறுக்கப்பட்ட தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சி காலம் ஆறு மாதங்கள் முதல் இரண்டு வருடங்கள் வரை ஆகும். ஒன்றிய அரசு நிர்ணயித்த விகிதத்தில் உதவித்தொகை பெற தொழிற்பழகுநர்கள் தகுதியானவர்களாவர்.

தொழிற்பழகுநர்களுக்கு குறைந்தபட்சமாக ரூ.7000/- உதவித்தொகை வழங்கப்படுகிறது. தற்போது 2,574 தொழிற்பழகுநர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களில் தொழிற்பழகுநர் பயிற்சி பெற்று வருகின்றனர். தொழிற்பழகுநர்கள் பயிற்சியின் முடிவில் தொழிற்பழகுநர்களுக்கான அகில இந்திய தொழிற்தேர்வில் கலந்து கொள்ள வேண்டும். அகில இந்திய தொழிற்பழகுநர் தேர்வு ஏப்ரல் / மே மற்றும் அக்டோபர் / நவம்பர் என ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படுகிறது.

### 3.34. தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்புத் திட்டம் *(National Apprenticeship Promotion Scheme (NAPS)*

தொழிற்சாலைகளில் சேர்க்கையை அதிகப்படுத்துவதன் மூலம் தொழிற்பழகுநர் பயிற்சியினை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் தொழிற் பழகுநர்கள் மற்றும் நிறுவனங்கள் கீழ்க்கண்டவாறு ஊக்குவிக்கப்படுகின்றன.

1. நிறுவனத்தாரால் தொழிற்பழகுநர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகையில் ஒரு பயிற்சியாளருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.1,500/- க்கு மிகாவண்ணம் 25 விழுக்காடு தொகையினை ஒன்றிய அரசு பங்களிப்பாக வழங்குகிறது.

2 அடிப்படைப் பயிற்சி வழங்குநர்களுக்கு ரூ.7,500/-க்கு மிகா வண்ணம் அதிகபட்சமாக 500 மணி நேரங்கள் / 3 மாதங்களுக்கான தொகையை ஒன்றிய அரசு வழங்குகிறது.

இத்திட்டத்தில் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்களை தவிர இதர தொழிற்பழகுநர்கள் இடம்பெறுவர்.

**3.35. பயிற்சி பெறாதவர்களை *(Freshers)* நிறுவனங்களில் தொழிற்பழகுநர்களாக சேர்த்தல்**

2020-க்குள் 50 லட்சம் தொழிற்பழகுநர்கள் சேர்க்கை என்ற தேசிய இலக்கினை அடைவதற்கு

தொழிற்பழகுநர் சட்டத்தில் நிறைய திருத்தங்களும் சீர்திருத்தங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு பயின்று முறையாக பயிற்சி பெறாதவர்களை வரையறுக்கப்பட்ட மற்றும் விருப்ப தொழிற்பிரிவுகளில் தொழிற்பழகுநர்களாக சேர்த்துக்கொள்ளலாம் என்பது இவற்றில் முக்கியமான சீர்திருத்தமாகும். தொழிற்பழகுநர்களாக பயிற்சியில் சேர *14* வயது நிரம்பியவர்களாக இருத்தல் வேண்டும் என்பது முக்கிய தகுதியாகும். இம்முறையில் வெற்றிகரமாக தொழிற்பழகுநர் பயிற்சியை முடிப்பவர்களுக்கு தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் *(NAC)* வழங்கப்படுகிறது.

### *3.36.* மாநில தொழிற்பழகுநர் கண்காணிப்பு குழுமம் *(State Apprenticeship Monitoring Cell)*

மாநில அளவில் தொழிற்பழகுநர் சேர்க்கையை ஒருங்கிணைக்கவும், சிறப்பாக கண்காணிக்கவும் ஒரு மாநில தொழிற்பழகுநர் கண்காணிப்பு குழுமம்

ஒன்றிய அரசு நிதியுதவிடன் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுமத்தில் மாநில திட்ட இயக்குநர், ஒரு இணை இயக்குநர் *3* ஆலோசகர்கள் மற்றும் *6* சார்பு அலுவலர்கள்ஆகியோர் அடங்குவர்.மாநில தொழிற்பழகுநர் கண்காணிப்பு குழுமத்தின் முக்கிய குறிக்கோளானது தொழிற்துறை மதிப்பு விரிவாக்க திட்டத்தின் கீழ் தொழிற்சாலை தொழிற்பழகுநர் முனைப்பு திட்டத்தை சிறப்பாக அமல்படுத்துவது ஆகும். இந்த முயற்சியில் மாநில தொழிற்பழகுநர் கண்காணிப்பு குழுமமானது தொழிற்சாலை கூட்டமைப்பினை *(Industry Cluster)*தெரிவு செய்து கண்காணிப்பதன் மூலம் தொழிற்சாலை தொழிற்பழகுநர் முனைப்பு திட்டத்தை அமல்படுத்துகிறது.

## *3.37.* தொழிற்பள்ளிகள்

தமிழ்நாட்டில் மாநில தொழிற்பயிற்சிக் குழுமத்தின் கீழ் *267* சுயநிதி மற்றும் *21* அரசு உதவி பெறும் தொழிற்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் தற்போது *4,463* மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். எலக்ட்ரிக்கல், ஆட்டோமொபைல், எலக்ட்ரானிக்ஸ், கேட்டரிங், டெய்லரிங், கம்ப்யூட்டர் சாப்ட்வேர், ஆபீஸ் ஆட்டோமேஷன் போன்ற *57* தொழிற்பிரிவுகளில் ஒன்று முதல் மூன்று வருடம் வரையிலான கால அளவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. எட்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் பல்வேறு தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற சேர்க்கை செய்யப்படுகின்றனர். *11* தொழிற்பள்ளிகளில் தொழில்நுட்ப ஆசிரியர் சான்றிதழ் பயிற்சி வழங்கப்படுகிறது.

மாநில தொழிற்பயிற்சி தேர்வு வாரியத்தால் *(SBEVT)* தேர்வுகள் நடத்தப்பட்டு மாநில தொழிற்பயிற்சி குழுமத்தின் *(SCVT)* சான்றிதழ்கள் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வழங்கப்படுகிறது. அரசிடமிருந்து *21* தனியார் தொழிற்பள்ளிகளும் *10* தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் பராமரிப்பு மானியம் பெறுகின்றன. *2020-21* நிதியாண்டில் பராமரிப்பு மானியமாக ரூ.*5.92* கோடி, அரசு உதவி பெறும் தொழிற்பள்ளிகள் / தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## *3.38.* விரிவு படுத்தப்பட்ட கற்றல் முறைகள்

❖ மாணவர்கள் சவால்களை எதிர்கொள்ளவும், தொழிற்சாலைகளின் தேவைகேற்றவாறு துரிதமாக செயல்படவும் அவர்களுக்கு ஆங்கில மொழிப் புலமை, தொடர்பு திறன்கள், தர மேலாண்மைக் கருவிகள், தொழில் முனைவோர் திறன்கள், ஆகியவற்றை

கற்பித்திட அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் மொழி மற்றும் மென்திறன் ஆய்வகங்கள் செயல்படுகின்றன.

- மாநிலத்தில் உள்ள சிறந்த பயிற்றுநர்களின் நிபுணத்துவத்தை பயன்படுத்தி ஆனைக்கட்டி, கூடலூர், ஜமுனாமரத்தூர், கொல்லிமலை, கருமந்துறை மற்றும் சங்கராபுரம் ஆகிய ஊரக மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள பழங்குடியினருக்கென பிரத்தியேகமாக செயல்படும் ஆறு தொழிற்பயிற்சி நிலையங்களில் மெய்நிகர் வகுப்பறைகள் செயல்படுகின்றன.

- அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளியினை நீக்கிட, மேம்படுத்தப்பட்ட இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் ரூ.30.00

கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

- 10,000 மாணவர்களுக்கு தொழிற்சாலைகளின் அனுபவம் கிடைத்திடவும், உடனடியாக வேலை கிடைப்பதற்கான திறன்களை பெற்றிடவும் தொழிற்சாலைகளுடன் இணைந்து நேரடி பயிற்சித்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

- புதிய மேம்படுத்தப்பட்ட / அதி நவீன தொழிற்பிரிவுகளான மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ், ஆர்க்கிடெக்சுரல் அஸிஸ்டென்ட், ஆட்டோபாடி ரிப்பேரிங் & பெயிண்டிங், ஆப்ரேட்டர் அட்வான்ஸ்டு மெஷின் டூல்ஸ், டூல் & டை மேக்கிங், டெக்னீசியன் பவர் எலக்ட்ரானிக்ஸ், மற்றும் ஃபயர் டெக்னாலஜி & இன்டஸ்டிரியல் சேப்டி மேனேஜ்மெண்ட் போன்றவை அரசினர்

தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

❖ மாணவர்கள் பாடங்களை எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் *14* தொழிற்பிரிவுகளில் மெய்நிகர் வழியில் பயிற்றுவிக்க கணினி வழியிலான *(e-Content)* பாடங்கள் ரூ.*1.27* கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டு அனைத்து அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பயிற்றுவிக்கப் படுகின்றன.

❖ மாணவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு தொழிற்சாலைகளில் வேலை பெறுவதை சார்ந்திருப்பதால், ஒவ்வொரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திலும் பயிற்சி அலுவலர் நிலையில் பணியமர்த்தும் அலுவலர் நியமிக்கப்பட்டு மாணவர்கள் அனைவரையும் தொழிற்சாலைகளில் பணியமர்த்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

- மேலும், இவை தவிர மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி தடையின்றி தொடர ஏதுவாக இளநிலை பயிற்சி அலுவலர், உதவி பயிற்சி அலுவலர் மற்றும் பயிற்சி அலுவலர் போன்ற நிலைகளில் தொழிற்பயிற்சி நிலையங்களில் பணிபுரியும் பயிற்றுநர்களின் பணிக்காலம் கல்வியாண்டு முடியும் வரை அதாவது ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

- அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பாதுகாப்பான சூழலில் பயிற்சி நடைபெற மாணவர்களுக்கு தனிநபர் பாதுகாப்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

- மெக்கானிக் மோட்டார் வாகன தொழிற்பிரிவு மாணவர்களுக்கு நாட்டிலேயே முதன் முறையாக மின்சார வாகனங்களை பராமரிக்கும் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

### *3.39.* கௌசலாச்சார்யா விருது

கௌசலாச்சார்யா விருது எதிர்காலத்திற்கு ஏற்ற திறன் மிக்க தொழிலாளர்களை உருவாக்குவதில் பல்வேறு துறைகளில் *(Sectors)* சிறந்த முறையில் பணியாற்றிய பயிற்றுநர்களை கௌரவிக்கும் பொருட்டு அவர்களுக்கு வழங்கப்படுகிறது. தேசிய அளவிலான குழு, தமிழ்நாடு மாநிலத்தில் திரு.எம்.செவ்வேள், உதவி பயிற்சி அலுவலர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் மதுரை அவர்களை பொறியியல் பிரிவிற்கும், திரு.*P.*சுகுமார், உதவி பயிற்சி அலுவலர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், அம்பத்தூர் அவர்களை பொறியியல் அல்லாத பிரிவிற்கும் தேர்ந்தெடுத்துள்ளது. திரு.*P.*சுகுமார், உதவி பயிற்சி அலுவலர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், அம்பத்தூர் அவர்கள் பொறியியல் அல்லாத பிரிவில் தேசிய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

### 3.40. டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது

தரமான தொழிற்பயிற்சியினை அளிப்பதில் சிறந்த செயல் திறன் உடன் பணியாற்றிய முதல்வர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்காக டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் சிறந்த முறையில் செயலாற்றிய 12 அலுவலர்களுக்கு (முதல்வர்கள் - 2, பயிற்சி அலுவலர்கள்–2, உதவிபயிற்சி அலுவலர்கள் - 4 மற்றும் இளநிலை பயிற்சி அலுவலர்கள்–4) அவர்களது முயற்சியை பாராட்டுவதற்கும் ஊக்குவிப்பதற்கும் ரூ.10,000/-க்கான கிசான் விகாஸ் பத்திரமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

### *3.41*. தொழிற்சாலைகளின் பங்களிப்புகள்

தொழில் நிறுவனங்களின் பங்களிப்புடன், இத்துறை பின்வரும் தொழிற்பயிற்சி நிலையங்களின் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் அதன் பயிற்றுநர்கள் / மாணவர்களின் திறன் மேம்பாடு ஆகிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

- சிப்காட் நிறுவனம் ரூ.*2.28* கோடி செலவில், ஒரகடத்தில், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினை உருவாக்குவதற்கு நிலம் மற்றும் கட்டடம் ஆகியவற்றை வழங்கியுள்ளது.
- லிங்கன் எலக்ட்ரிக் *(*பி*)* லிமிடெட் நிறுவனம், பற்றவைப்பு தொழிற்பிரிவிற்காக ரூ.*15.00* லட்சம் மதிப்பிலான இயந்திரங்களை, அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், ஒரகடத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

- கொஸ்ட் அலையன்ஸ் மற்றும் டைட்டன் லீப் நிறுவனங்கள், தொழிற்பயிற்சி நிலைய பயற்சியாளர்களுக்கு மென்திறன் பயிற்சி அளித்து வருகின்றன.
- கொஸ்ட் அலையன்ஸ் நிறுவனம், மாநிலத்தில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு *215* கணினிகளை பயிற்சிக்காக வழங்கியுள்ளது.

மாநிலத்தில் திறன்மேம்பாட்டு நடவடிக்கைகளை அதிகப்படுத்திட தமிழ்நாடு அரசு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

## *4.* தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

இளைஞர்களின் வேலைவாய்ப்பு பெறும் திறனை மேம்படுத்தும் வகையில் தேவைக்கேற்ற மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு பொருத்தமான திறன் பயிற்சிகளை அவர்களுக்கு வழங்கி நாட்டின் திறன்மிகு மையமாக தமிழ்நாட்டை உருவாக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசால் கம்பெனி சட்டம், *2013*, பிரிவு *8*-ன் படி இலாப நோக்கமற்ற அமைப்பாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகமானது உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மாநிலத்தின் திறன் பயிற்சிகளுக்கான ஒருங்கிணைப்பு முகமையாக *(Nodal Agency)* செயல்படுகிறது. அரசு நிறுவனங்கள், சிறந்த தனியார் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தொழில் நிறுவனங்கள் சார்ந்த மற்றும்

வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சியினை வழங்குகிறது.

## *4.1.* தேசிய திறன் கட்டமைப்பு தரநிலை *(NSQF)*

மாநிலம் மற்றும் நாடு முழுவதும் ஒரே மாதிரியான, தரமான பாடத்திட்டங்களை நடைமுறைபடுத்த தேசிய திறன் கட்டமைப்பு தரநிலை *(NSQF)* ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது, தேசிய திறன் கட்டமைப்பு தரநிலையால் *(NSQF)* அங்கீகரிக்கப்பட்ட திறன் பயிற்சிகளை வழங்குவதுடன் பிற தர நிர்ணயங்களான பயிற்சியின் கால அளவு, பயிற்சியின் தரம், மதிப்பீடு செய்யும் முறை மற்றும் பயிற்சி கட்டண முறை ஆகிய பொதுவான நெறிமுறைகளைக் கண்டிப்பாக கடைப்பிடிக்கிறது. பயிற்சியை வெற்றிகரமாக முடித்து சான்று பெறும் பயிற்சியாளர்களில் குறைந்தபட்சம் *70%* பயிற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்பினை

பெற்றுத் தரும் நோக்கில் வழங்கப்படும் திறன் பயிற்சிகளில் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி தொகுப்புகள் *(Qualification Pack)* பின்பற்றப்படுகின்றன.

## 4.2. பயிற்சிகளுக்கான சுதந்திரமான மதிப்பீடு மற்றும் சான்றளித்தல்

பயிற்சியின் தரத்தை உறுதி செய்யும் வண்ணம், மாநில தொழிற்பயிற்சி குழுமம் *(State Council for Vocational Training)* மற்றும் துறை திறன் குழுமம் *(Sector Skill Council)* வாயிலாக மூன்றாம் நபர் *(Third Party)* மதிப்பீடு மற்றும் சான்றளித்தலின் மூலம் சுதந்திரமான மற்றும் நடுநிலையான மதிப்பீடு மற்றும் சான்றளிப்பு உறுதி செய்யப்படுகிறது.

## 4.3. பயிற்சி நிறுவனங்களுக்கான அங்கீகாரம் வழங்குதல்

சிறந்த பயிற்சி நிறுவனங்களை கண்டறிந்து தேர்வு செய்யும் பொருட்டு விருப்பம் கோரும் விண்ணப்பங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்

கழகத்தால் கோரப்பட்டது. விருப்பமுள்ள பயிற்சி நிறுவனங்கள் தற்போது தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளத்தில் எப்பொழுது வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம். முன்னர் அவர்கள் இணையதளத்தில் விண்ணப்பிக்க காத்திருக்க வேண்டியிருந்தது. அந்நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளனவா என்பதை உறுதி செய்யும் வகையில் மாவட்ட திறன் பயிற்சி அலுவலர்களால் நேரடி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபின் மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பீடு செய்யப்படுகின்றன. தகுதிவாய்ந்த நிறுவனங்கள் மாநில அளவிலான உயர்நிலை குழுவால் *(State Level Apex Committee)* ஒப்புதல் வழங்கப்பட்டபின் பயிற்சி நிறுவனங்கள்/ பயிற்சி மையங்களாக அங்கீகரிக்கப்படுகின்றன.

## 4.4. 2020-2021 ஆம் ஆண்டு பயிற்சியளிக்கப்பட்டோர் விவரங்கள்

ஒவ்வொரு மாவட்டம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்புகளின் அடிப்படையில் பல்வேறு துறைகளில் குறுகிய கால திறன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. 2020-2021 ஆம் நிதியாண்டிற்கான விவரங்கள் பின்வருமாறு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன :

**அ. திறன் பயிற்சியளிக்கப்பட்டோர் விவரங்கள் (மாவட்ட வாரியாக)**

| வ. எண். | மாவட்டம் | பயிற்சி பெற்றோர் |
|---|---|---|
| 1 | அரியலூர் | 419 |
| 2 | சென்னை | 9,724 |
| 3 | கோயம்புத்தூர் | 2,256 |
| 4 | கடலூர் | 1,409 |
| 5 | தர்மபுரி | 1,018 |
| 6 | திண்டுக்கல் | 1,675 |
| 7 | ஈரோடு | 1,235 |

| வ. எண். | மாவட்டம் | பயிற்சி பெற்றோர் |
|---|---|---|
| 8 | காஞ்சிபுரம் | 2,899 |
| 9 | கன்னியாகுமரி | 637 |
| 10 | கரூர் | 1,500 |
| 11 | கிருஷ்ணகிரி | 1,003 |
| 12 | மதுரை | 918 |
| 13 | நாகப்பட்டினம் | 1,290 |
| 14 | நாமக்கல் | 918 |
| 15 | நீலகிரி | 165 |
| 16 | பெரம்பலூர் | 135 |
| 17 | புதுக்கோட்டை | 410 |
| 18 | இராமநாதபுரம் | 190 |
| 19 | சேலம் | 1,909 |
| 20 | சிவகங்கை | 433 |
| 21 | தஞ்சாவூர் | 635 |
| 22 | தேனி | 658 |
| 23 | தூத்துக்குடி | 895 |
| 24 | திருச்சிராப்பள்ளி | 1,476 |
| 25 | திருநெல்வேலி | 520 |
| 26 | திருப்பூர் | 1,214 |
| 27 | திருவள்ளூர் | 1,140 |

| வ. எண். | மாவட்டம் | பயிற்சி பெற்றோர் |
|---|---|---|
| 28 | திருவண்ணாமலை | 283 |
| 29 | திருவாரூர் | 166 |
| 30 | வேலூர் | 3,411 |
| 31 | விழுப்புரம் | 764 |
| 32 | விருதுநகர் | 739 |
| **மொத்தம்** | | **42,044** |

## ஆ. திறன் பயிற்சியளிக்கப்பட்டோர் விவரம் (துறை வாரியாக )

| வ. எண். | துறையின் பெயர் | பயிற்சி பெற்றோர் |
|---|---|---|
| 1. | விவசாயம் | 1,069 |
| 2. | ஆயத்த ஆடை | 13,530 |
| 3. | தானியங்கி | 4,435 |
| 4. | அழகுக் கலை | 710 |
| 5. | வங்கி, நிதி மற்றும் காப்பீட்டு சேவைகள் | 25 |
| 6. | மூலதனப் பொருட்கள் | 2,302 |
| 7. | கட்டுமானம் | 1,328 |
| 8. | மின்னணுவியல் மற்றும் வன்பொருள் | 2,662 |

| வ. எண். | துறையின் பெயர் | பயிற்சி பெற்றோர் |
|---|---|---|
| 9. | உணவு பதனிடுதல் | 1,149 |
| 10. | சுகாதாரம் | 1,387 |
| 11. | தகவல் தொழில் நுட்பம் / தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகள் | 4,265 |
| 12. | தோல் மற்றும் தோல் பொருட்கள் | 2,736 |
| 13. | சரக்கு நகர்வு மேலாண்மை | 1,420 |
| 14. | நெகிழி பொறியியல் | 829 |
| 15. | குழாய் பொருத்துதல் | 91 |
| 16. | ஆற்றல் (மின்சாரம்) | 18 |
| 17. | சில்லரை வர்த்தகம் | 717 |
| 18. | பாதுகாப்பு | 37 |
| 19. | தொலைத் தொடர்பு | 1,110 |
| 20. | ஜவுளி மற்றும் கைத்தறி | 790 |
| 21. | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | 1,434 |
| | **மொத்தம்** | ***42,044*** |

## 4.5. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக இணையதளத்தின் சிறப்பம்சங்கள்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளமானது *(www.tnskill.tn.gov.in)* திறன் பயிற்சி தொடர்புடைய அனைவரையும் ஒருங்கிணைக்கும் பன்மொழித் திறன் ஆய்வு தளமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விணையதளமானது வெளிப்படைத் தன்மையுடன் பயனாளிகள் எளிமையாக அணுகுவதற்கும், உரிய வசதிகளுடன் ஒருங்கிணைந்த கண்காணிப்பு அமைப்புடன் கூடிய ஒரு சிறந்த நிகழ்நிலை சேவை தளமாகவும் விளங்குகிறது. பயிற்சியின் தரத்தினை உறுதி செய்யவும் பயிற்சித் திட்டங்களை தங்கு தடையின்றி செயல்படுத்தவும் திறன் பெற்றவர்களின் ஒற்றை தரவு மையமாக இத்தளம் செயல்படுகிறது.

வேலைநாடுநர்கள் ஒவ்வொருவரும் தனது ஆதார் எண்ணை பயன்படுத்தி இவ்வளைதளத்தில்

பதிவு செய்து தேவைப்படும் பயிற்சி மற்றும் பயிற்சி மையங்களைத் தேர்வு செய்து கொள்ளலாம்.

பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பயிற்சி மையங்களின் அங்கீகாரம், பயிற்சி வகுப்பு உருவாக்கம், இலக்கு நிர்ணயித்தல், பொது நிதி மேலாண்மை அமைப்பு *(PFMS)* போன்ற அனைத்து சேவைகளும் முழுவதுமாக இவ்விணையதளம் வழியாக நிகழ்நிலையில் வழங்கப்படுகிறது.

அனைத்து பங்குதாரர்களும் ஒன்றுக்கும் மேற்பட்ட பதிவை தவிர்க்கவும், நிதிப் பரிமாற்றம் உரிய பங்குதாரர்கள் பெறுவதை உறுதி செய்யவும் ஆதார் எண் சரிபார்ப்பு முறை பயன்படுத்தப்படுகிறது. தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் தேசிய திறன் தகுதி கட்டமைப்பு *(NSQF)* விதிமுறைகளை பின்பற்றி ஆய்வு மற்றும் மதிப்பீட்டு தொகுதிகள் வடிவமைக்கப்பட்டு, புவியியல் வரை படத்துடன்

தொடர்ப்பு படுத்தப்பட்ட மொபைல் செயலியின் வாயிலாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 4.6. உலக த்திறன் போட்டிகள்

திறன் போட்டிகள், திறனை மேம்படுத்துதல் மற்றும் வெளிக்கொணர்வதற்கும் திறனில் சிறந்து விளங்குபவர்களை காட்சிப்படுத்துகின்றன. இந்திய திறன்கள் எனப்படும் தேசிய அளவிலான திறன் போட்டிகள் 2 வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. மாநில அளவிலான திறன் போட்டியில் வெற்றி பெறுபவர்கள் மண்டல அளவிலும் அதனை தொடர்ந்து தேசிய அளவில் நடைபெறும் திறன் போட்டிகளிலும் கலந்து கொள்வார்கள்.

அடுத்த உலக திறன் போட்டி சீனாவில் உள்ள ஷாங்காய் நகரில் அக்டோபர் 2022-ல் நடைபெறவுள்ளது. உலக திறன் போட்டி 2022-ல் தமிழக இளைஞர்கள் சிறந்து விளங்க அவர்களை

தயார் செய்யும் பொருட்டு ஜனவரி *2020*-ல் *47* விதமான திறன்களில், மாவட்ட அளவிலான திறன் போட்டிகள் நடத்தப்பட்டு *360* இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள், செப்டம்பர் *2021*-ல் கேரள மாநிலம் கொச்சி நகரில் நடைபெறும் மண்டல அளவிலான திறன் போட்டிகளில் பங்கேற்க உள்ளனர். மண்டல அளவில் வெற்றி பெறும் இளைஞர்கள் தேசிய அளவிலான திறன் போட்டிகளில் பங்கேற்பார்கள்.

### *4.7.* மேம்பட்ட திறன் பயிற்சி

பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி பட்டதாரிகளுக்கு உயர் திறன் பயிற்சி வழங்கும் வகையில் ஒரு திறன்மிகு மையம் *(Centre of Excellence)* மற்றும் ஐந்து தொழில்நுட்ப திறன் பயிற்சி மையங்கள் *(t-SDIs)*, தானியங்கி மற்றும் ரோபோடிக்ஸ் துறையில் உலக அளவில் முன்னணி நிறுவனமான சீமென்ஸ் உடன் இணைந்து பொது மற்றும் தனியார்

கூட்டமைப்பாக *(PPP)* ரூ.546.84 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் ஒரு திறன்மிகு மையம் *(Centre of Excellence)* சென்னை குரோம்பேட்டை, எம்.ஐ.டி வளாகத்திலும் மற்ற ஐந்து இணைப்பு தொழில்நுட்ப திறன் பயிற்சி மையங்கள் *(t-SDIs)* பின்வரும் இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

1) அண்ணா பல்கலைக்கழக கல்லூரி, காஞ்சிபுரம்

2) அண்ணா பல்கலைக்கழக கல்லூரி, விழுப்புரம்

3) தந்தை பெரியார் அரசு தொழில்நுட்ப கல்லூரி, வேலூர்

4) மத்திய பாலிடெக்னிக் கல்லூரி, தரமணி

5) முருகப்பா பாலிடெக்னிக் கல்லூரி (அரசு உதவி பெறும்), ஆவடி

மாணவர்களின் வேலைவாய்ப்பு பெறும் திறனை அதிகரிப்பதற்காக உயர் தொழில்நுட்ப திறன்

பயிற்சிகளை வழங்க எம்.ஐ.டி *(Madras Institute of Technology)* முக்கிய மையமாக செயல்படுவதுடன் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரியை சார்ந்த பயிற்றுநர்களுக்கு திறன் மேம்படுத்தும் பயிற்சி வழங்கும் நிறுவனமாகவும் செயல்படுகிறது. இம்மையங்களின் மூலம் இதுவரை மொத்தம் 14,690 மாணவர்களுக்கும் 156 பயிற்றுநர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 4.8. அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் – திறன் மதிப்பீடு மற்றும் சான்றளித்தல் *(Recognition of Prior Learning - RPL)*

அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் என்பது ஒரு நபரிடம் காணப்படும் திறன்கள், அறிவு மற்றும் முறையான / முறைசாரா கற்றலின் வழி அவர் பெற்ற அனுபவம் ஆகியவற்றை சோதித்து சான்றளிப்பதாகும். இத்திட்டத்தின் மூலம் மார்ச் 2021 வரையில் பின்வரும் துறைகளில்

73,059 தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

1) கட்டுமானம்
2) ஆடை வடிவமைத்தல்
3) வண்ணம் மற்றும் வண்ணப்பூச்சு
4) தோல் மற்றும் தோல்பொருட்கள்
5) சரக்கு நகர்வு மேலாண்மை
6) தானியங்கி
7) சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்
8) வீட்டுப் பணியாளர்கள்

மேலும், பொதுப் பணித்துறை, குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், உள்ளாட்சி அமைப்புகள் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் அனைத்து ஒப்பந்த பணிகளில் பணியின் தரம் மற்றும் பணியிடங்களில் விபத்துக்களைக் குறைக்கும் பொருட்டு, அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை

அங்கீகரித்து சான்றிதழ் பெற்ற தொழிலாளர்களை பணி அமர்த்திட வேண்டுமென மாநில அரசு ஆணையிட்டுள்ளது.

### *4.9.* பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா *2.0 & 3.0*

இத்திட்டத்தின் நோக்கம் பெருமளவிலான இந்திய இளைஞர்களுக்கு தொழில் சார்ந்த திறன் பயிற்சி வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதாகும். இத்திட்டமானது ஒன்றிய அரசின் ஆதரவுடன் ஒன்றிய அரசால் நடத்தப்படும் *(Centrally Sponsored Centrally Managed)* மற்றும் ஒன்றிய அரசின் ஆதரவுடன் மாநில அரசால் நிர்வகிக்கப்படும் *(Centrally Sponsored State Managed)* திட்டமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் ஆதரவுடன் மாநில அரசால் நிர்வகிக்கப்படும் பிரிவின் கீழ் ரூ.*42.48* கோடி செலவில் *2017* ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் *47,570* நபர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா *(PMKVY) 3.0* என்பது பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா *2.0* திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட வடிவமாகும். விரிவு படுத்தப்பட்ட மற்றும் மாவட்ட அளவிலான கீழ் நிலையில் திட்டமிடப்படுவது என்ற அடிப்படையில் இத்திட்டம் இணைந்துள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டம் *20.01.2021* அன்று துவங்கப்பட்டது. தமிழ்நாட்டில் *31.07.2021* வரை *2,097* நபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

### *4.10.* சங்கல்ப் *(SANKALP)* - உலக வங்கி நிதி உதவி திட்டம்

வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள திறன் பெறுதல் மற்றும் அறிவுக்கான விழிப்புணர்வு திட்டமானது *(Skills Acquisition and Knowledge Awareness for Livelihood Promotion)* தேசிய திறன் மேம்பாட்டு அமைப்பின் மைய நோக்கத்தை செயல்படுத்துகிறது. ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தின் முக்கிய துணை

அமைப்புகளின் வழி இத்திட்டம் துவக்கப்பட்டது. உலக வங்கி உதவியுடன் தேசிய திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் அனைத்து நோக்கங்களையும் ஒருங்கிணைத்து இத்திட்டம் விரைவுத் திட்டமாக நிறைவேற்றப்பட உள்ளது. தேசிய மற்றும் மாநில அளவில் உள்ள பயிற்சி நிறுவனங்களின் அமைப்பு முறைகளை வலுப்படுத்துவது, தரமான பயிற்றுநர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களை உருவாக்குவது, மாநில அளவில் செயல்படுத்தப்படும் அனைத்து திறன் பயிற்சித் திட்டங்களையும் ஒருங்கிணைப்பது, பயிற்சித் திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைகளை வலுப்படுத்துவது மற்றும் சமூகத்தில் பின் தங்கியவர்களுக்கு சிறப்பான பயிற்சி கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

உலக வங்கியின் நிதி உதவியுடன், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் *60:40* என்ற விகித நிதி பங்கீட்டின் அடிப்படையில் இத்திட்டம்

செயல்படுத்தபட்டு வருகிறது. இதற்கான நிதி, 'அமைப்பு முறையினை வலுப்படுத்துவதற்கான மானியம்' மற்றும் 'சேர்த்துக் கொள்ளல் மானியம்' என இரு கூறுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

திறன் சவால்களை எதிர் கொள்ளும் பொருட்டு சங்கல்ப் திட்டத்தின் கீழ், முன்னேற விழையும் *(Aspirational Districts)* மாவட்டங்களான விருதுநகர் மற்றும் இராமநாதபுரத்திற்கு ரூ.*33.34* இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ரூ.*20.30* கோடி திட்ட மதிப்பீட்டில் பல்வேறு அமைப்பு முறையினை வலுப்படுத்துதல் மற்றும் சேர்க்கை செய்தல் ஆகியன திட்டமிடப்பட்டுள்ளது.

*i)* நான்கு மண்டலங்களிலுள்ள மாவட்ட திறன் பயிற்சி அலுவலர்களுக்கு மாவட்ட திறன் பயிற்சித் திட்டம் தயாரித்தல் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

*ii)* கிராப்ட் கவுன்சில் ஆப் இந்தியா நிறுவனத்தின் மூலம் *40* பத்தமடை பாய் தயாரிக்கும் நெசவாளர்களுக்கு டிஜிட்டல் மற்றும் நிதி சார்ந்த கல்வியறிவு வழங்கும் பயிற்சி மற்றும் மேம்படுத்தப்பட்ட வடிவமைத்தல் பயிற்சி ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

*iii)* தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடுச் சங்கத்துடன் இணைந்து *14* திருநங்கைகளுக்கு சிறப்புத் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

*iv)* *25* மாவட்டங்களிலுள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் *(MSME)* பிரதிநிதிகளுக்கு தேசிய தொழிற்பழகுநர் மேம்பாட்டு திட்டம் *(NAPS)* தொடர்பான விழிப்புணர்வு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

*v)* *5* மாவட்டங்களிலுள்ள, பேறு காலத்திற்கு பின் வேலை இழந்த *200* பெண்களுக்கு

வேலையைத் தொடர்வதற்கான ஆலோசனை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

*vi)* வேலைவாய்ப்பு வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு, பல்வேறு மாவட்டங்களில் *5* வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இம்முகாம்களின் மூலம் *2020 - 21* ஆம் நிதியாண்டில் மொத்தம் *8,752* நபர்கள் பணி வாய்ப்பினை பெற்றுள்ளனர்.

### *4.11.* உயர் திறன் மேம்பாட்டு மையங்கள்

வளர்ந்து வரும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை எதிர்கொள்ளும் பொருட்டு, தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டுத் திட்டம், பகுதி-*II* *(TNIPP-Phase II)*-ன் ஒரு பகுதியாக ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமை *(JICA)* உதவியுடன் பின்வரும் துறைகளில் உயர் தொழில்நுட்ப பயிற்சிகளை

வழங்குவதற்கு உயர்திறன் மேம்பாட்டு மையங்கள் அமைத்திட, அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

1. தானியங்கி, தானியங்கி உபகரணங்கள் மற்றும் இயந்திர கருவிகள்
2. கட்டுமானம் மற்றும் உட்கட்டமைப்பு
3. மருத்துவம் மற்றும் சுகாதார நலன்
4. சரக்கு நகர்வு மேலாண்மை மற்றும் போக்குவரத்து
5. வங்கி, நிதி மற்றும் காப்பீட்டு சேவைகள்

ஒவ்வொரு உயர் திறன் மேம்பாட்டு மையமும், துறைக்கான திறன்மிகு மையமாக செயல்படும். கம்பெனிச் சட்டம் 2013, பிரிவு 8-ன் கீழ் இம்மையங்களில் நிறுவப்படும் சிறப்பு நோக்கு அலகு (SPV) தினசரி அலுவல்களை நிர்வகிக்கும்.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | முன்னணி செயலாக்க பங்குதாரர் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | மருத்துவம் மற்றும் சுகாதார நலனுக்கான தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் | காவேரி மெடிக்கல் கேர் (இந்தியா) லிமிடெட் | இதுவரை 645 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. |

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | முன்னணி செயலாக்க பங்குதாரர் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 2. | சரக்கு நகர்வு மேலாண்மை மற்றும் போக்குவரத்துக்கான தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் | சரக்கு நகர்வு மேலாண்மை துறை திறன் குழுமம் | பயிற்சி துவங்கப்படவுள்ளது. |
| 3. | கட்டுமானம் மற்றும் உட்கட்டமைப்புக்கான தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் | ராம்கோ சிமெண்ட்ஸ் (பி) லிமிடெட் | பிரிவு 8ன் கீழான நிறுவனமாக பதிவு செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| 4. | வங்கி, நிதிச் சேவை மற்றும் காப்பீட்டிற்கான தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் | MSE நிதி சேவைகள், சென்னை | சிறப்பு நோக்கு அலகு அமைப்பை உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| 5. | தானியங்கி உபகரணங்கள் மற்றும் இயந்திர கருவிகளுக்கான தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் | - - - | முன்னணி செயல் பங்குதாரரை தெரிவு செய்ய கருத்துரு வெளியிடப்பட உள்ளது. |

## 4.12. பல்நோக்கு திறன் மேம்பாட்டு மையம்

தோல் பதனிடும் துறையில் வருடத்திற்கு 2,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு ரூ.6.25 கோடி செலவில் தமிழ்நாடு திறன்

மேம்பாட்டுக் கழகம் மற்றும் மத்திய காலணி பயிற்சி நிறுவனம் ஆகியவை இணைந்து வாணியம்பாடியில் பல்நோக்கு திறன் மேம்பாட்டு மையம் துவங்கியுள்ளது. இது போன்ற மையத்தை உருவாக்கி செயல்படுத்துவதில் தமிழ்நாடு, நாட்டின் முதல் மாநிலமாக விளங்குகின்றது. 31.07.2021 வரை இப்பயிற்சி மையத்தில் 90 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

### 4.13. புதிய முயற்சிகள்

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் முன்னணி தொழில் நிறுவனங்களுடன் இணைந்து பொது மற்றும் தனியார் கூட்டாண்மை (PPP) வழியாக தொழில் சார்ந்த திறனை மேம்படுத்துதல்.

- எதிர்காலத்தில் வேலைவாய்ப்புகளைப் பெறத் தேவைப்படும் சிறப்புத் திறன்களான, கைப்பேசி பழுதுநீக்கம், கணினி மற்றும் சார்பு

உபகரணங்களை நிறுவுதல் தொடர்பாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு திறன் மேம்படுத்தும் பயிற்சிகளை வழங்குதல்.

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், வேளாண்மை தொடர்பான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் குறித்து இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கும்.

- தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையுடன் இணைந்து மகளிர் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு நாட்டுக் கோழி மற்றும் கறவை மாடு வளர்ப்பு குறித்து திறன் பயிற்சியினை வழங்கும்.

- பல்வேறு அரசுத் துறைகளின் திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான பயிற்சியின்

தரத்தைக் கண்காணிக்க தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சரியான அமைப்பாகும். இதனை செயல்படுத்த திறன் பயிற்சித் திட்டங்களை செயல்படுத்தும் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைக்க வேண்டும். அரசின் நிதி வீணாவதை தவிர்க்கவும், பயிற்சியளித்தலில் ஒருமுறை பயிற்சியளிக்கப்பட்டவருக்கே மீண்டும் பயிற்சியளிக்கப்படுவதை தவிர்ப்பதுமே இவ்வொருங்கிணைக்கும் முயற்சியின் முதன்மை பயனாகும். ஆதார் இணைப்புடன் கூடிய பயோ-மெட்ரிக் வருகைப் பதிவேடு முறையாலும் ஒருங்கிணைந்த திறன் தொகுப்பாலும் ஒருமுறை பயிற்சி அளிக்கப்பட்டவருக்கே மீண்டும் பயிற்சி அளிக்கப்படுவது தவிர்க்கப்படும். திறன் தொகுப்பை பராமரிக்க, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளம் மேலும்

வலுவாக்கப்படும். மாநிலத்தில் நடைபெறும் அனைத்து திறன் பயிற்சி திட்டங்கள் தொடர்பான தரவுகளுக்கு திறன் தொகுப்பு ஒற்றைத் தீர்வாக அமையும். மேலும், திறன் பயிற்சி முடித்து பணி பெற்ற நபர்கள், பணிவாய்ப்புக்கு காத்திருக்கும் நபர்கள் ஆகிய தகவல்கள் அடங்கிய ஒற்றைச் சாளர தரவு தளமாக திறன் தொகுப்பு அமையும். திறன் தொகுப்பு மூலம் பணிவாய்ப்புக்கு பின்னரும் அந்நபர்களின் நிலையை கண்காணிக்க இயலும். தரமான வேலையளிக்கும் நிறுவனங்கள் தகுதியான திறன் பெற்ற நபர்களை கண்டறியவும் திறன் தொகுப்பு துணை புரியும். வேலைநாடுநர்களும், திறன் பயிற்சி பெற்ற நபர்களும் இதன் மூலம் வேலைவாய்ப்பை பெறுவார்கள். திறன் தொகுப்பு தனியார் வேலைவாய்ப்பு இணையதளத்துடன் ஒருங்கிணைக்கப்

பட்டவுடன், அதிக பணி வாய்ப்புகளை உருவாக்கும்.

## *4.14.* நீடித்த வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்கு, பெண்கள் மற்றும் ஆண்கள் இருபாலருக்கும் எளிதில் எட்ட கூடிய மற்றும் தரமான தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி சமமான நிலையில் கிடைத்திட உறுதி செய்வதாகும். தேசிய திறன் கட்டமைப்பு தரத்தின்படி பாலினம் சார்ந்த பல்வேறு வகை திறன் மேம்பாட்டு திட்டங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தினால் தரமான முறையில் கட்டணமில்லாமல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த முயற்சியில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், குறுகியகால திறன் பயிற்சி *(STT)*, அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் *(RPL)*, பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா *3.0 (PMKVY)*, சிறு, குறு மற்றும் நடுத்தர

தொழில் நிறுவனங்களின் திறன் பயிற்சி மையம், *5* துறைகளில் உயர் திறன் மேம்பாட்டு மையம் *(ASDC)*, பல்நோக்கு திறன் மேம்பாட்டு மையம் *(MSDC)*, சீமன்ஸ் உயர்திறன் பயிற்சி மையம், போன்ற பல்வேறு திட்டங்கள் மூலம் அதிக அளவிலான திறன் பெற்ற மனித வளத்தை அதிகரிக்க திறன் பயிற்சி அளித்து வருகிறது.

## 5. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 1978ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு வெளிநாட்டு வேலைநாடுநர்களை வெளிநாடுகளில் பணியமர்த்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் இந்திய கம்பெனிகள் சட்டம், 1956-ன்படி பதிவுசெய்யப்பட்ட தமிழ்நாடு அரசு நிறுவனமாகும். இந்நிறுவனம் இந்திய குடிபெயர்வோர் சட்டம், 1983இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நிறுவனமாக பதிவுசெய்யப்பட்டு வெளிநாட்டு வேலைகளில் பணியாளர்களை பணியமர்த்துவதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் உரிமம் பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.15 இலட்சம் மற்றும் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 இலட்சம் ஆகும்.

## 5.1. செயல்பாடுகள்

- வெளிநாட்டு வேலைநாடுநர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பதிவுமுகாம்கள் நடத்துதல்.
- வெளிநாட்டு வேலையளிப்பவர் சார்பாக நேர்காணல் ஏற்பாடு செய்து இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ள வெளிநாட்டு வேலைநாடுநர்களை நேர்காணல் மற்றும் தேர்வு செய்வதற்கு கலந்துகொள்ளச் செய்தல்.
- வெளிநாட்டு வேலைநாடுநர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் மொழிப்பயிற்சி அளித்தல்.
- வெளிநாட்டு வேலைக்கு தேர்வு செய்யப்பட்டோருக்கு சான்றிதழ் சான்றொப்பம் மற்றும் விசா பெறுவதற்கு உதவி புரிதல்.

- தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு வெளிநாடு செல்வதற்கு தேவையான பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல்.

- பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு வெளிமுகமை முறையில் பணியாளர்களை அளித்தல்.

## *5.2.* பதிவு

வெளிநாட்டு வேலைநாடுநர்கள் வெளிநாட்டு வேலைவேண்டி பதிவு செய்வதற்கேதுவாக *URL: https://www.omcmanpower.com* என்ற வலைதளம் இந்நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

*31.07.2021* அன்றமைந்தவாறு *4,240* நபர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வேண்டி தங்களது பெயரைப் பதிவு செய்துள்ளனர்.

## *5.3.* பணியமர்த்தல்

### *5.3.1.* வெளிநாடு

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட *1978*-ம் ஆண்டு முதல் இதுவரை *10,351* நபர்களை வெளிநாடுகளில் பணியமர்த்தியுள்ளது. இந்நிறுவனம் *01.04.2020* முதல் *31.07.2021* வரை *184* நபர்களை சவூதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு அமீரகம், ஓமன் மற்றும் பஹ்ரைன், ஆகிய நாடுகளில் பணியமர்த்தியுள்ளது.

### *5.3.2.* உள்நாடு

இந்நிறுவனம் *570* நபர்களை ஒப்பந்த அடிப்படையில் அரசுத்துறைகளில் உள்ள பல்வேறு வேலைகளில் பணியமர்த்தியுள்ளது.

## *5.4.* புதிய முயற்சிகள்

*(i)* தமிழ்நாட்டைச் சேர்ந்த செவிலியர்களை இங்கிலாந்து நாட்டில் உள்ள மருத்துவமனைகளில் பணியமர்த்த ஏதுவாக செவிலியர் கல்லூரிகளில் மூன்றாம் ஆண்டு மற்றும் நான்காம் ஆண்டு பயிலும் செவிலியர்களுக்கு *Occupational English Test (OET)* பயிற்சியினை அந்தந்த செவிலியர் கல்லூரிகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

*(ii)* இந்நிறுவனம் வெளிநாட்டு வேலை நாடுநர்களுக்கான பதிவினை செய்வதற்கு ஏற்றவாறு கைப்பேசி செயலி *(*Mobile App) பயன்பாட்டினை விரைவில் உருவாக்க உள்ளது.

## 6. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்)

பாராளுமன்றத்தில் 1948-ம் ஆண்டு இயற்றப்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி (தொ.அ.ஈ.) சட்டப்படி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி (தொ.அ.ஈ.) திட்டத்தை நிர்வகிக்க முறையாக அமைக்கப்பட்ட நிறுவன அமைப்பு "தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம்" என அழைக்கப்படுகிறது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி (தொ.அ.ஈ.) திட்டமானது ஒரு விரிவான சமூக பாதுகாப்பு திட்டமாகும். இதன் முக்கிய நோக்கம் அமைப்பு சார்ந்த தொழில்களில் உள்ள காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை, உடல் நலக்குறைபாடு, மகப்பேறு, உடல் ஊனம் மற்றும் பணியிட மரணம் அல்லது தொழில்சார் நோய்கள் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பதாகும்.

## 6.1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள்

10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களை கொண்ட தொழிற்சாலைகள் மற்றும் இதர நிறுவனங்கள் தொ.அ.ஈ திட்டத்தில் கீழ் வரும். மாத ஊதியம் ரூ.21,000/- வரை பெறும் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்படுவதற்கு தகுதி உடையவராகிறார்கள். மேலும், ஆட்டிசம், செரிபரல் பால்சி, மூளை வளர்ச்சி குறைபாடுகள் மற்றும் மாற்றுத்திறனாளி தொழிலாளர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். தொ.அ.ஈ. திட்டத்தில் மாற்றுதிறனாளி தொழிலாளர்களுக்கு மட்டும் ரூ.25,000/- வரை அதிகபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு பயன்பெறுகின்றனர்.

## 6.2. திட்டத்தின் நிதி ஆதாரம்

01.07.2019 முதல் தொழிலாளர்களின் பங்களிப்பாக ஒவ்வொரு மாதமும் அவர்களது ஊதியத்தில் நிர்ணயிக்கப்பட்டதாக வசூலிக்கப்படும் 0.75 சதவீதமும், வேலையளிப்போரின் பங்களிப்பான 3.25 சதவீதமும் சேர்ந்து பெறப்படும் பங்கு தொகையே இத்திட்டத்தின் நிதியாதாரமாகும். மாநில அரசு செலவழிக்கும் மொத்த செலவினத்தில் 7/8 பங்கினை தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம் திரும்ப வழங்கி வந்தது.தொ.அ.ஈ. கழகம்(ம) மாநில அரசு செலவின பகிர்வு பங்கீடு முறையே 7 : 1 என நிர்ணயிக்கப்படுகிறது.

## 6.3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்

தமிழகத்தில் 233 தொ.அ.ஈ மருந்தகங்கள் மற்றும் 10 தொ.அ.ஈ மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது.

- மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகளின் இயக்குநர் (தொ.அ.ஈதி) கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சென்னை-அயனாவரம், மதுரை, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஓசூர் மற்றும் சிவகாசி ஆகிய ஏழு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள்.

- மருத்துவக் கல்வி இயக்குநர், தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

- தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சென்னை (கே.கே.நகர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை) மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு தொழிலாளர் மாநில காப்புறுதி கழக மருத்துவமனைகள்.

காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் நேர்வுகளில் உயர்சிறப்பு சிகிச்சைகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் மூலமாக கூடுதல் மருத்துவ வசதிகள் வழங்கப்படுகின்றன.

## *6.4.* தமிழ்நாடு தொ.அ.ஈ. திட்ட நிர்வாக அமைப்பு

இயக்குநர், மாநிலம் முழுவதும் உள்ள மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகம், தொ.அ.ஈ. மருத்துவமனை, தொ.அ.ஈ. மருந்தகங்களில் நிர்வாகம், நிதி, திட்ட வளர்ச்சி (ம) திட்டங்களை செயல்படுத்துதல் ஆகிய பணிகளை நிர்வகிக்கிறார்.

*4* மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்கள் அந்தந்த மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகங்களின் கட்டுப்பாட்டில் உள்ள தொ.அ.ஈ. மருந்தகங்களில் நிதி, நிர்வாகம், தொ.அ.ஈ திட்டத்தை நடைமுறைபடுத்துதல் மற்றும்

கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறார்கள்.

## 6.5. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் இயங்கும் ஆயுஷ் *(AYUSH)* பிரிவுகள்

காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஆங்கில முறை சிகிச்சை வசதிகளுடன், கூடுதலாக ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா, ஹோமியோபதி ஆகிய சிகிச்சை முறைகள் உள்ளடங்கிய ஒருங்கிணைந்த "ஆயுஷ்" *(AYUSH)* சிகிச்சை வசதியும் வழங்கப்படுகிறது.

- ஆயுர்வேத பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஓசூர், சிவகாசி ஆகிய எட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. கூடுதலாக ஆயுர்வேத பிரிவுகள் மதுரை மண்டலத்தில் உள்ள மூன்று தொ.அ.ஈ. மருந்தகங்களிலும் மற்றும் சேலம்

மண்டலத்தில் உள்ள இரண்டு தொ.அ.ஈ. மருந்தகங்களிலும் இயங்குகின்றன.

- யோகாசன பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஓசூர், சிவகாசி ஆகிய எட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன.

- யுனானி பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை ஆகிய மூன்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. கூடுதலாக யுனானி பிரிவுகள் மதுரை மண்டலத்தில் ஒரு தொ.அ.ஈ. மருந்தகத்திலும் மற்றும் சேலம் மண்டலத்தில் உள்ள இரண்டு தொ.அ.ஈ. மருந்தகங்களிலும் இயங்குகின்றன.

- சித்த மருத்துவ பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர்,

திருச்சிராப்பள்ளி, ஓசூர், சிவகாசி ஆகிய 8 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. கூடுதலாக சித்தமருத்துவப் பிரிவுகள் தாம்பரம், திருவொற்றியூர், திருபெரும்புதூர், தூத்துக்குடி, இராஜபாளையம், கோவில்பட்டி, பொள்ளாச்சி, துடியலூர், பள்ளிபாளையம், கும்பகோணம், திருவல்லிக்கேணி, ஆவடி, கொரட்டூர், திண்டுக்கல், திருநகர், உடுமலைப்பேட்டை, காட்டூர்-1, திருப்பூர்-1, ஆம்பூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 20 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களிலும் இயங்குகின்றன

- ஹோமியோபதி பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை ஆகிய 3 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. கூடுதலாக ஹோமியோபதி பிரிவுகள் மதுரை மண்டலத்தில் உள்ள

இரண்டு தொ.அ.ஈ. மருந்தகங்களில் இயங்குகின்றன.

## 6.6. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் பயன்கள்

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் தொழிலாளர் மற்றும் வேலையளிப்போரின் பங்களிப்பாக செலுத்தப்படும் நிதியானது, அவசர மருத்துவ தேவை மற்றும் பிற இடர்களின்போது காப்பீட்டாளரின் வருவாய் மற்றும் சேமிப்புகளில் கூடுதல் சுமை ஏற்படாவண்ணம் அவர்களுக்கு உதவுகின்றது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் கீழ்காணும் பல்வேறு சமூக பாதுகாப்பு பயன்களை காப்பீட்டாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் வழங்குகிறது.

### 1. மருத்துவ உதவி

தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தால் வழங்கப்படும் மிகப்பெரிய

பயன்களில் ஒன்று (அ) ஆரம்பகால சிகிச்சை (வெளி நோயாளி) மற்றும் சிறப்பு சிகிச்சை (உள் நோயாளி) (ஆ) உயர்சிறப்பு சிகிச்சை நலனாகும். இம்மருத்துவ உதவியானது காப்பீட்டாளர், காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் வேலையில் சேர்ந்த நாள் முதல் காப்பீட்டாளர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் வேலையில் இருக்கும் வரை வழங்கப்படுகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மூலம் ஆரம்பகால சிகிச்சை, சிறப்பு சிகிச்சை, உயர் சிறப்பு சிகிச்சை ஆகியவை பரவலாக அமைந்துள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் வாயிலாக அளிக்கப்படுகின்றன.

**2.** **பேறுகால உதவி**

பெண் காப்பீட்டு நபர்களுக்கு பேறுகாலத்தில் 26 வாரங்களுக்கும் (2 வாழும் குழந்தைகளுக்கு மட்டும்), கருச்சிதைவு காலத்தில் 6 வாரங்களுக்கும், 100 சதவிகித சம்பள விகிதத்தில் பேறுகால உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இப்பயன் மகப்பேறு மற்றும் கருச்சிதைவு தொடர்பான நோய்களுக்கு கூடுதலாக 30 நாட்களுக்கான மருத்துவ அறிவுரையின் பேரில் நீட்டிக்கத்தக்கது.

**3.** **சார்ந்துள்ளோருக்கான உதவி**

காப்பீட்டாளர், காப்பீடு பெறத்தக்க வேலையில் சேர்ந்த முதல் நாளிலிருந்தே, வேலை செய்யும் போது ஏற்படும் விபத்தினால் அல்லது அவர் செய்யும் தொழில் மூலம் ஏற்படும் நோயினால் இறந்துவிட்டால், அவரின்

தினசரி சராசரி சம்பளத்தில் *90* சதவீதம் அவரைச் சார்ந்தோருக்கு பண உதவி நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**4. உடல் நலமின்மைக்கான உதவி**

காப்பீட்டாளர், உடல் நலமின்றி பணிக்கு செல்ல இயலாத நிலை ஏற்படும்போது, அதிகாரமளிக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின் பேரில் உடல் நலமின்மைக்கான உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

**5. நீட்டித்த உடல் நலமின்மைக்கான உதவி**

காப்பீட்டாளர்களுக்கு நீண்டகால சிகிச்சை தேவைப்படும் குறிப்பிட்ட *34* வகையான நோய்களுக்கு, மருத்துவரால் சான்றளிக்கப்படும் சிகிச்சை காலம் வரை நீட்டித்த உடல் நலமின்மைக்கான உதவி

அதிகபட்சமாக இரண்டு வருடங்களுக்கு மருத்துவர் ஆலோசனையின் பேரில் வழங்கப்படுகின்றன.

**6. உயர்த்தி வழங்கப்படும் உடல் நலமின்மைக்கான உதவி**

குழந்தை பேறுக்கு தகுதி வாய்ந்த வயதில் உள்ள காப்பீட்டாளர்கள் வாசக்டமி / ட்யூபக்டமி போன்ற கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்து கொள்ளும் போது, உடல் நலமின்மைக்கான உதவி உயர்த்தி வழங்கப்படுகிறது.

**7. இயலாமைக்கான உதவி**

காப்பீட்டாளர்கள் பணிபுரியும் போது ஏற்படும் விபத்து மற்றும் தொழில்சார் நோய்களினால் ஏற்படும் உடல் நலக்குறைபாடுகளுக்கும் இயலாமைக்கான உதவி வழங்கப்படுகிறது.

**(அ) தற்காலிக இயலாமைக்கான உதவி**

காப்பீட்டாளர், ஈட்டுறுதி பெறத்தக்க வேலையில் சேர்ந்த நாள் முதலே, அவர் பங்களிப்பு அளித்திருந்தோலோ அல்லது அளிக்காமல் இருந்தாலோ, ஒருவேளை தற்காலிக இயலாமை ஏற்பட்டால் அவரது தினசரி சராசரி ஊதியத்தில் *90* விழுக்காடு அவருடைய தற்காலிக இயலாமை தொடரும் வரை தற்காலிக இயலாமைக்கான உதவியாக வழங்கப்படுகிறது.

**(ஆ) நிரந்தர இயலாமைக்கான உதவி**

பணியின் போது நிரந்தர இயலாமை ஏற்படின் காப்பீட்டாளருக்கு நிரந்தர இயலாமைக்கான உதவி, அவர்தம் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. தொழிலாளர், ஈட்டுறுதி பெறத்தக்க

வேலையில் சேர்ந்த நாள் முதலே இந்த உதவி பெற தகுதியுடையவராகிறார்.

**8. இறுதிச் சடங்கிற்குரிய உதவி**

காப்பீட்டாளர் இறந்துவிட்டால், அவர் ஈட்டுறுதி பெறத்தக்க வேலையில் சேர்ந்த நாள் முதலே அவரின் இறுதிச் சடங்கிற்கு ரூ.15,000/- அவரது குடும்பத்தினருக்கு பணமாக வழங்கப்படுகிறது.

**9. வேலையின்மைக்கான உதவி**

**(அ) ராஜீவ் காந்தி சிரமிக் கல்யாண் யோஜனா**

தொழிற்சாலைகள் மூடப்படுவதாலோ, ஆட்குறைப்பு செய்யப்படுவதாலோ, பணியில் இல்லாத நேரத்தில் நிரந்தரமாக இயலாமை ஏற்படுவதாலோ, சுயவிருப்பின்றி வேலை இழக்க நேரிட்டால் வேலையின்மைக்கான

உதவித் தொகை காப்பீட்டாளருக்கு வழங்கப்படும். காப்பீட்டாளர், வேலை இழப்பதற்கு முன்னர் குறைந்தபட்சம் 2 வருடம் அந்த தொழிற்சாலையில் பணிபுரிந்து தனது பங்களிப்பைச் செலுத்தியிருந்தால் அவரது ஒரு நாள் சராசரி ஊதியத்தில் முதல் 12 மாதங்களுக்கு 50 சதவீதமும் அதனை தொடர்ந்து வரும் அடுத்த 12 மாதங்களுக்கு 25 சதவீதமும் வேலையின்மைக்கான உதவியாக “ராஜீவ் காந்தி சிரமிக் கல்யாண் யோஜனா" திட்டத்தின் கீழ் அதிகபட்சம் இரண்டு வருடங்களுக்கு பெற தகுதியுடைவராகிறார்.

**(ஆ) அடல் பீமித் வ்யக்தி கல்யாண் யோஜனா**

தண்டனை, விருப்ப ஓய்வு, வேலையை விட்டு நீங்குதல், வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு, குற்றம் நிரூபிக்கப்பட்டவர் மற்றும் கதவடைப்பு போன்ற காரணங்களைத் தவிர்த்து இதர காரணங்களினால் வேலை இழந்த காப்பீட்டாளர்களுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமானது வேலைவாய்ப்பின்மைக்கான உதவித் தொகையை அளிக்கிறது.

காப்பீட்டாளர் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் பணியாற்றி, அப்பணிக்காலத்தின் 4 பங்களிப்பு காலங்களில், ஒவ்வொரு பங்களிப்பு காலத்திலும் 78 நாட்களுக்கு குறைவில்லாமல் பங்களிப்பு

செய்திருந்தால், அவரது சராசரி ஊதியத்தின் *25* விழுக்காட்டுக்கு மிகாமல் *90* நாட்களுக்கு வாழ்நாளில் ஒரு முறை மட்டும் உதவித்தொகையாக வழங்கப்படும்.

## *6.7.* தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் இதர உதவிகள்

1. வயது மூப்பு காரணமாக பணி ஓய்வு பெற்ற பின்னர் குறைந்த பட்ச தொகையாக வருடத்திற்கு ரூ.*120/-* பெற்றுக்கொண்டு காப்பீட்டாளருக்கும் அவரது வாழ்க்கைத்துணைக்கும் முதியோர் மருத்துவ வசதி அளிக்கப்படுகின்றது.

2. ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள், பல்செட்கள், மூக்கு கண்ணாடிகள் மற்றும் காது கேளாதோருக்கான கருவி போன்ற

உதவி சாதனங்கள் இத்திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படுகின்றன.

3. நோய் தடுப்பு சேவைகளான தடுப்பூசிகள், எச்ஐவி / எய்ட்ஸ் நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை அளித்தல் போன்ற வசதிகளும் வழங்கப்படுகின்றன.

4. குடும்பநலம் மற்றும் காசநோய் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கான தேசிய திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

5. காப்பீட்டாளரின் மனைவி அல்லது பெண் காப்பீட்டாளரது பிரசவம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ வசதிகள் இல்லாத இடத்தில் நடைபெற நேர்ந்தால் மருத்துவ படியாக ரூ.5,000/- அளிக்கப்படுகிறது.

## 6.8. மருத்துவமனை மேம்பாட்டுக் குழு

தொ.அ.ஈ. மருத்துவமனை மற்றும் மருந்தகங்களுக்கு, மருத்துவமனை வளர்ச்சி நிதியானது மருத்துவமனை வளர்ச்சி குழுவால் வழங்கப்பட்டு, கட்டடங்களின் சிறிய, பெரிய பழுது நீக்கி பராமரிப்பு, மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் மற்றும் பராமரிப்பு ஆகியவை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், இக்குழுவானது இரு மாதத்திற்கு ஒரு முறை கூடி, மாநில மருத்துவ அலுவலர், தொ.அ.ஈ கழகம் அவர்களால் நேரடியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## 6.9. காப்பீட்டு பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் செய்து கொண்ட மருத்துவ செலவினை திரும்ப வழங்குதல்.

### 6.9.1. செறிவுத்திட்டம் (ஒப்பந்தம் செய்து கொண்ட மருத்துவமனைகள்)

காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ சிகிச்சை

எடுத்துக்கொள்வதற்கு 159 சிறப்பு மற்றும் 19 உயர்சிறப்பு சிகிச்சை வசதி கொண்ட தனியார் மருத்துவமனைகள் செறிவுத் திட்டத்தின் கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் மருத்துவரின் பரிந்துரைகளின் பேரில் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு கட்டணமில்லா சிகிச்சை அளிக்கப்படுவதோடு, செறிவு திட்டத்தின் கீழ் உள்ள ஒப்பந்தப்படி மருத்துவமனை செலவின பட்டியல்கள் நேரடையாக நேர் செய்யப்படுகின்றன.

### *6.10.* கோவிட்-*19* நிவாரணத் திட்டம்

காப்பீட்டு நபர்கள் கோவிட்-*19* காரணமாகவோ அல்லது கோவிட்-*19* தொற்றிலிருந்து குணமடைந்து ***30*** நாட்களுக்குள் இறந்துவிட்டால், காப்பீட்டாளரின் குடும்பத்தில் உள்ள தகுதியான சார்ந்தோருக்கு, அவரது தினசரி சராசரி ஊதியத்தில் *90* விழுக்காடு வாழ்நாள் ஓய்வூதியமாக வழங்கப்படும் என தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம் அறிவித்துள்ளது.

### *6.11.* கோவிட்-*19* தொற்று காலத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

கோவிட்-*19* பரவலின் காரணமாக அயனாவரம், சிவகாசி, சேலம், வேலூர் மற்றும் ஓசூர் ஆகிய தொ.அ.ஈ மருத்துவமனைகள், கோவிட் சுகாதார பராமரிப்பு மையங்களாக *(சி.எச்.சி.சி.)* மாற்றப்பட்டு *31.07.2021* வரை *21,725* நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்துள்ளன.

கோவிட் -19 பெருந்தொற்றின் போது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி காப்பீட்டாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு மிகச் சிறந்த சேவைகளை வழங்கியதை அங்கீகரிக்கும் பொருட்டு 'பாராட்டுச் சான்றிதழ்' ஒன்றிய அரசின் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தினால், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகத்திற்கு (தொ.அ.ஈ.) வழங்கப்பட்டுள்ளது.

**சி.வி. கணேசன்**
**தொழிலாளர் நலன் மற்றும்**
**திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்**

# தொழிலாளர் துறை




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.07.2021 அன்று நலவாரியங்களில் உறுப்பினர்களாக உள்ள 50,000 அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25.06.2021 அன்று 2,00,000 கட்டுமான தொழிலாளர்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி செலுத்தும் சிறப்பு முகாமை சென்னையில் துவங்கி வைத்தார்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## (வேலைவாய்ப்பு துறை)




உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் மீதான நடவடிக்கை மூலம் தனியார் துறையில் வேலைவாய்ப்பு கோரிய ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்தவர்களுக்கு 16.07.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.




உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது தீர்வு காண்பதில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சிறப்பான பங்களிப்பினை பாராட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.08.2021 அன்று தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## (வேலைவாய்ப்பு துறை)



உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் மீதான நடவடிக்கை மூலம் தனியார் துறையில் வேலைவாய்ப்பு கோரிய சென்னை மாவட்டத்தைச் சார்ந்தவர்களுக்கு 29.06.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

## தொழிலாளர் துறை




"குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம்" குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திட தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சி.வி. கணேசன் அவர்கள் ராட்சத பலூனை பறக்கவிட்டார்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## (வேலைவாய்ப்பு துறை)




உங்கள் தொகுதியில் முதலமைச்சர் மனுதாரர்களுக்கான சிறப்புத் தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சி மூலம் வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை பெற தகுதி பெற்ற மனுதாரர்களுக்கு 14.07.2021 அன்று தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் உதவித் தொகைக்கான ஒப்பளிப்பு ஆணையை வழங்கினார்.



மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 23.07.2021 அன்று நாகப்பட்டினம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டத்தின் மாணவ மாணவியருக்கு இலவச பாடக்குறிப்பு தொகுப்புகளை வழங்கினார்.

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

**(பயிற்சி பிரிவு)**



**அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் வடகரை, சென்னை 19.07.2021 முதல் ஐடிஐகள் துவக்கம்**



**அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் உளுந்தூர்பேட்டை, கம்மியர் மோட்டார் வண்டி பிரிவு**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

**(பயிற்சி பிரிவு)**



அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் , அம்பத்தூர் பொருத்துநர் பிரிவு



அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கிண்டி, சென்னை பற்றவைப்பவர் பிரிவு